[illegible]

தமிழ் வேதமாகிய

திருக்குறள் வசனம்.

இது

கற்றோருமற்றோருமாகிய யாவருக்கும்

எளிதில் பயன்படும் பொருட்டு

தஞ்சாவூர் ஜில்லா

திருமுல்லைவாயில் ஸப்ரிஜிஸ்ட்ரார்

பு. அ. இரத்தினம்பிள்ளையால்

செய்து

சென்னை

“திரிபுரசுந்தரி யந்திரசாலையில்”

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

1909.

 [இதன் விலை ரூ. 1—0—0.

PREFACE.

Ever since the dawn of civilization, the end and aim of mankind has been the attainment of Sālvation of the Soul. Many are the paths which lead to salvation. The easiest of these is the acquisition of knowledge and such knowledge can be gained only through good books There are books and books but Thirukkural, the immortal work of Thiruvalluva Nayanar stands far and away the best of all. The elegance of the language, the purity of the expression and the loftiness of the moral sentiments expressed have given to Thirukkural a position which is altogether unique in Tamil literature The' fact that it has been translated into the languages of Europe is ample testimony to its intrinsic value as a moral code.

As many as ten commentaries have been written on the book, but of them all the best is that of Parimelalagar. In many cases however, his commentary has been found more difficult to understand than the text itself As the result of these causes only Pandits can read and understand Kural and its teachings To the majority of the Tamil knowing population therefore Kural is a sealed book. My object in writing this book has been to make it available to the masses in easy prose

I trust that the book will be found useful to boys and girls as well and by reading it through they will go better equipped for the battle of life.

Any suggestion for the improvement of the book will be thankfully accepted.

Tirumalaivasal
14—7—09

P. D. Ratnam Pillai.

SOME SELECT OPINIONS.

DEWAN BAHADUR R. RAGOONATHA ROW AVERGAL C.S.I. KUMBAKONAM, WRITES,—

I return the proof (Thirukkural Vachanam) you kindly sent me to read. * * I showed it to some Tamil Pandits. They all spoke highly of the work. I enclose the opinion of one of them.

T. S. SUBRAMANIA AIYAR ESQ. M. A. L. T. LECTURER PRESIDENCY COLLEGE, MADRAS, WRITES,—

"*** I am glad you have put your hand to something so useful as the first book in the Tamil language that deals with manifold virtues and duties of humanity. Your rendering into prose is very appropriate and easy."**

K. VAIDYANATHA IYER ESQ. B. A. KUMBAKONAM WRITES:—

*** I am glad to note you have attempted a simplified prose version of the greatest classical Tamil work the Kural, and I daresay it is laudable, for every effort made to interpret the noblest thoughts of one of our greatest sages to the children, women and men of the land, is a step in the right direction and yours, may I hope, prove of benefit in that way * * * *

கும்பகோணம்.

ஸ்ரீமான் திவான் பகதூர் ஆர். இரகுநாதராய் அவர்கள், ஸி. எஸ். ஐ. அவர்களுக்கு எழுதி யனுப்பியது.

ஐயா,

என்னிடங் கொடுத்தனுப்பிய திருக்குறளின் மொழிபெயர்ப்பிற் சில பாகம் படித்துப் பார்த்தேன். அவ்வுரை பிரயோஜனகரமானதாயும் பொருளை அநாயாஸமாக விளக்கும் எளிய நடையிற் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. ஆதலின் பலருக்கும் மிகப் பயன்படுமென்று நம்புகிறேன்.

பின்னத்தூர்
அ. நாராயணசாமி ஐயர்
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்
டவுன் ஹைஸ்கூல்.

கும்பகோணம்
22—9—09

உ

கணபதி துணை.

பால் இயல் அதிகார அகாதி.

பால் 2 இயல் 5 அதிகாரம் 108.

பொருட்பால் அதிகாரம் முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	எண்.	வரி.	பிழை.	திருத்தம்.
56	347	2	விடாம்	விடாவாம்
74	484	3	[illegible]	[illegible]
90	617	1	[illegible]	[illegible]
99	682	5	[illegible]	[illegible]
111	774	3	வேலொடு கொண்டு	வேல்கை கொண்டு
112	785	4	[illegible]	இருவருக்கும
113	796	3	கோட்டினி	கேட்டினி
136	961	[illegible]	ன்றியமை	இன்றியமை

கணபதி துணை.

முகவுரை.

உலகத்திலே விளங்கும் பலவகைப் பிறவிகளில் பெறுதற்கு அருமையான இந்த மானிடப்பிறப்பை அடைந்தவர்களுக்கு உறுதிப்பொருளாயுள்ளன, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கே. அவற்றின் குணங்களை நூல்களின் வழியே அறிதல் கூடுமென்பது யாவருமறிந்ததாம். இவ்வகைப் பல நூல்களுள்ளும் புலவோர் தங்களை உணர்த்தலில் மிகச் சிறப்புப்பெற்றது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறளே.

இந்த அரிய பெரிய நூலின் சொற்செறிவு பொருட்பொலிவு முதலிய பெருமைகளை இத்தன்மையனவென்று எடுத்துக்கூற இயலாது, இடைக்காடர்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" என்றும்

ஔவையார்

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" என்றும்

"ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளிற் பெய்தமைத்த, செம்பொருளை எம்மனோர்க்குஞ் சேட்பொருளைத்-தணகுருகூர்ச், சேயமொழிய தெனபா சிலவிரா லிவ்வுலகின், தாயமொழிய சென்மேன் தகைந்து" என்றும் புகழ்ந்துரைத்திருப்பதே இதன் பெருமைக்குப் போதுமான சான்றாம். அல்லாமலும் கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடர், சீத்தலைச்சாத்தனார் முதலிய சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் கூடி வாழ்த்திய மாலையின் சாரமே இதன் பெருமையை நன்குணர்த்தும். அதன்றியும் அந்தப்புலவர்களுக்குமுன், அசரீரியும், சரசுவதியும், உக்கிரப்பெருவழுதியும், இந்நூலாசிரியர் பெருமையையும், இந்நூலின் சிறப்பையும்பற்றி வெகுவாய்ச் சிலாகித்துப் பாடியதுமன்றிச், சிவபெருமானும் "இறையனார்" என்னும் திருநாமத்துடனே சங்கப்புலவர்களோடு ஒப்பத்தாமும் ஒரு புலவராகத் திருவுருக்கொண்டு திருக்குறளைச் சிறப்பித்துக் கூறினாரென்றால், இதன் பெருமையை எடுத்துரைக்க வல்லார்யார்? இன்னும்

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற

வள்ளுவன் றனக்கு வளர்விக்கப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

என்று கல்லாடத்தில் கூறியிருப்பதையுமறிக.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்று ஔவையார் நல்வழியில் கூறியிருத்தலால், இது வேதாந்த சித்தாந்தத்தையுணர்த்துவதென்றுணர்க.

திருவள்ளுவர், தாமே,

"குறுமுனிவன் முத்தமிழும், என்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்"

என்று அறைந்திருப்பதையும் தெளிக.

திருக்குறள் 6-ஆம் அதிகாரம் 5-ஆம் குறள்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்பதைப் பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் இருபத்திரண்டாவது சிறைசெய்காதையில்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என்று பிரயோகித்திருப்பதினால் இதற்கும், இதற்குச் சமகாலத்ததாகிய சிலப்பதிகாரத்திற்கும் முன் உண்டானதென்பது நன்கு விளங்குகிறது. இன்னும் சங்கநூல் பலவற்றுள்ளும், திருக்குறளின் கருத்துக்களும், சொற்பொருள்களும் காணப்படுகின்றன. அதன்றியும் வடமொழியில் வான்மீகம்போலத் தமிழில் திருக்குறளே ஆதியிலக்கியமென்பது சிலர் கொள்கை. இதுவும் ஒப்புக்கொள்ளத்தக்கதே.

இத்துணைச்சிறப்புப்பெற்ற இந்நூலைப் பலர் தத்தம் பாஷைகளாகிய தெலுங்கு, இங்கிலீஷ், பிராஞ்சு, லத்தீன், ஜர்மனி முதலிய பாஷைகளில் மொழிபெயர்த்துக் கொண்டாடுகின்றனர்.

இதற்கு உரை செய்தவர்கள், தருமர், மணக்குடியர், தாமத்தர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், நச்சர், பரிமேலழகர் எனப்பதின்மர். இவ்வுரைகளுள் மிகச்சிற

ப்புப்பெற்றதும், இக்காலத்தில் உலாவுவதும் ஆகியது பரிமே லழகர் உரையே. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொ கை, சீவக சிந்தாமணி, குறுந்தொகையில் (பேராசிரியர் உரை செய்யாது விட்ட) இருபது பாட்டு முதலியவற்றிற்கு உரை செய்த நச்சினார்க்கினியார், குடம்பை என்பதற்கு ஏனையோர், கூடென்று பொருள் கூறப் பரிமேலழகர் அதற்கு உயிர் மீண்டும் உட்புகுதற்கு ஏலாததாய உடன்பிறந்ததாகிய உடலோடு உவமைபொருந்த முட்டை என்று பொருளுரைத்ததைக் கேட்டு, அகமகிழ்வுற்று உடனே அவரை ஆலிங்கனம் செய்ததாகத் தெரிகிறது. சங்கச்செய்யுள்களுக்குரைசெய்வதில் மிகத்திறமை வாய்ந்த இவரே பரிமேலழகர் உரையைப் புகழ்ந்தாரென்றால், இதன் பெருமை இத்தன்மைத்தென்று நீங்களே அறிந்து கொள்ளுக.

நந்நாட்டிலுள்ளார் எல்லாராலும் திருக்குறள் ஓதப்படவில்லையென்பது யாவரும் அறிந்த விஷயமே. இதற்குக்காரணமென்னவெனில், இந்நூல் கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும் எளிதில் பயன்படும்பொருட்டு வசனநடையில் இல்லாமையே. இக்குறையை நீக்குவான்கருதி இலக்கிய இலக்கணப் பயிற்சியில்லாத சொற்பப்படிப்புள்ளவர்களும் சிறுவர் சிறுமிகளும் எளிதில் படித்துணருமாறு, பரிமேலழகருரையைத் தழுவியே மாணவராய்ப் பிறந்தவர்களுக்கு வேண்டிய விதி விலக்குகளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சில அசௌகரியங்களால் காமத்துப்பால் இதில் சேர்க்கப்படவில்லை.

இலக்கணக்கொத்து பாயிரம் 7-வது சூத்திரத்தில்
"[illegible] பழந்துறை தெரியா [illegible]
தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார்
மூன்றிலு முழங்கும்"

[illegible] உரையைத் நச்சினார்க்கினியார் என்று கொள்ளுதல் தகுதியுடையதாகத் தோன்றவில்லை. ஏனெனறல் 'பரவு கடல் போலப் பரந்த நன்னெறி [illegible] உணர்ந்த" என்று தொடங்குகிற, நச்சினார்க்கினியார் சரித்திரமுடையவர்களால் செய்யப்பட்ட சீவகசிந்தாமணி உரைச்சிறப்புப்பாயிரச் சேரிசையாசிரியப்பாவிலும் "பாரத் தொல்காப்பியமும் பத்துப்பாட்டுங் கலியும் ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்—சாரத் திருத்தகு மாமுனி செய் சிந்தாமணியும், விருத்தி நச்சினார்க்கினியமே" என்னும் பழைய வெண்பாவிலும் கூறவில்லை.

என்று இதன் ஆசிரியர் கூறியிருப்பதாலும், யான் சிற்றறிவினனாதலாலும், மறதியாலும், இது பல வேலைத்தொந்தரவின் நடுவில் எழுதப்பட்டதாலும் இதில் பல பிழைகள் இருக்குமென்றே சொல்லத்துணிவேன், அவற்றை உலகம் பொறுக்குமாறு வேண்டுகிறேன்.

யான் இதில் முயன்றிருப்பதைத் தெரிந்த என் நண்பர்கள் பலரும் இதை அச்சியற்றிச் சீக்கிரத்தில் வெளிப்படுத்துமாறு வேண்டினர். இந்நூலில் அதிக கவலைவைத்து என்னை அடிக்கடித் தூண்டிவந்த அன்பர்களுக்கு வந்தனம் செலுத்துகின்றேன்.

என் நண்பரில் சிலர் திருக்குறள் மூலத்தையும் சேர்க்கவேண்டுமெனக்கூறினர்கள். அவற்றை அடுத்த பதிப்பில் சேர்க்கலாமென எண்ணியுள்ளேன்.

யான் அனுப்பிய திருக்குறள் வசனத்தைத்தக்க சில தமிழ்ப் பண்டிதர்களிடம் காட்டி அவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டபின், அவர்களுள் ஒருவர் அபிப்பிராயமட்டும் வாங்கியளித்த கும்பகோணம் ஸ்ரீமான் திவான் பகதூர் இரகுநாதராயரவர்களின் அன்புடைமையும் பெருந்தகைமையும் என்றும் பாராட்டற்பாலனவேயாம். இக்கடிதங்கள் இரண்டும் இதில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சீகாழி ஹிந்து ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும் என்னாசிரியருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ திருவாவடுதுறை சு. பொன்னோதுவாரவர்கள், தமக்குப் பல அரிய பெரிய காரியங்களிருக்க என் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூல் முழுவதையும் பார்வையிட்டளித்த நன்றி என்றும் கொண்டாடற்பாலதேயாம்.

இந்நூல் எழுத ஆரம்பித்ததுமுதல் அச்சியற்றிமுடியுங்காறும் என்னுடனிருந்து இது விஷயத்தில் ஒப்பு நோக்குதல் முதலிய பலவுதவிகளைப் புரிந்துவந்த மகா-ள-ள-ஸ்ரீ செ. கண்ணுமணாக்காயரவர்களின் நன்றி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்றாம்.

புத்தகத்தின் சீர்திருத்தத்திற்குரித்தான விஷயங்களை வந்தனத்துடன் அங்கீகரிக்கப்படும்.

ஒன்றுக்கும் பற்றாத சிற்றறிவினனாகிய சிறியேனை இந்தமுயற்சியில் புகுத்தி நடத்தி நிறைவேற்றியருளிய எல்லாம் வல்ல எம் இறைவனின் இணையடித்தாமரைகளைச் சதா பிரார்த்திக்கின்றேன்.

திருமுல்லைவாயில்
14—7—09

வேட்டங்குடி
பு. து. இரத்தினம்.

உ

சிவசண்முகர்துணை.

திருக்குறள் வசனம்.

சிறப்புப்பாயிரம்.

சீகாழி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

மகா-ள-ள-ஸ்ரீ

சு. பொன்னுத்துரையவர்கள்

இயற்றியது.

வேட்டங் குடிவாழும் வேட்டவ ருடையுடையா
னீட்டங் கொளுமைக் களைமையின் மிக — நாட்டியிடு
முப்பத்தனாதனைப் பிளவின்றிச் சாற்றுகுறள்வசன
மெறத்துணை விளம்பிதுமே.

திருமுல்லைவாயில் செய்குசாகிபுமரைக்காயர் அவர்கள் குமாரர்

மகா-ள-ள-ஸ்ரீ

கண்ணுமரைக்காயரவர்கள்

இயற்றியது.

திருவாரூண் முற்றுந்திருவள்ளுவரே
கருவிலமையாத திருவுருக்கொண்டுண்
டிருமைவிளக்கப்பெருமைவிளக்காரு
சமயிகள்யாருஞ்சம்மதமுறவே
விதிவிலக்கெவையும்விரித்திடுவேதந்
தனக்க யோகவளக்குக்கோலா
வுசசகாவேதமொனழியற்றினை தன்பொரு
ளுய்த்துணர்திவாழுபர்ந்திடுவோராங்
கறமேறலலான்மற்றோராதிபார்
இத்திறம்பூண்டவியற்கையினுமேலே
மனபனைத்தெளியுமாண்பினையோர்ந்தே
நாட்டேன்மலர்க்காகோட்டுறுகடுவன்
தேறநகீண்டிடகதேசகுமப்பெருக்காற்
பைங்கூழ்செழிக்கப்பயர்பலவளங்கள்
கூட்டஞ்செயணிடு வேட்டங்குடிவாழ்

காமனும்விரும்புங்கவினெடும்பொறைகொள்
காமிப்பிள்ளைகாதல்கொள்புதல்வனும்
அருளொடுகல்வியறிவுடையோனும்
எப்பாவலருமியம்பிடுவோனுமா
மிரத்தினம்பிள்ளையென்றநற்புலவன்
கல்லாரெல்லாநல்லோராகப்
பல்காற்பழகவிலகாநெறியாம்
வேதமிஃதேயென்றுபயின்று
கல்விக்கடலைக்கடந்திடுந்தன்மைவாய்
திருக்குறள்வசனத்தீந்தமிழ்நாவாய்
தன்னையின்றியற்றித்தகைமையுற்றானே.

நன்னிலம் தாலூகா
பில்லாலி
மகா-ள-ள-ஸ்ரீ
வீரராகவப்பிள்ளை யவர்கள்
இயற்றியது.

படியிலாத் திருக்குறள்வெண் பாவதற்குப் பரிமேலா
மழகன் செய்த
வடிவுலா முரையதற்கு மாறுகொளா வசனவுரை
வயங்கச் செய்தான்
மிடியிலா வளம்பெறுநற் புதுவைநகர் மேயதிருக்
காமிப் பிள்ளை
குடியெலாம் புரக்குமவன் பயந்தகுலக் கொழுந்
தனைய குமாரவேளே.

முருகன் துணை.

திருக்குறள் வசனம்.

அறத்துப்பால் Virtue.

பாயிரம்.

முதல் அதிகாரம்.

கடவுள் வாழ்த்து.

The Praise of God.

[அதாவது கவிசெய்வோர் தாம் குலதெய்வமாகக் கொண்டு ஆராதிக்கப்படுகிற கடவுளையாவது, அல்லது தாம் செய்யத் தொடங்கிய நூலில் சொல்லப்படும் விஷயத்திற்குத் தகுதியுடைய கடவுளையாவது வாழ்த்துதல். அவைகளுள் இது இரண்டாவதாகச் சொல்லப்பட்டது.]

1. எழுத்துக்களெல்லாம் அகரம் என்னும் எழுத்தை முதலாக உடையன. அதுபோல உலகம் கடவுளை முதலாக உடையது. (1)

2. எல்லா நூல்களையும் கற்றவர்கள் உண்மையான அறிவினையுடையவனது நல்ல பாதங்களை வணங்காவிட்டால், அவர்கள் அடைந்த கல்வி அறிவினால் உண்டாகிய பிரயோசனம் ஒன்றுமில்லை. (2)

3. அன்பரின் நெஞ்சமாகிய தாமரை மலரிடத்துச் சென்றவனின் மாட்சிமை பொருந்திய அடிகளைச் சேர்ந்தவர், எல்லா உலகங்களுக்கும் மேலான உலகத்திலே அழிவில்லாமல் எக்காலத்திலும் வாழ்வார். (3)

4. ஒரு பொருளினிடமும் விருப்பு, வெறுப்பு இல்லாதவனது பாதங்களைச் சேர்ந்தவருக்கு, எப்பொழுதும் பிறவித்துன்பங்கள் இல்லை. (4)

5. மயக்கத்தினால் உண்டாகின்ற நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும், இறைவனின் உண்மையான புகழை விரும்பினவரிடத்து உண்டாகா. (5)

6. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக உடைய ஐந்து ஆசைகளையும் அறுத்தவனது உண்மையான ஒழுக்க வழியிலே வழுவாது நின்றவர், பிறப்பு இல்லாமல் எக்காலத்திலும் ஒரே தன்மையராய் வாழ்வார். (6)

7. ஒருவிதத்திலும் தனக்கு ஒப்பில்லாதவனது பாதங்களைச் சேர்ந்தவர்க்கு அல்லது, மனதிலே உண்டாகின்ற துன்பங்களை நீக்குதல் உண்டாகாது. (7)

8. தருமக்கடலாகிய கடவுளது திருவடியாகிய மரக்கலத்தைச் சேர்ந்தார்க்கு அல்லாமல், அதனின் வேறாகிய கடல்களை நீந்துதல் கூடாது. (8)

9. சடதமக்கு ஏற்ற புலன்களைக் கொள்ளுதல் இல்லாத பொறிகள் போல, எட்டு வகைப்பட்ட குணங்களை உடையவனின் பாதங்களை வணங்காத்தலைகள் பிரயோஜனப்படுவன அல்ல.

எண்குணங்களாவன:— தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனவாம். அல்லாமலும அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்று சிலர் கூறுவர். கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை, அழியாவியல்பு முதலிய எட்டும் என்று சமணர் கூறுவர். (9)

10. கடவுளின் பாதமாகிய மரக்கலத்தைச் சேர்ந்தவர்கள் பிறவியாகிய பெரிய சமுத்திரத்தை நீந்துவார்கள். அதனைச் சேராதவர்கள் நீந்தமாட்டார்கள். (10)

2-ஆம்-அதி-வான்சிறப்பு.

The excellence of Rain.

[அதாவது கடவுளுடைய கட்டளையால் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம், பொருள், இன்பம் முதலியவைகளும் நடத்தற்குக் காரணமாகிய மழையின் சிறப்பைச் சொல்லுதல்.]

11. மழை இடைவிடாது நிற்க, உயிர்களானவை நிலைபெற்று வருகையினாலே, அந்த மழை உயிர்களுக்கு அமிர்தமென்று அறியப்படும் தன்மையை உடையது. (1)

12. மழையானது உண்பவர்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி, அந்த உணவுகளை உண்பவருக்குத் தானும் உணவாய் நிற்பது. (2)

13. மழையானது பெய்யவேண்டுங்காலத்துப் பெய்யாமல் பொய்க்குமானால், கடலால் சூழப்பட்ட இந்தப் பெரிய உலகத்தினுள் பசி நிலைபெற்று உயிர்களை வருத்தும். (3)

14. மழை என்கிற வருவாய் தன்பயன் குறைந்தால், உழவர் ஏர் உழார். (4)

15. பூமியிலேவாழ்வாரைப் பெய்யாது நின்றுகெடுப்பதும் அந்தப்படி கெட்டார்க்குத் துணையாய் நின்று பெய்து முன்கெடுத்ததுபோலவே எடுப்பதும் முதலிய இவையெல்லாம் செய்யவல்லது மழை. (5)

16. மேகத்தினின்றும் துளிகள் விழாதானால், அப்பொழுதே பசும் புல்லின தலையையும் பார்த்தலரிது. (6)

17. நீண்டகடலும் மேகம் தான் அதனிடத்துப் பெய்யாவிட்டால், தன் இயல்பு குறையும். (7)

18. மழைபெய்யாமல் போனால் தேவர்களுக்கும் இந்த உலகத்திலே மனிதர்களால் செய்யப்படுகிற திருவிழாவுடனே பூசையும் நடவாது. (8)

19. மழைபெய்யாவிட்டால் பெரிய இந்த உலகத்திலே தானமும் தவமும் ஆகிய இரண்டு தருமமும் உண்டாகா. (9)

20. எவ்வகை மேன்மை உடையோர்க்கும் ஜலம் இல்லாமல் உலகியல் நடவாதாதலால், மழை இல்லாமல் நீர் ஒழுக்கமும் பொருந்தாது. (10)

3-ஆம்-அதி-நீத்தார் பெருமை.

The greatness of Ascetics.

[அதாவது முற்றுந்துறந்த முனிவர்களது பெருமையைச் சொல்லுதல்.]

21. நூல்களின் நிச்சயமானது, தமக்கு உரிய ஒழுக்கத்திலே நின்று துறந்தவரது பெருமையை மேலான பலபொருள்களுள்ளும் இதுவே மேலானதென்று விரும்பும். (1)

22. அகங்காரம் மமகாரம் ஆகிய இருவகைப் பற்றினையும் விட்டவரது மகிமையை, எண்ணிக்கையினாலே சொல்லித் தெரிந்துகொள்ள விரும்பினால், அது இவ்வுலகத்தில் பிறந்து இறந்தவரை எண்ணி இத்தனைபேர்களென்று கணக்கிடப் புகுந்தாற் போலும். (2)

23. பிறப்பு, வீடு என்னும் இரண்டினது தன்மையும், இனையார் என்கிற இருவகைக் கூறுபாடுகளை ஆராய்ந்து அந்தப்பிறப்பை நீக்குதற்கு, இந்தப்பிறப்பிலே துறவறத்தைக்கொண்டவருடைய பெருமையே உலகத்தில் உயர்ந்தது. (3)

24. அறிவு என்னும் அங்குசத்தினாலே, பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலன்களின்மேல் செல்லாமல் காப்பவன், எல்லா நிலங்களினும் மேலானதென்று சொல்லப்படுகிற மோக்ஷநிலத்துக்கு ஒரு வித்தாவான். (4)

25. புலன்களில் செல்லுகின்ற ஐந்து ஆசைகளையும் ஒழித்தவனது வல்லமைக்கு, விசாலமான தேவலோகத்திலுள்ள தேவர்களுக்குத் தலைவனான இந்திரனே போதுமான சாக்ஷி.* (5)

26. ஒத்த பிறப்பினர் ஆகிய மனிதர்களுள் பெரியோர் செய்தற்கு அரியவைகளைச் செய்வார், சிறியோர் செய்தற்கு அருமையானவைகளைச் செய்யமாட்டார். (6)

27. உலகமானது, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்பட்ட ஐந்து பொறிகளுடைய புலத்தின் கூறுபாட்டை ஆராய்பவன் அறிவினிடத்ததே. (7)

28. பயன் நிறைந்த சொல்லை உடைய முனிவரது மகிமையை, இவ்வுலகத்தில் அவர் ஆஞ்ஞையாகச் சொல்லிய மந்திரங்களே பிரத்தியக்ஷமாகக் காட்டிவிடும். (8)

---

* இந்திரிய நிக்கிரகம் செய்யாத இந்திரன் இந்திரிய நிக்கிரகம் செய்துள்ள கௌதம முனிவருடைய மனைவி அகலிகையை வஞ்சனையாகப் புணர்ந்து அந்த முனிவரால் "ஆயிரம் மாதர்க்குள்ள குறி" தன் உடம்பில் உண்டாகச் சாபம் அடைந்தது இவ்விடத்தில் அறியத்தக்கது.

29. துறவு, மெய்யறிவு, ஆசையில்லாமை முதலாய நற்குணங்களாகிய மலையின்மேலே ஏறி நின்ற முனிவரது கோபமானது, தான் உள்ள அளவு க்ஷணகாலமாயினும் கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் கூடாது. (9)

30. எல்லா உயிர்களின்மேலும் செவ்வையான அருளை ரதமாகக்கொண்டு நடக்கையினாலே, அந்தணர் என்று சொல்லப்படுவோர் துறவறத்தில் நின்றவரே. (10)

4-ஆம்-அதி-அறன் வலியுறுத்தல்.

ssertion of the Strength (Domestic Virtue) of Virtuo.

[அதாவது அந்த முனிவரால் தெரிவிக்கப்பட்ட மூன்றுள் அறமாவது மற்றைய பொருள் இன்பம் போலாகாமல், இம்மை, மறுமை, வீடு என்கிற மூன்றையும் கொடுத்தலால் அவற்றினும் வலிமை உடையது என்று சொல்லுதல்.]

31. அறம் மோக்ஷத்தையும் சுவர்க்கம் முதலாகிய செல்வத்தையும் கொடுக்கும். ஆகலால் மனித உயிருக்குத் தருமத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பெருக்கத்தைக் கொடுப்பது ஒன்றும் இல்லை. (1)

32. ஒருவனுக்குத் தருமம் செய்கையைப் பார்க்கிலும் மேற்பட்ட பெருக்கத்தைக் கொடுப்பதும் இல்லை; அந்தத் தருமத்தை மயக்கத்தால் மறந்து விடுதலின் மேற்பட்ட கேட்டைத் தருவதும் இல்லை. (2)

33. தமக்குச் சமர்த்துக் கூடிய வகையால் தருமம் ஆகிய வினையை இடைவிடாமல் அது செல்லும் இடங்களில் எல்லாம் செய்யக்கடவர். (3)

34. தருமம் செய்பவன் தன் மனத்தினிடத்துக் குற்றமில்லாதவனாகக்கடவன். தருமமாவது அவ்வளவே. அது நீங்கிய சொல்லும் வேஷமும் தருமம் என்று சொல்லப்படுவன அல்ல. அதனால் ஆடம்பரகுணத்தை உடையன. (4)

35. பிறர் செல்வத்தில் பொறாமையும், ஐம்புலன்கள் மேற்செல்லும் ஆசையும், அவை காரணமாகப் பிறர் மேல் உண்டாகிற கோபமும், அதுபற்றி வருகின்ற கடுஞ்சொல்லும் ஆகிய

இந்த நான்கினையும் கடிந்து ஒழிவில்லாமல் நடந்ததே தருமம் எனப்படும். (5)

36. நாம் இப்போது இளையோம் ஆதலால் இறக்கும் பொழுது தருமஞ் செய்வோமென்று நினையாமல், நாடோறும் செய்யக்கடவர். அந்தப்படி செய்யப்பட்ட தருமமானது உடம்பினின்று உயிர்போம் காலத்து அந்த உயிர்க்கு அழியாத்துணையாய் உள்ளது. (6)

37. தருமத்தின் பயன் இத்தன்மை உடையதென்று சாஸ்திர பிரமாணத்தினால் தெரிவிக்கவேண்டியதில்லை. பல்லாக்கை எடுப்பவனோடு ஏறுபவனிடத்துப் பிரத்தியக்ஷப்பிரமாணத்தினாலேயே அறிந்துகொள்ளலாம். (7)

38. ஒருவன் தருமம் செய்யாது கழியும் நாள் உண்டாகாமல் தருமத்தைச் செய்வானானால், அந்தச்செய்கை அவன் சரீரத்தோடு கூடி வாழுநாளது வரும வழியை வராமல் அடைக்கும் கல்லாம். (8)

39. ஒருவன் தன் மனைவியோடு பொருந்தி வரும் இன்பமே இன்பமாகும். பிறன் மனைவியோடு கூடிவருவன எல்லாம் இன்பமாயினும், துன்பத்துள் சேர்வன. அன்றியும் புகழையும் உடையன அல்ல. (9)

40. ஒருவனுக்குச் செய்யத்தக்கது நல்வினையே; செய்யத்தகாதது தீவினையே. (10)

(பாயிரம் முற்றிற்று)

திருக்குறள் வசனம்.

இல்லற இயல்.

Domestic Virtue

[இல்லறமாவது இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லப்படுகிறவழியிலே நின்று அதற்குத்துணையாகிய கற்பு வாய்ந்த மனையாளோடு சேர்ந்து நடத்தப்படுவதாம்.]

5-ஆம்-அதி-இல்வாழ்க்கை.

Married life.

[அதாவது மனையாளோடு கூடிவாழ்தலின் சிறப்பு.]

41. இல்லறத்தோடு கூடி வாழ்வான் என்று சொல்லப்படுவோன், அறத்தன்மையுடைய பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் மூவர்க்கும் அவரது நல் ஒழுக்க வழிகளில் நிலைபெற்ற துணையாவான். (1)

42. அடைக்கலமாக இருந்தவர்களால் விடப்பட்டுக் கதியில்லாதவருக்கும், தரித்திரமடைந்தவர்க்கும் ஒருவருமே இல்லாமல் வந்து இறந்தவர்க்கும் இல்வாழ்வானே துணையாவான். (2)

43. இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாவது, பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்து இடத்தும் செய்யப்படுகிற தருமவழியை வழுவாமல் செய்தலே. (3)

44. பொருள் சம்பாதிக்குங்காலத்துப் பாவத்துக்கு அஞ்சிச் சம்பாதித்தலும், அப்படிச்சம்பாதிக்கப்பட்ட பொருளை முன்சொல்லப்பட்ட துறந்தவர், வறியவர், இறந்தவர் முதலிய மூவர்க்கும், பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார் முதலிய நால்வருக்கும், பகுத்துத்தான் உண்டலையும் ஒருவனுடைய இல்வாழ்க்கை உடைத்தானால், அவன் சந்ததியானது ஒருநாளும் குறைதல் இல்லை. (1)

45. ஒருவன் இல்வாழ்க்கையானது தன் மனைவியிடத்துச் செய்யத்தகும் அன்பினையும், பிறருக்குப் பகுத்திட்டு உண்ணுதலாகிய தருமத்தினையும் உடைத்தானால், அதானது அந்த இல்வாழ்க்கைக்குக் குணமும் பிரயோசனமும் ஆம். (5)

46. ஒருவன் இல்வாழ்க்கையைத் தரும வழியில் நடத்துவானானால், அவன் அதற்கு வேறாகிய வழியிலே (மனைவியை விட்டுக் காட்டுக்குச் செல்லும் நிலையிலே) போய் அடையும் பிரயோசனம் ஒன்றுமில்லை. (6)

47. இல்வாழ்க்கையிலே நின்று அதற்கு உரித்தான இயல்போடு கூடி வாழ்வான் என்று சொல்லப்படுவோன், ஐம்புலன்களையும் விட முயற்சி செய்வார் (தவஞ்செய்வார்) எல்லாரையும் பார்க்கிலும் மேம்பட்டவனாவான். (7)

48. தவஞ் செய்வோரையும் தமது வழியிலே நடக்கச்செய்தலானும் தன் அறத்தினின்றும் வழுவாத இல்வாழ்க்கையானது, தவஞ் செய்வாருடைய நிலைமையைப் பார்க்கிலும் பொறுமையுடையது (8)

49. இல்லறம் துறவறம் என்று சொல்லப்பட்ட இருவகை அறங்களுள், நூல்களால் அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. மற்றைய துறவறமும் பிறன் பழிப்பது இல்லாதிருந்தால் அந்த இல்வாழ்க்கையோடு ஒரு தன்மையாக நன்று. (9)

50. இல்வாழ்க்கையோடு கூடி அதன் நெறியிலே வாழ்பவன் பூவுலகத்தானானாலும், தேவலோகத்திலிருக்கிற தேவருள் ஒருவனாக வைத்து எண்ணி மதிக்கப்படுவான். (10)

6-வது-அதி-வாழ்க்கைத்துணை நலம்.

The goodness of the help to Domestic life.

[அதாவது இல்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளுடைய நன்மை.]

51. இல்லறத்துக்குத் தக்க, துறந்தவரை உபசரித்தலும், விருந்து செய்தலும், வறியவர்பால் அருளுடைமையும் ஆகிய நற்குணங்களும், வந்த பொருளின் அளவு தெரிந்து காப்பாற்றி வைத்தலும், உலக நடக்கையில் வல்லமையும், உபகாரம் செய்தலும் ஆகிய நற்செய்கைகளையும் உடையவளாகித் தன்னைக் கொண்டவனது வாழ்க்கையின் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்பவளே இல்வாழ்க்கைக்குத் துணையாவாள். (1)

52. முன் சொல்லப்பட்ட நற்குண நற்செய்கைகள் ஒருவன் மனையாளிடத்து இல்லையானால் அந்த இல்வாழ்க்கையானது

செல்வத்தால் எவ்வளவு சிறப்புடையதாயிருந்தாலும் அந்தச்சிற
ப்பை உடையது அன்று. (2)

53. ஒருவனுடைய மனைவி நற்குண நற்செய்கைகள் உடை
யளாயிருந்தால், இல்லாதது யாது? அந்த மனைவி நற்குண நற்செ
ய்கைகள் இல்லாதவளாகில், உள்ளது யாது? (3)

54. ஒருவன் பெறுதற்கு அரிதான பொருள்களுள் கற்பு
என்னும் கலங்கா நிலைமை உள்ள மனைவியைப் பார்க்கிலும் உயர்
வாகிய பொருள்கள் எவை இருக்கின்றன? (4)

55. பிறதெய்வத்தை வணங்காளாகித் தனது தெய்வமாகிய
கணவனைத் தொழுது நித்திரை விட்டு எழுந்திருப்பவள் பெய்
யென்று சொல்ல மழை பெய்யும். (5)

56. கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காப்பாற்றிக்கொ
ண்டு, கொண்ட கணவனையும் உண்டி முதலானவற்றால் உபசரி
த்துத், தம்முடைய இருவர் இடத்தும் நன்மை அமைந்த புகழை
நீங்காமல் பாதுகாத்து, நற்குண நற்செய்கைகளை மறவாதவளே
மனைவியாவள். (6)

57. பெண்டிர் மனதைக் கற்பின் வழியிலே நிறுத்தித் தம
மைக் காக்கும் காவலே முதன்மையான காவலாயிருக்கையில், மதி
ற்காவல் வாயிற்காவல் முதலிய சிறையினாலே காக்கும் காவலா
னது என்ன பிரயோசனத்தைச் செய்யும்? (7)

58. பெண்டிர் தம்மைக் கொண்ட கணவனைப் பூசித்தல்
பெற்றால், அவர் தேவர் வாழ்தற்கு இடமாகிய சுவர்க்க லோகத்தி
ல் தேவரால் செய்யப்படும் பெரிய சிறப்பினை அடைவர். (8)

59. புகழை விரும்பிய மனையாளை இல்லாதவர்க்குத் தம்
மை இகழ்ந்து பேசும் பகைவர் முன் ஆண் சிங்கம் போலும்
பெருமிதமான நடை இல்லை. (9)

60. அறிந்தோர், மனையாளது நற்குண நற்செய்கைகளை
ஒருவனுக்கு நன்மை யென்றும், நல்ல புதல்வரைப் பெறுதலை
அவற்றிற்கு நல்ல ஆபரணம் என்றும் சொல்லுவர். (10)

7-ஆம்-அதி புதல்வரைப் பெறுதல்

The obtaining of Sons.

[அதாவது முனிவர் கடன் கேள்வியாலும், தேவர் கடன் வேள்வியாலும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாலும் அல்லாமல் செலுத்தக்கூடாமையால், அந்தக்கடன் செலுத்தற் பொருட்டு நல்ல மக்களைப் பெறுதல்.]

61. ஒருவன் அடையும் சிறப்புகளுள் அறியவேண்டுமவைகளை அறிந்த உரிய மக்களைப் பெறுதல் அல்லது இதர சிறப்புகளையாம் மதிப்பது இல்லை. (1)

62. பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களை உடைய மக்களை ஒருவன் பெறுவானானால், வினைவசத்தால் பிறக்கும் பிறப்புகளேழிலும், அவனைத் துன்பங்கள் சென்று அடையா. (2)

63. புதல்வர்கள் சம்பாதித்த பொருள்கள் தம்மைத் தந்த அவன் செய்யும் நல்வினையாலே தம்மிடத்து வருதலால், அறிந்தோர் தம்முடைய மக்களைத் தம்முடைய பொருள்கள் என்று சொல்லுவர். (3)

64. தம்முடைய மக்களுடைய சிறிய கைகளால் அளையப்பட்ட சோறானது, சுவையில் மிகுந்த அமிர்தத்தைப் பார்க்கிலும் மிகவும் இனிமை உடையதாய் இருக்கும். (4)

65. ஒருவனது உடம்புக்கு இன்பமாவது தம்முடைய மக்களது உடம்பைத் தொடுதல், அவனது காதுக்கு இன்பமாவது அவரது சொற்களைக் கேட்குதல். (5)

66. தம்முடைய புதல்வரது குதலைச் சொற்களைக் கேளாதவர், குழலின் இசை இனிதென்றும் வீணையின் இசை இனிதென்றும் சொல்லுவார். (6)

67. தகப்பன், தன் புதல்வனுக்குச் செய்யத்தகும் நன்றியாவது கற்றவர்கள் அடங்கிய சபையினிடத்து அவர்களைப் பார்க்கிலும் மேற்பட்டிருக்கக்கல்வியுடையவனாகச் செய்தலாம். (7)

68. தம்மக்களுடைய அறிவுடைமையாவது பெரிய நிலத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கு எல்லாம், தமக்கு இனிமையாதலினும் இனிதாயிருக்கும். (8)

69. தன்மகனைக் கல்வி கேள்விகளினால் நிறைந்தோன் என்று அறிவுடையோரால் சொல்லக் கேட்டதாய், பெற்ற காலத்தில் தனக்கு உண்டான மகிழ்ச்சியைப் பார்க்கிலும், மிக மகிழ்வாள். (9)

70. தன்னைக் கல்வி யுடையவனாகச் செய்த தகப்பனுக்கு, மகன் செய்யும் எதிர் நன்றியாவது, தன் அறிவையும் ஒழுக்கத்தையும் கண்டோர், இவன் தகப்பன் இவனைப் பெறுதற்கு என்ன தவத்தைச் செய்தானோ என்னுஞ் சொல்லை உண்டாக்குதலாம். (10)

8-ஆம்-அதி அன்புடைமை

The Possession of Affection.

[அதாவது அந்த மனைவி புதல்வர் முதலாகிய சம்பந்தம் உடையாரிடத்து ஆசையுடையவனாயிருத்தல்]

71. தம்மால் அன்புசெய்யப் பெற்றவருடைய துன்பம் கண்டவுடனே பெருகின்ற அன்புடையாருடைய புலம்பு கண்ணீரே உள்ளே இருக்கின்ற அன்பினை எல்லாரும் அறியப் பண்ணுதலால் அன்பினைப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழும் உண்டோ? (1)

72. அன்பிலாதவர் பிறர்க்குப் பயன் படாமையால் எல்லாப் பொருள்களாலும் தமக்கே யுரியராவர்; அன்புடையார் அவைகளால் மாத்திரம் அல்லாமல் தம் எலும்பையும் பிறருக்குக் கொடுக்க உரியராவர். (2)

73. பெறுதற்கு அரிய மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்துவதற்கு வந்த வழியின் பயனென்றும் அறிந்தோர் சொல்லுவர். (3)

71. சம்பந்தமுடையவரிடத்தே செய்யப்பட்ட அன்பானது அந்தத் தன்மையினாலே பிறரிடத்து ஆசையை உடையவனாயிருக்கையை ஒருவனுக்குக் கொடுக்கும். அந்த இருக்கையானது இவனுக்கு யாவரும் நட்பினரென்று சொல்லப்படுகிற அளவில்லாச் சிறப்பைத் தரும். (4)

75. இந்த உலகத்திலே இல்வாழ்க்கையிலே நின்று இன்பத்தை அனுபவித்தவராகி, அதன் பின்னர் தேவலோகத்தில்

சென்று அடையும் பேரின்பத்தினை, அன்பு உடையராகி இல்லறத்தோடு பொருந்திய வழியின் பயனாகுமென்று அறிந்தோர் சொல்லுவர். (5)

76. அறியாதவர் சிலர் அன்பானது தருமத்திற்கே துணையென்று கூறுவர். அந்த அன்பே பாவத்தை நீக்குவதற்கும் துணையாவது. (6)

77. எலும்பு இல்லாத உடம்பை வெயிலானது சுடுதல போல அன்பில்லாத உயிரை அறக்கடவுள் சுடுவார். (7)

78. மனத்தின்கண் அன்பில்லாத உயிரானது இல்லறத்தோடு கூடி வாழ்தலாவது கடினமான நிலத்திலே காய்ந்த மரமானது தளிர்த்தாற் போலும். (8)

79. உடம்பினகத்திலே நின்று இல்லறத்துக்கு அங்கமாகிய அன்பு இல்லாதவர்க்கு இடம், பொருள், ஏவல முதலிய புற உறுப்புக்களெல்லாம் அந்த அறம் செய்தலிலே என்ன உதவியைச் செய்யும்? (9)

80. அன்பு முதலாக அதன் வழி நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அந்த அன்பில்லாதார்க்குள்ள உடம்புகளானவை எலும்பைத் தோலினாலே போர்க்கப்பட்டனவே ஒழிய உயிர் நின்ற உடம்பு ஆகாது. (10)

9-ஆம்-அதி விருந்து ஓம்பல்.

Cherishing Guests; Hospitality.

[அதாவது விருந்தினரை உபசரித்தல்.]

81. மனைவியோடு கூட காட்டுக்குச்செல்லாமல வீட்டிலே இருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழ்வது எல்லாம், விருந்தினரை உபசரித்து உபகாரம் செய்வதற்கேயாம. (1)

82. சாப்பிடும் பொருள் அமிர்தமாயிருந்தபோதிலும் தன்னை நோக்கி வந்த விருந்தினர் தன் வீட்டில் ஒருபுறத்திலிருக்கத் தானே அதனை உண்ணுதல் விரும்பத்தக்கது அன்று. (2)

83. தனவிடத்து வந்த விருந்தினரைத் தினந்தோறும் உபசரிப்பவனுடைய இல்வாழ்க்கையானது, தரித்திரத்தால் வருந்திக்கெடுதல் அடையாது. (3)

84. முகம் மலர்ந்து நல்ல விருந்தினரைக் காப்பவனுடைய வீட்டிலே, இலட்சுமி மனமகிழ்ந்து வாழ்ந்துகொண்டிருப்பாள். (4)

85. தன்னை நோக்கி வந்த விருந்தினரை முன்னே சாப்பிடச்செய்து, பாக்கியைப் பின் உண்பவனுடைய விளை நிலத்துக்கு விதை இடுதலும் வேண்டுமோ? வேண்டுவது இல்லை. (5)

86. வந்த விருந்தினரை உபசரித்துப் பின் வரும் விருந்தினரை எதிர்பார்த்துத் தான் அவரோடு சாப்பிட இருப்பவன மறுபிறப்பிலே தேவனுய்த் தேவர்களுக்கு மேன்மையான விருந்தினராவான. (6)

87. விருந்தினரை உபசரித்தலாகிய யாகத்தின் பிரயோஜனம் இவ்வளவு அளவு என்பதாகிய ஓர் அளவு உடையது அன்று. விருந்தினருடைய மகிழ்ச்சி அளவே அதற்கு அளவாகும். (7)

88. நிலையில்லாப் பொருளைக் கொண்டு விருந்தினரை உபசரித்து அந்த யாகத்தின் பயனை அடையும் அறிவில்லாதவர், அந்தப் பொருளை வருந்திக்காத்துப் பின்பு அதனை இழந்து இப்பொழுது பற்றில்லாதவரானோமென்று வருந்தப்படுவார். (8)

89. செல்வம் இருக்கும்பொழுதே தரித்திரமாவது, விருந்தினரை உபசரிக்காமல் இகழ்தல், அறிவில்லாமையாகும். இது பெரியோரிடத்து இல்லை. அறிவில்லாதவரிடத்துண்டு. (9)

90. அனிச்சப்பூ மோந்தால் அல்லாமல் வாடாது. விருந்தினரோ அப்படி இல்லாமல முகம் வேறுபட்டுப் பார்க்க வாடுவர். (10)

10-ஆம்-அதி இனியவை கூறல்.

Kindly Speech.

[அதாவது மனத்திலுள்ள சந்தோஷத்தை வெளிப்படுத்துகிற இனிமையான சொற்களைச் சொல்லுதல]

91. இனிமையான சொற்களாவன அன்போடுகலந்து வஞ்சனை இல்லாமலிருக்கிற தருமத்தை அறிந்தவருடைய வாயினின்றும் உண்டாகும் சொற்களாம். (11)

92. பார்த்த பொழுதே முகமலர்ந்து இனிய சொல்லை உடையவனாய் இருந்தால், மன மகிழ்ந்து ஒருவருக்கு வேண்டும் பொருளைக் கொடுப்பதைப் பார்க்கிலும் நல்லதாம். (2)

93. கண்டபொழுதே முகத்தால் விரும்பி, இனிமையாகப் பார்த்து, பின் வந்தபொழுது மனது உடையவனாய், இனியசொற்களைச் சொல்லுவதே தருமமாம். (3)

94. எல்லாரிடத்தும் இன்பத்தை உண்டாக்கும் இனிய சொல்லை உடையவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும் வறுமையானது இல்லை. (4)

95. ஒருவனுக்கு ஆபரணமாவது பெரியோரிடத்து வணக்கமுடையவனாகவும், எல்லாரிடத்திலும் இனியசொல்லை உடையவனாகவும் இருக்கிறதேயாம். இந்த இரண்டும் அல்லாமல் உடம்பில் அணியும் மற்றவை ஆபரணங்கள் ஆபரணங்களாகாவாம். (5)

96. பொருளினாலே பிறர்க்கு நன்மையைக் கொடுக்கும் சொற்களை மனத்தினாலே ஆராய்ந்து, இனிமையாக ஒருவன் சொல்லுவானானால், அவனுக்குப் பாவங்கள் தேய தருமம் வளரும். (6)

97. பொருளால் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமையான குணத்தினின்று நீங்காத சொற்கள், ஒருவனுக்கு இப்பிறப்பில் நீதியையுமுண்டாக்கி மறு பிறப்பில் தருமத்தையும் கொடுக்கும். (7)

98. பொருளால் பிறர்க்குத் துன்பஞ் செய்யாத இனியசொல், ஒருவனுக்கு மறுபிறப்பிலும் இப்பிறப்பிலும் இன்பத்தைக் கொடுக்கும். (8)

99. அநேகர் சொல்லிய இன்பச்சொல் தனக்கு இன்பம் கொடுத்தலை அனுபவித்து அறிகிறவன், அந்தச்சொல்லைப் பேசுவதை விட்டுப் பிறரிடத்துக் கடுஞ்சொற்களைச் சொல்லுவது என்ன பிரயோஜனத்தைக் குறித்து! (9)

100. தருமத்தை உண்டாக்கும் இனிய சொற்களும் தன்னிடத்தே உண்டாயிருக்க, அவற்றைச் சொல்லாமல் பாவத்தை உண்டாக்கும் கடுஞ் சொற்களை ஒருவன் சொல்லுதல், இனிய பழங்கள் இருக்க அவற்றைத் தின்னாது, இனிமையில்லாத காய்களைத் தின்பதற்கு ஒப்பாகும். (10)

11-ஆம் அதி செய்ந்நன்றியறிதல்.

Gratitude.

[அதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை.]

101. தனக்கு முன் ஒரு உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்குப் பூலோகத்தையும் தேவலோகத்தையும் சமமாகக் கொடுத்தாலும் ஈடாகாது. (1)

102. ஒருவனுக்கு முடிவு வந்த காலத்திலே ஒருவன் செய்த உபகாரம் சிறிதாக இருந்தபோதிலும், அந்த காலத்தை நோக்கப் பூலோகத்தைப் பார்க்கிலும் மிகப்பெரிது. (2)

103. தாம் செய்யும் உதவியை அடைவோராலே, தமக்குப் பின்வரும் பிரயோஜனத்தை ஆராயாது செய்த உதவியின் நன்மை, சமுத்திரத்தைப் பார்க்கிலும் பெரிது. (3)

104. பெரியோர், தமக்குத் தினையளவு உதவி ஒருவன் செய்தாலும், அதனை அவ்வளவாக நினையாமல், பனையளவாக நினைப்பார். (4)

105. பிரதி உதவியானது காரணமும், பொருளும், காலமும் ஆகிய மூன்று வகையாலும் முன் செய்த உதவியளவினது அன்று. அவ்வுதவி செய்யப் பெற்றுக்கொண்டவருடைய மகிழ்ச்சி யளவேயாம். (5)

106. ஒருவன் துன்பகாலத்தில் தனக்கு உதவியானவனுடைய சிநேகத்தை விடாதிருக்கக் கடவன். குற்றம் இல்லாதவருடைய சிநேகத்தை மறவாதிருக்கக்கடவன். (6)

107. தம்மிடத்து உண்டாகிய துன்பத்தை நீக்கினவருடைய நட்பை எழு பிறப்பிலும் பெரியோர் நினைப்பர். (7)

108. ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவனுக்குத் தருமமன்று. ஆனால் அவன் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது தருமமாகும். (8)

109. தமக்கு முன் ஒரு நன்மை செய்தவர், பின் கொல்லுதல் போல் தீமைகளைச்செய்தாலும், அவர் செய்த நன்மை ஒன்றை நினைக்க அவை எல்லாங் கெடும். (9)

110. பெரிய தருமங்களை அழித்தவர்களுக்கும் பாவத்தினின்றும் நீங்கும் வழி யுண்டாம். ஒருவன் செய்த நன்றியைக் கெடுத்தவர்களுக்கு அதனின்றும் நீங்கும் வழி இல்லையாம். (10)

12-ஆம்-அதி நடுவு நிலைமை.

Impartiality.

[அதாவது பகைவர், பக்கத்திலுள்ளோர். சிநேகிதர் என்னும் மூவரிடத்திலும் தருமத்தில் வழுவாமல் சமமாக நிற்குநிலைமை.]

111. பகைவர், அயலோர், நட்பினர் என்னும் பிரிவு தோறும் தன் முறைமையை விடாது நடந்தால், நடுவுநிலைமை என்று சொல்லப்படும் ஓர் தருமமே நல்லது. (1)

112. நடுவுநிலைமை உடையவன் செல்வம், மற்றையோர் செல்வம்போல் அழிதல் இல்லாமல் அவன் சந்ததியார்க்கும் உறுதியாகும் தன்மையை உடைத்தாயிருக்கும். (2)

113. நடுவுநிலைமை இல்லாது வருஞ்செல்வம் தீமையில்லாமல் நன்மையே கொடுத்தாலும் அதை அப்பொழுதே விடக்கடவன். (3)

114. இவர் நடுவுநிலைமை உடையவர் இவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்னும் சிறப்பு அவர் அவருடைய நல்ல புத்திரர் இருப்பதனாலும் இல்லாததனாலும் தெரிந்துகொள்ளப்படும். (4)

115. தீவினையால் கேடும், நல்வினையால் செல்வமும், எவருக்கும் முன்னே அமைந்து கிடக்கின்றன. அந்த வழியை அறிந்து மனத்தின்மேல் அவை காரணமாகச் சாய்தல் இல்லாமையே பெரியோர்க்கு அழகாம். (5)

116. ஒருவன் மனம் நடுவுநிலைமை தவறி பக்ஷபாதங்களைச்செய்ய நினைத்தால், அது அவன் தான் கெடக்கடவன் என்று உணரும் * உற்பாதமாக அறியக்கடவன். (6)

117. நடுவு நிலைமையாக நின்று தருமத்தின் கண்ணே தங்கினவனுடைய வறுமையைப், பெரியோர் வறுமையாக நினையார். (7)

* உற்பாதம்:—பின்வரும் நன்மை தீமைகளை முன் அறிவிக்கும் குறி.

118. முன்னே தான் சமனாகநின்று, பின் தன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை அளவு செய்வதாகிய துலாக்கோல் போல, இலக்ஷணங்களால் நிறைந்து ஒருபக்கத்திலே சாயாமை சான்றோர்க்கு அழகாம். (8)

119. மனத்திலே கோணுதல் இல்லாமையை உறுதியாகப் பெற்றால், நடுவு நிலைமையாவது சொல்லிலே கோணுதல் இல்லாததாகும். (9)

120. பிறர் பொருளையும் தம் பொருளைப்போல் காத்து வியாபாரஞ்செய்தால், அது நல்ல வியாபாரமாம். (10)

13-ஆம்-அதி-அடக்கமுடைமை

The Possession of Self Restraint.

[அதாவது காயம், வாக்கு, மனம் முதலியன கெட்ட வழியிலே செல்லாமல் அடங்கி நடத்தல்.]

121. அடக்கமாகிய தருமம் ஒருவனைப் பின் தேவருலகத்தில் கொண்டுபோய்விடும். அடங்காமையாகிய பாவம் சகிக்தற்கு முடியாத நரகத்திலே செலுத்திவிடும். (1)

122. மனிதர்களுக்கு அடக்கத்தைப் பார்க்கிலும் மேன்மையான செல்வம் இல்லை. ஆகலால் அந்தச் செல்வத்தை உறுதிப்பொருளாகக் கொண்டு அழியாமல் காக்கக்கடவன். (2)

123. அடக்கமே நமக்கு அறிவு என்று அறிந்து நல்ல வழியிலே ஒருவன் அடங்கப்பெற்றால், அது நல்லோரால் அறியப்பட்டு அவனுக்குச் சிறப்பைக்கொடுக்கும். (3)

124. இல்வாழ்க்கையாகிய தன்வழியிலே வேறுபடாமல் நடந்து அடங்கினவனுடைய உயர்ச்சி மலையைப்பார்க்கிலும் மிகப்பெரிது. (4)

125. பெருமையில்லாமல் அடங்குதல் யாவருக்கும் நன்றாக இருந்தபோதிலும் அவர்களுள் செல்வமுடையவர்க்கே அந்த அடக்கம் மற்றொரு செல்வமாய்த் தோன்றும் சிறப்பினையுடையது. (5)

126, ஆமையைப்போல ஒருவன் ஒரு பிறப்பிலே ஐம்பொறிகளையும் அடக்க வல்லவன் ஆனால், அது அவனுக்கே எழுபிறப்பிலும் காவலாக உடையது. (6)

127. காக்கவேண்டுவன எல்லாவற்றையும் காக்காவிட்டாலும நாக்கு ஒன்றையாவது காக்கக்கடவர். அதனைக் காக்காவிட்டால சொற்குற்றத்தில அகப்பட்டுத் துன்பம் அடைவர்.(7)

128. தீய சொற்களின் பொருள்களால் பிறருக்கு வரும் துன்பம் ஒன்றாக இருந்தாலும், ஒருவனிடத்தில் உண்டாவதினாலே, அவனுடைய மற்றைய தருமங்களால் உண்டாகிய நன்மை எல்லாம் தீதாய்விடும். (8)

129. ஒருவனை ஒருவன் தீயினால் சுட்டபுண் உடம்பினிடத்திலே இருந்தபோதிலும், மனத்தினிடத்து அப்பொழுதே ஆறும். அப்படி நிலையாமல் தீயசொற்களை உடைய நாவினாலே சுட்டவடு எப்பொழுதும் ஆறாது. (9)

130. மனத்தினிடத்துக் கோபம் தோன்றாமல் காத்துக் கல்வி உடையவனாகி அடங்குதலில் வல்லவனாய் இருப்பவனை அறக்கடவுள் சேரச் சமயம் பார்த்து நிற்பார். (10)

14-ஆம்-அதி-ஒழுக்கம் உடைமை.

The Possession of Decorum.

[அதாவது தங்கள் தங்கள் வருணாசிரமங்களுக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தை உடையவராக இருத்தல்.]

131. ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைக்கொடுத்தலால் அது உயிரினும் பாதுகாக்கப்படும். (1)

132. தருமங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து இகபரம் இரண்டிற்கும் துணையாவது எது என்று மனத்தை அடக்கி அறிந்தாலும் ஆசாரமே என்று முடிதலால், அதை ஒரு விதத்தாலும் அழிவுபடாமல் விரும்பியும் வருந்தியும் காக்கக்கடவன். (2)

133. யாவர்க்கும் தங்கள் தங்கள் வருணத்திற்குத் தக்கபடி ஒழுக்கமுடைமை குலம் உடைமையாம். அதினின்றும் தவறுதல் அந்த வருணத்தில் தாழ்ந்த இழிகுலமாய்விடும். (3)

134. பார்ப்பார் கற்ற வேதத்தினை மறந்தாலும் குலம் கெடாமையினால் பின்னும் அதைக்கற்றுக்கொள்ளலாம். ஆனால் அந்தணனது குலம், ஒழுக்கம் குறைந்தால், கெடும். (4)

135. பொறாமையுடையவனிடத்தில் செல்வம் இல்லாததுபோல ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்ச்சி இல்லை. (5)

136. மனவலிமையை உடையோர் ஒழுக்கந்தவறுதலால் இழிவுண்டாகிய குற்றம் உண்டாகும் வழியை அறிந்து ஆசாரத்தில் குறையார். (6)

137. யாவரும் ஒழுக்கத்தினாலே மேன்மையை அடைவர். அதனின்று தவறுதலினாலே தாம் அடையத்தகாத பழியை அடைவர். (7)

138. நல்லொழுக்கமானது நன்மைக்குக் காரணமாய் இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் விளைக்கும். தீயொழுக்கமோ பாவத்திற்குக் காரணமாய் இருமையிலும் துன்பத்தைக் கொடுக்கும். (8)

139. நல்லொழுக்கமுள்ளவர் மறந்தாகிலும் தீயசொற்களைத் தம் வாயால் கூடச் சொல்லார். (9)

140. உலகத்தோடு பொருந்த நடக்கக் கல்லாதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவர்களே. (10)

15-ஆம்-அதி-பிறனில் விழையாமை.

Not Coveting another's Wife.

[அதாவது காமமயக்கத்தினாலே வேறொருவன் மனைவியை விரும்பாமை]

141. அயலானுக்குப் பொருளாகும் தன்மையுடையவளை விரும்பி நடக்கின்ற அறியாமையானது, பூமியிலே அறநூலையும் பொருள்நூலையும் தெரிந்தவரிடத்தில் இல்லை. (1)

142. காமம் காரணமாகப் பாவத்திலே நின்றவர்களெல்லாருள்ளும் அயலானுடைய மனைவியை விரும்பி அவன் வாயிலிலே சென்று நின்றார் போலப் பேதையாரில்லை. (2)

143. சந்தேகம் இல்லாமல் தம்மை நல்லவரென்று தெளிந்தவருடைய மனைவியிடத்துப் பாவம் செய்யவிரும்பி நடப்பவர் உயிரோடிருந்தாலும் அவர் இறந்தவரே யாவர். (3)

144. காமமயக்கத்தினாலே தினையளவாகிலும் தம்முடைய பிழையைக் கருதாமல், பிறன் மனைவியிடத்தே செல்லுதல் எவ்வளவு பெருமையை யுடையவனாயிருந்தாலும் சிறுமையை அடைவான். (4)

145. பிறன் மனைவியை அடைதல் சுலபமென்று நினைத்துப் பின் விளைவதைக் கருதாமல் நடப்போன், எக்காலத்திலும் அழியாமல் நிலை நிற்பதாகிய குடிப்பழியை அடைவான். (5)

146. பிறன் மனைவியிடத்தே வழி தப்பி நடப்பவனிடத்துப் பகை, பாவம், அச்சம், பழி என்னும் இந்த நான்கு குற்றங்களும் ஒருபொழுதும் நீங்காவாம். (6)

147. பிறனுக்குச் சுதந்திரம் பூண்டு அவனுடைய இயல்பினிடத்தே நிற்பவளுடைய பெண் தன்மையை விரும்பாதவனே தருமமாகிய இயல்போடு சேர்ந்து இல்வாழ்வானென்று சொல்லப்படுவான். (7)

148. பிறன் மனைவியை உட்கொள்ளாத பெரிய ஆண்தன்மையானது சான்றோர்க்குத் தருமமும் ஒழுக்கமும் ஆம். (8)

149. அச்சத்தைக்கொடுக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்திலே எல்லா நன்மைகளும் அடைதற்கு உரியவர் யார் என்றால், பிறனுக்குச் சுதந்தரமானவளின் தோள்களைச் சேராதவர்களே. (9)

150. ஒருவன் தருமத்தைத் தனக்கு உரித்தாகச் செய்யாமல் பாவங்களைச் செய்தாலும், அவனுக்கு வேறு ஒருவனுடைய எல்லையிலே நிற்பவளது பெண்தன்மையை விரும்பாமை உண்டானால், அதுவே சிறந்து விளங்கும். (10)

16-ஆம்-அதி-பொறை உடைமை.

Forbearance.

[அதாவது காரணம்பற்றியாவது தெரியாமை மதத்திலாவது ஒருவன் தமக்குக் கெடுதல் செய்தவிடத்தும், தாமும் அவனிடத்து அதைச்செய்யாது பொறுத்தலாம்.]

151. நிலம் தன்னை வெட்டுவோரையும் சுமப்பதைப்போலத், தம்மை நிந்திப்பவரையும் பொறுத்துக்கொள்ளுதல் முதலான தருமமாம். (1)

152. பிறர் செய்த குற்றத்தைத் தன்னால் பொறுத்துக்கொள்ளக்கூடிய காலத்தும் பொறுக்கக்கடவன். அதனை நினையாமல் அப்பொழுதே மறந்துவிட்டால் அது பொறுமையைப்பார்க்கிலும் சிறந்ததாகும். (2)

153. ஒருவனுக்குத் தரித்திரத்திலே தரித்திரம் விருந்தினரை உபசரியாது நீக்குதலாம். அதுபோல வல்லமையிலே வல்லமையாவது அறிவில்லாதவர் செய்த குற்றத்தைப் பொறுத்தலாம். (3)

154. ஒருவன் சகல நற்குணங்களிலும் ஒன்றுவது குறைவுபடாமல் சம்பூரணமாய் இருத்தல் தன்னை விட்டு நீங்காமையை வேண்டுவானானால், அவன் பொறுமையுடையவனாயிருக்கையைத் தன்னிடத்து அழியாமல் காத்து நடக்கக்கடவன். (4)

155. பிறர் தமக்குத் தீங்கு செய்தகாலத்துப் பொறாமல் துன்பப்படுத்தினவரைப் பெரியோர் ஒரு பொருளாக மதியார்; அதனைப் பொறுத்தவரைப் பொன்னைப் போல மனத்தில் கொள்ளுவார். (5)

156. தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவர்க்கு உண்டாவது அந்த ஒருநாளை இன்பமே. அதனைப்பொறுத்தார்க்கு உலகம் அழியும் அளவும் புகழ் உண்டாகும். (6)

157. செய்யக்கூடாத கொடியவைகளைத் தன்னிடத்துப் பிறர் செய்தாலும் அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்கு வருந்தித் தருமம் அல்லாத செயல்களைத் தான் செய்யாதிருத்தலே சிறப்புடையதாம். (7)

158. மனக்கர்வத்தினால் தம்மிடத்துக் கெட்ட செய்கைகளைச் செய்தவர்களைத் தாம் தம் பொறுமையினாலே வென்றுவிடக்கடவர். (8)

159. தீயவழியில் நடப்பவருடைய வாயில் உண்டாகும் கொடுஞ்சொற்களைப் பொறுப்பவர் இல்வாழ்க்கையிலே இருந்தும் துறவிகளைப்போல் பரிசுத்த குணத்தை உடையவராவர். (9)

160. பிறர் சொல்லும் கொடுஞ்சொற்களைப் பொறுப்பவர்க்கு விரதங்களால் உணவைவிட்டுத் தவமை அடைந்த மேன்மையைப் பொறுப்பவராகிய தபசிகள் பிற்பட்டவராவர். (10)

17-ஆம்-அதி-அழுக்காறாமை.

Not Envying.

[அதாவது பிறர் செல்வம் முதலியவற்றைப் பார்த்துவிட்டுப் பொறாமைப் படாமை.]

161. ஒருவன் தன் மனத்திலே பொறாமையாகிய குற்றம்

இல்லாத குணத்தைத் தனக்குச் சொல்லப்பட்ட ஒழுக்கவழியாகக் கொள்ளக்கடவன. (1)

162. எவரிடத்திலும் பொறாமை இல்லாதிருத்தலை ஒருவன் அடைவானானால், மற்றவன் அடையும் மேலான பேறுகளுள் அதை ஒத்திருப்பது இல்லை. (2)

163. மறுமைக்குத் தருமத்தையும் இம்மைக்குச் செல்வத்தையும் தனக்கு வேண்டாதவன் என்று சொல்லப்படுவோன், பிறனுடைய செல்வத்தைப் பார்த்தவிடத்துச் சந்தோஷப்படாமல் பொறாமைப்படுவான். (3)

164. பொறாமை காரணமாக, அறிவுடையோர் அதனால் தமக்கு இருமையிலும் துன்பம் உண்டாதலை அறிந்து, தருமம் அல்லாதவைகளைச் செய்யார். (4)

165. பொறாமை பகைவரை விட்டிருந்தும் கேட்டைத்தருவது ஒன்றாதலால், அதை உடையவர்க்கு வேறு பகைவர் வேண்டாம். அதுவே போதும். (5)

166. ஒருவன் பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருளைக்குறித்துப் பொறாமைப் படுபவனை அல்லாமல், அவன் சுற்றத்தாரும உடுக்க வஸ்திரமும உண்ணச் சோறும் இல்லாமல் வருந்துவர். (6)

167. பிறனுடைய செல்வத்தைப் பார்த்த இடத்துப் பொறாமை உடையவனை இலக்ஷ்மி தானும் பொறாமைப்பட்டுத் தனக்குத் தமக்கையாகிய மூதேவிக்குக் காண்பித்துவிட்டுத் தான் நீங்குவாள். (7)

168. பொறாமை என்று சொல்லப்பட்ட ஒப்பு இல்லாத பாவியானவன், தன்னை உடையவனை இப்பிறப்பிலே அவன் செல்வத்தைக்கெடுத்து மறுமையிலே நரகத்திலே தள்ளிவிடுவான். ()

169. அறிவுடையோர் பொறாமை உள்ளவனுடைய செல்வத்தையும் பொறாமை இல்லாதவனுடைய வறுமையையும் பழவினைப்பயன் என்று எண்ணுவார். (9)

170. பொறாமைப்பட்டுச் செல்வமுடையவரானவரும் இல்லை. அது இல்லாதவர் பெருக்கத்திலிருந்து நீங்கி வறுமை அடைந்தவரும் இல்லை. (10)

18-ஆம்-அதி-வெஃகாமை.

Not Coveting.

[அதாவது பிறர் பொருளை அபகரிக்க நினையாமை.]

171. பிறர்க்குச் சொந்தமான பொருளை இச்சித்தல் நமக்குத் தருமம் அல்ல என்னும் நடுவு நிலைமையில்லாமல், அவருடைய நல்ல பொருளை அபகரிக்க விரும்பினால், அது அவன் குடியைக் கெடச்செய்து, பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும். (1)

172. ஒருவன் பொருளுக்கு வேறு ஒருவன் உரியவன் அல்லன் என்னும் நடுவு நிலைமை இல்லாமைக்கு அஞ்சுவோர், பிறர் பொருளை அபகரித்தலினாலே, தமக்கு வரும பயனை விரும்பிப் பழி உண்டாகும் செயல்களைச் செய்யார். (2)

173. நிலையான இன்பத்தை விரும்புவோர், பிறரிடத்தே அபகரிக்கப்பட்ட பொருளினாலே, தாம் அடைவதாகிய நிலை இல்லாத இன்பத்தை விரும்பித், தருமம் அல்லாத காரியங்களை அவரிடத்தே செய்யார். (3)

174. ஐம்புலன்களையும் வென்ற குற்றம் இல்லாத அறிவுடையார், தரித்திரராய் இருக்கிறோமென்று நினைத்து, அது நீங்கும் பொருட்டுப் பிறர் பொருளை விரும்பார். (4)

175. பிறர் பொருளை விரும்பி எவரிடத்தும் அறிவில்லாத செயல்களை அறிவுடையோர் செய்வாரானால், நுட்பமானதாகி எல்லா நூல்களிலும் சென்ற அறிவானது, என்ன பிரயோஜனத்தை உடையது? (5)

176. அருளாகிய தருமத்தை விரும்பி இல்லறவழியிலே நின்றவன், பிறர் பொருளை விரும்பி அதனை வருவிக்கும் தீயவழிகளை நினைக்கக்கெடுவான். (6)

177. பிறர் பொருளை அனுபவிக்கும்போது, அதுபயன் படாமையால், அதை விரும்பி, அதனால உண்டாகும் பெருக்கத்தை வேண்டாதிருக்கக்கடவன. (7)

178. குறையும் தன்மையை உடைய செல்வம், குறையாது இருத்தற்குக காரணம் எது என்று ஒருவன் ஆராய்ந்து பார்த்தால், அது பிறன் விரும்புகின்ற கைப்பொருளைத் தான் வேண்டாமையாம். (8)

179. இது தருமம் என்று நினைத்துப், பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் தான் அடைதற்கு ஆகும் வழியைத்தெரிந்து, அதனால் சென்று இலக்ஷ்மி அடைவாள். (9)

180. ஒருவன், பின் உண்டாவதை நினையாமல் பிறது பொருளை விரும்பினால், அது அழிவை அவனுக்குக் கொடுக்கும். அந்தப்பொருளை விரும்பாமை என்னும்செல்வமானது, அவனுக்கு வெற்றியைக் கொடுக்கும். (10)

19-ஆம்-அதி-புறங்கூறாமை.

Not Backbiting.

[அதாவது காணாத இடத்திலே இகழ்ந்து பேசாமை].

181. ஒருவன் தருமம் என்று சொல்லுவதும் செய்யாது, பாவங்களைச் செய்தாலும், பிறரைக்காணாதவிடத்து இகழ்ந்து பேசமாட்டான் என்று உலகத்தாராலே சொல்லப்படுவது நல்லது. (1)

182. ஒருவன் பிறரைக் காணாதவிடத்து இகழ்ந்துபேசிக் கண்டவிடத்து அவரோடு பொய்யாக மகிழ்தல், தருமம் என்பது ஒன்று இல்லை என்று அழித்துப்பேசித், தருமம் இல்லா தவற்றைச் செய்தலைப்பார்க்கிலும் தீதாம். (2)

183. பிறரைப் பார்க்காத விடத்து இகழ்ந்துபேசி, பார்த்தவிடத்து அவரைப்புகழ்ந்து, ஒருவன் ஜீவிப்பதைப்பார்க்கிலும், அது செய்யாது இறத்தல், தருமநூல்களில் சொல்லப்பட்ட பயனைக் கொடுக்கும். (3)

184. ஒருவன் எதிரே நின்று தாக்ஷண்ணியமில்லாமல் சொன்னாலும், அவன் நேராக இல்லாமல் பின்வரும் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதிருக்கக்கடவன். (4)

185. புறஞ்சொல்லுவான் ஒருவன், தருமத்தை நன்று என்று சொன்னாலும், அது தன் மனத்தால் சொல்லுகிறவன் அல்லன் என்பது அவன் புறஞ்சொல்லுதற்குக்காரணமான மனக்குற்றத்தினாலே அறியப்படும். (5)

186. [illegible] குற்றத்தை, அவனைக்காணாத விடத்துச் சொல்லுகிறவனுடைய குற்றமும், குற்றம் சொல்லப்பட்டவனாலே வருந்தும்படி, எதிரே ஆராய்ந்து சொல்லப்படும். (6)

187. சேர்ந்து சந்தோஷப்படும்படி இனிய சொற்களைச் சொல்லி, அந்நியரோடு சிநேகஞ் செய்தலைத் தமக்கு உறுதியாமென்று தெரியாதவர், தம்மைவிட்டு நீங்கும்படி புறஞ்சொல்லித், தமுடைய சுற்றத்தாரையும் பிரியப்பண்ணுவர். (7)

188. தம்மோடு நெருங்கினவருடைய குற்றத்தையும் அவரைப் பார்க்காத விடத்துத் தூற்றும் இயல்பை உடையவர் அந்நியர் குற்றத்தைத் தூற்றாதிரார். (8)

189. பிறர் தம்மை விட்டு நீங்கின சமயம் பார்த்து, அவர் குற்றத்தை எடுத்துச் சொல்பவனுடைய உடல் பாரத்தைப், பூமி இந்தக்கொடியதைச் சுமத்தலே, எனக்குத்தருமமாயது என்று சுமக்கின்றது போலும். (9)

190. அயலார் குற்றத்தை எடுத்துச்சொல்பவர், அதற்கு அவர் குற்றத்தைப் பார்ப்பதுபோல், தம் குற்றத்தையும் பார்ப்பாரானால், அவரது நிலைபெற்ற உயிர்க்கு வருவது ஒரு கேடும் இல்லை. (10)

20-ஆம்-அதி-பயனிலசொல்லாமை.

Not uttering profitless Words.

[அதாவது தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பம் ஆகிய பிரயோஜனங்களில் ஒன்றையும் கொடுக்காத சொற்களைச் சொல்லாமையாம்.]

191. அறிவுடையார் பலரும் கேட்டு வெறுக்க, பயன் இல்லாத சொற்களைச் சொல்லுபவன், எல்லாராலும் இகழப்படுவான். (1)

192. அறிவுடையார் பலர் முன்னே பயனில்லாத சொற்களை ஒருவன் சொல்லுதல், தன்னுடைய சிநேகிதர் இடத்து விருப்பமில்லாத செயல்களைச் செய்தலைப்பார்க்கிலும் தீதாம். (2)

193. பயன் இல்லாத பொருள்களை விரித்து, ஒருவன் சொல்லும் சொல்லே, இவன் நீதியில்லாதவன் என்பதை அறிவிக்கும். (3)

194. பயனோடு சேராதகுணம் இல்லாத சொற்களை, ஒருவன் பலரிடத்துச் சொல்லுவானானால், அவைகள் அவனிடத்து நீதியோடு சேராதவையாகி, அவனை [illegible]னின்றும் நீக்கும்.

195. நற்குணமுடையோர், பயனில்லாத சொற்களைச் சொல்லுவாரானால், அதனால் அவரது மேம்பாடும், நன்குமதிப்பும் நீங்கும். (5)

196. பயன் இல்லாத சொற்களைப் பலதடவையும் சொல்லுவோனை, மனிதன் என்று சொல்லாதே. அவன் மனிதருக்குள்ளே பதராவான். (6)

197. அறிவுடையோர், உலகத்தோடு பொருந்தாத சொற்களைச் சொன்னார் ஆனாலும், அவர் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாது இருத்தலே நல்லது. (7)

198. தெரிந்துகொள்ளுவதற்கு அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவுடையார், மிகுந்த பயன் இல்லாத சொற்களைச் சொல்லமாட்டார். (8)

199. குற்றமில்லாத அறிவுடையார், பயன் இல்லாத சொற்களை மறந்தும் சொல்லார். (9)

200. சொற்களிலே பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய சொற்களைச் சொல்லக்கடவர். சொற்களிலே பிரயோஜனம் இல்லாத சொற்களைச் சொல்லாதிருக்கக்கடவர். (10)

21-ஆம்-அதி-தீவினை அச்சம்.

Dread of Evil Deeds.

[அதாவது பாவங்களாய் உள்ளவைகளைச் செய்தற்குப் பயப்படுதலாம்.]

201. தீவினை என்று சொல்லப்படுகிற மயக்கத்துக்கு, முன் பிறவியில் செய்த தீவினையுடையார் பயப்படார். அது இல்லாத மேலோர் பயப்படுவர். (1)

202. தனக்கு இன்பங் கொடுத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள், பின்பு அந்த இன்பத்தை ஒழித்துத் துன்பங்களே கொடுத்தலால், அப்படிப்பட்ட தீவினைகள் நெருப்பைப்பார்க்கிலும் அதிகமாக அஞ்சப்படும். (2)

203. தம்மை வருத்துவோர் இடத்தும், துன்பங்களைச் செய்யாது விடுதலைத் தமக்கு உறுதியைக் கொடுக்கும் அறிவுகளெல்லாவற்றுள்ளும், முதன்மையான அறிவாகும் என்று பெரியோர் சொல்லுவர். (3)

204. ஒருவன் பிறனுக்குக் கேட்டைக் கொடுக்கும் வினையை, மறந்தும் நினையாது இருக்கக்கடவன். அப்படி நினைப்பானால், நினைத்தவனுக்குக் கேட்டைத்தரும் வினையைத் தருமக் கடவுள் நினைப்பார். (4)

205. தரித்திரம் உடையவன் என்று நினைத்து, அந்தத் தரித்திரத்தினின்றும் நீக்கும் காரணமாகத் தீயவைகளைப் பிறருக்கு ஒருவன் செய்யாதிருக்கக்கடவன். அப்படிச் செய்வானானால், பின்னும் தரித்திரமுடையவனாவான். (5)

206. துன்பஞ் செய்யுந் தன்மையையுடைய பாவங்கள், தன்னைப் பின் வந்து வருத்துதலை விரும்பாதவன், அவைகளைப் பிறரிடத்தே செய்யாதிருக்கக்கடவன். (6)

207. எவ்வளவு பெரிய பகையை உடையவரும், அதினின்றும் ஒருவழியால் தப்புவார். அப்படி இல்லாமல் தீவினையாகிய பகையோ, நீங்காமல் சென்ற இடமெல்லாம் சென்று கொல்லும். (7)

208. பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார், தாம் கெடுதல் எப்படிப்பட்டதென்றால், ஒருவன் நிழல் வெகுதூரஞ் சென்றாலும் அவனை விடாது பின்சென்று அடியினிடத்தே தங்குவதைப்போலும். (8)

209. ஒருவன் தன்னைக் காக்க விரும்பினால், பிறரிடத்துத் தீயவைகளில் எவ்வளவு சிறியது ஒன்றாயினும் செய்யாதிருக்கக்கடவன். (9)

210. ஒருவன் நல்ல வழியிலே செல்லாது, கொடியவழியிலே சென்று, பிறரிடத்துத் தீவினைகளைச் செய்யாதிருந்தால், அவன் கேடில்லாதவன் என்பதை அறியக்கடவர். (10)

22-ஆம்-அதி-ஒப்புரவு அறிதல்.

The Recognition of Duty.

[அதாவது உலக நடையை அறிந்து செய்தல்.]

211. உயிர்கள் தமக்கு ஜலத்தைக் கொடுக்கின்ற மேகங்களினிடத்து என்ன பிரதி உபகாரத்தைச் செய்கின்றன. அது போல உபகாரங்களும் பிரதிஉபகாரங்களை விரும்புவன அல்ல. (1)

212. கல்வி, கேள்வி, அறிவு முதலிய ஒழுக்கங்களால் உண்டாகிய யோக்கியதை உடையவருக்குத், தாம் முயற்சிசெய்து

சம்பாதித்த பொருள்கள் எல்லாம், உபகாரம் செய்யும் பொருட்டாம். (2)

213. தேவலோகத்திலும், இந்த உலகத்திலும் உபகாரம் போல நல்லவையாகிய வேறு செயல்களைப் பெறுதல் அருமையானது. (3)

214. உலக நடையைத் தெரிந்து செய்பவனே, உயிரோடு கூடியிருப்பவனாவான். அதனைத் தெரிந்து செய்யாதவன் உயிருடையவனாய் இருந்தபோதிலும் இறந்தவர்களுக்குள் ஒருவனாக வைக்கப்படுவான். (4)

215. உலக நடையை, விரும்பிச்செய்யும் பெரிய அறிவை உடையவனுடைய செல்வம், ஊரில் உள்ளார் நீர் உண்ணுங் குளம், நீரால் நிறைந்தது போலும். (5)

216. செல்வம் உபகாரம் செய்பவனிடத்தே உண்டானால், ஊர் நடுவிலே யாவர்க்கும் பிரயோஜனப்படுகிற பலன் தரும் மரம், பழுத்தாற் போலும். (6)

217. செல்வம் உபகாரம் செய்யும் பெரிய குணமுடையவனிடத்திலே உண்டானால், அது எல்லா உறுப்புகளும் பிணிக்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும். (7)

218. தாம் செய்யவேண்டியவைகளைத் தெரிந்த இயற்கை அறிவுடையார், செல்வம் சுருங்கித், தரித்திரம் அடைந்த காலத்திலும், உபகாரம் செய்வதில் குறையார். (8)

219. உபகாரம் செய்பவன் தரித்திரன் ஆகுதல், நீங்காமல் செய்யும் குணத்தையுடைய அந்த உபகாரங்களைச் செய்யாமல் வருந்துகின்ற இயல்பாம். (9)

220. உபகாரம் செய்தலினாலே ஒருவனுக்குப் பொருள் கெடுதல் வரும் என்பவர் உண்டானால், அது தன்னை விற்றுக் கூட வாங்கும் தன்மையை உடையது. (10)

23-ஆம்-அதிகாரம்.

Giving.

[அதாவது தரித்திரத்தால் இரந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்தல்.]

221. ஒரு பொருளும் இல்லாதவர்க்கு அவர் வேண்டிய பொருள் ஒன்றைக் கொடுத்தலே, பிறர்க்குக் கொடுத்தலாம். அது நீங்கிய மற்றைய கொடையெல்லாம், குறிக்கப்பட்ட பின்னும் பிரயோஜனத்தைக் கொடுக்கும் குணத்தை உடையன. (1)

222. மற்றையோர் கொடுத்தலை வாங்கிக் கொள்ளுதல் நல்லுலகத்துக்கு நல்வழி என்பவர் உண்டானாலும், அது தீதாம். ஆனால் அதை கொடுத்தவர்க்கு அந்த மேல் உலகத்தை அடைதல் இல்லை என்பவர் உண்டானாலும், கொடுத்தலே நன்று. (2)

223. யான் தரித்திரம் உடையவன் என்று, இரப்பவன் சொல்லும் துன்பம் கொடுக்குஞ் சொல்லை மற்றையோர் இடத்தில் சொல்லாமலும், அச்சொல்லைத் தனக்கிட்டுச் சொன்னவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கவும் ஆகிய இந்த இரண்டும், நல்ல குடியிலே பிறந்தவரிடத்தில் உண்டாயிருக்கும். (3)

224. கொடையாளர் இரக்கப்படுதலும் இன்பம் பெறுவது அன்று. ஒரு பொருளை இரந்தவர், அது அடைந்ததினால் இனிதாகிய அவர் முகத்தைக் காணுமளவுமாம். (4)

225. தவத்தில் வல்லவர் ஆற்றும் வல்லமை தாம் அடைந்த பசியைப் பொறுத்தல். அப்படிப் பொறுத்தற்கு அருமையான பசியைக் கொடையினால் நீக்குவோருடைய வல்லமை அதைப் பார்க்கிலும் பெரிது. (5)

226. பொருளை அடைந்தவன் அதைத் தனக்கு உதவும்படி வைக்குமிடம், தரித்திரருடைய மிகுந்த பசியைத் தக்கவனைக் கருதி நீக்குதலேயாம். (6)

227. எந்நாளும் தரித்திரர் முதலியோர்க்குப் பங்கிட்டுக் கொடுத்து உண்பவனைப் பசியென்று சொல்லப்படுங் கொடிய நோய் சேருவதாது. (7)

228. தம்முடைய பொருளைக் கொடாது வைத்துப், பின் இழக்கின்ற அருளில்லாதவர், தரித்திரருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, அவர் சந்தோஷப்படுகின்றதினாலே அருளுடையார் அடையுஞ் சந்தோஷத்தைப் பார்த்து அறியாரோ? (8)

229. பொருளுடைய குறையைப் பூர்த்திசெய்யவேண்டி, இரந்தவர்களுக்குக் கொடாமல், தாமே தனிமையாகச் சாப

241. பொருளால் வரும் செல்வங்கள் இழிந்தவரிடத்தும் இருக்கின்றபடியால், செல்வங்களைப் பலவாறாய் தேர்ந்து எண்ணிக் கப்பட்ட செல்வமாவது அருளால் வரும் செல்வமே. (1)

242. நல்வழியிலே நின்று அளவைகளாலும், யுத்தியா லும் நாற்குற்றமுமின்றி அதை ஆராய்ந்து பார் த்தாயின், அருளை நிலையாக வைத்திலே என்பதனால், அருளு டையவர்களாகக்கடவர். வேறுபட்டு ஒன்றோடொன்று ஒவ்வாத சமயவழிகள் எல்லாவற்றிலும், ஆராய்ந்து பார்த்தாலும் துணையாவது அருளே. (2)

243 இருள் சேர்ந்த நரகலோகத்தில் போய்ச் சேருதல், அருளுடைய நெஞ்சுடையவர்களுக்கு இல்லை. (3)

244 நிலைபெறுடைய உயிர்களைக்காப்பாற்றி, அவைக ளிடத்து அருளுடையவனாயிருப்பவனுக்குத் தன்னுயிர் பய ப்படுகின்றதற்குக் காரணமாகிய பாவங்களொன்றும் உண்டாகா என்று பெரியோர் சொல்லுவர். (4)

245. அருளையுடையவனுக்கு இப்பிறப்பிலும் ஒருதுன்பம் உண் டாகாது. அதற்குக் காற்றுச் சஞ்சரிக்கின்ற வளப்பம்பொருந்திய பூமியிலே வாழ்வோரே சாக்ஷியாவார். (5)

246. உயிர்களிடத்துச் செய்யவேண்டும் அருளைவிட்டுக் கொடுமைகளைச் செய்து வாழ்பவரை, முன்பிறப்பிலேயும் உறுதி பயக்கும் பொருளைத் தேடாமல் தாம் துன்பப்படுகின்றதை மறந்தவர் என்று அறிவுள்ளோர் சொல்லுவார். (6)

247 பொருளில்லாதார்க்கு இந்த உலகத்தில் இன் பம் இல்லையாவதுபோல, உயிர்களிடத்தில் அருள் இல்லாதார்க்கு மோக்ஷ உலகத்தில் இன்பம் இல்லை. (7)

248. வறுமையினால் தரித்திரம் அடைந்தவர், அது நீங்கப்பின் ஒருகாலத்தில் செல்வத்தினாலே விளங்குவர். அருளில்லாதவர் பா வம் நீங்காமையால் அழிந்தவரே. பின் ஒருகாலத்திலும் ஆகுத லில்லை. (8)

249. உயிர்களிடத்திலே அருள்செய்யாதவன் செய்யும் தரு மத்தை ஆராய்ந்து பார்க்கில், ஞானமில்லாதவன் உண்மையான நூலிலே சொல்லப்பட்ட பொருளை ஒருகால் பார்த்தது போ லும். (9)

250. அருளில்லாதவன் தன்னைப்பார்க்கிலும் மெலியார் மேல் தான் வருத்தச் செல்லும்பொழுது, தன்னைப்பார்க்கிலும்

வலியவர் தன்னை வருத்தவரும்போது அவர் முன்தான் பயந்து நிற்கும் தன்னுடைய நிலைமையை நினைக்கக்கடவன. (10)

26-ஆம்-அதி-புலால் மறுத்தல்.

The Renunciation of Flesh.

[அதாவது மாம்சாதிகளை உண்ணாமல் விலக்கல்.]

251. தன்னுடைய உடம்பை வளர்த்தற் பொருட்டு, தான் மற்றொன்றினுடைய உடம்பைத் தின்பவன், எப்படி அருள் உடையவனாவான்? (1)

252. எப்படிப் பொருளைப் பாதுகாவாதவர்க்கு அதன் பிரயோஜனம் இல்லையோ, அப்படியே புலாலைத் தின்பவருக்கு அருளால் வரும்பிரயோஜனமில்லை. (2)

253. மற்றொன்றின் உடலைச் சுவைப்படத் தின்றவர் மனம் கொலைக்கருவியைக் கையிலே கொண்டவனுடைய மனம்போல கொலையையே நோக்குவது அல்லாமல் அருளை நோக்காது. (3)

254. அருள் எதுவென்றால், கொலைசெய்யாமையே. அருள் அல்லாதது எதுவென்றால், கொல்லுதலே. ஆதலால் கொலையாலே வந்த ஊனைத் தின்னுதல் பாவம். (4)

255. சிலவகை, உயிர்கள் உடம்புகளிலே நிற்கை, ஊனை உண்ணாமை என்னும் தருமத்தினாலேயாகும். ஆதலால் அவ்வூனைப் புசிப்பவன் அதனை உண்பானாகில், அவனை விழுங்கிய நரகமானது பின் உமிழ்தற்கு வாய்திறவாது. சுருக்கச் சொல்லின் ஊன் தின்பவன் பெருநரகத்தை அடைவான். (5)

256. உலகத்தார், தின்னுதல் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லாதிருந்தால், விலையின் பொருட்டு ஊன் விற்பவர் ஒருவரும் இல்லை. (6)

257. புலாலாவது மற்றொன்றினுடைய உடம்பின் புண்ணாகும். அது அசுத்தமாயிருக்கையை அறிவோர் அப்புலாலை உண்ணார். (7)

258. மயக்கமாகிய குற்றத்தினின்றும் நீங்கிய அறிவுடையோர், ஓர் உயிரினின்றும் நீங்கியதாகிய ஊனைத் தின்னார். (8)

259. நெய் முதலாகிய அவிசுகளைத் தீயிலே இட்டு, ஆயிரம்

வாசம் செய்தலைப்பார்க்கிலும், ஓர் விலங்கின் உயிரை நீக்கி அதப் புலாலை உண்ணாதிருத்தல் நல்லது. (9)

260. ஓர் உயிரையுங் கொல்லாமலும், ஊனைத்தின்னாமலுமிருப்பவனை, சகல பிராணிகளும் கைகுவித்து வணங்கும். (10)

27-ஆம் அதி- தவம்.

Penance; Mortification.

[அதாவது மனம், பொறி வழிபோகாமல் நிற்கையின் பொருட்டு, உணவைச் சுருக்குதல் முதலான செயல்களைமேற்கொண்டு, அவைகளால் தம்முடைய உயிருக்கு உண்டாகும் துன்பங்களைச் சகித்து, மற்ற உயிர்களைக் காப்பாற்றலாம்.]

261. தவத்திற்கு வடிவமாவது உணவைக்குறைத்தல் முதலானவைகளால் தம் உயிர்க்கு உண்டாகும் துன்பங்களைப் பொறுத்தலும், மற்ற உயிர்களுக்குத் தாம் துன்பங்களைச் செய்யாமையும் ஆகிய அந்த அளவினதேயாம். (1)

262. பயனை அல்லாமல் தவம் உண்டாவதும், முன் தவமுடையார்க்கே உண்டாகும். ஆதலால் அதை முன் தவமில்லாதவர் செய்ய ஆரம்பிப்பது வீணாம். (2)

263. இல்லறத்தையே பற்றி நிற்பவர், துறவறத்தை மேற்கொண்டார்க்கு உணவு, மருந்து, இருப்பிடம் முதலியவைகளை உதவுதலைவேண்டித் தாம் தவஞ் செய்தலை மறந்தார் போலும். (3)

264. தம்முடைய தருமத்துக்குப் பகையாய் நின்று கெடுதி செய்தவரைக் கெடச் செய்தலும், விரும்பினவரை உயரச் செய்தலும் ஆகிய இரண்டையும தவஞ்செய்வோர் நினைப்பாரானால், அவருடைய தவவலிமையினால் அவை அவருக்கு உண்டாகும். (4

265. அடையவேண்டிய பயன்களை வேண்டியபடியே தா மறுமையில் அடைதல் அல்லாமல், செய்யத் தகுவதாகிய தவ இம்மையிலே அதுவுடையோரால் முயலப்படும். (5

266. தருமம் செய்பவர், தம்முடைய கருமத்தைச் செய் பவராவர். வேறு பொருள் இன்பங்களைச் செய்வார், அவைகளின் ஆசையாகிய வலையில் அகப்பட்டுத் தமக்குக் கேடு செய்பவராவர். (6

267. பொன்னானது, புடம் போடப்போடக், குற்றம் நீங்கிப் பிரகாசம் அடைவதுபோல், தவம் செய்ய வல்லவர்க்கு அதனால் வரும் துன்பம், வருத்த வருத்தத் தம்மோடு சம்பந்தப்பட்ட பாவம் நீங்கி ஞானம் மிகும். (7)

268. தன்னுடைய உயிரைத் தனக்கு உரித்தாக அடைந்தவனை அது அடையாத மன்னுயிர்கள் எல்லாம் வணங்கும். (8)

269. தவம் செய்தலால் வருவதாகிய வல்லமையைத் தலைப்பட்டவர்க்கு யமனைக் கடத்தலும் கைகூடும். (9)

270. உலகத்திலே தவஞ் செய்வார் சிலராக, தவஞ்செய்யாதவர் பலராக இருத்தலால், செல்வர் சிலராகவும் தரித்திரர் பலராகவும் இருக்கின்றனர். (10)

28-ஆம் அதி- கூடா ஒழுக்கம்.

Inconsistent conduct, Indecorum.

[அதாவது தாம் விட்ட காம இன்பத்தை, உறுதி இல்லாமையினாலே பின்னும் விரும்பும் வழிதோன்றி, அந்தவழியே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாதாகிய கெட்ட ஒழுக்கமாம்]

271. வஞ்சனையுள்ள மனத்தையுடையவனது மறைந்த ஒழுக்கத்தை, உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற ஐந்து பூதங்களும் பார்த்துத் தமக்குள்ளே சிரிக்கும். (1)

272 ஒருவன் தான் குற்றம் என்று அறிந்ததிலே, தன் மனம் படியுமானால், அவனிடத்து மிகச்சிறந்து விளங்கிய தவவேடமானது, என்ன பிரயோஜனத்தை உடையது? (2)

273. மனத்தைத் தன் வசப்படுத்தி அடக்கும் வல்லமை இல்லாத குணத்தை உடையவன், வல்லமை உடையாருடைய வேடத்தைக்கொண்டு மனம்போன வழியேபோகுதல், பசு காவற்காரன் தன்னைத் துரத்தாமலிருக்கும்பொருட்டுப் புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு மேய்ந்தாற்போலும். (3)

274. அந்த வல்லமை இல்லாத நிலைமையை உடையவன், தவவேடத்திலே மறைந்து நின்று, தவமல்லாத பாவகாரியங்களைச் செய்தல், வேடன் புதரில் மறைந்து நின்று பறவைகளைப் பிடிப்பது போலும். (4)

275. பிறர் தம்மை நன்கு மதிக்கப் பொருட்டு, ஆசை நீங்காமல் இருக்கையிலே, ஆசையை விட்டுவிட்டோமென்று சொல்லுகிறவர்களுடைய மறைந்த ஒழுக்கம், அப்போது இனிமையாகத் தோன்றினாலும் [illegible] என் செய்தோம் என் செய்தோமென்று [illegible] தாமே இரங்கும் விதமாய்ப் பல துன்பங்களையும் அவருக்குக் கொடுக்கும். (5)

276. மனத்திலே ஆசைகளை நீக்காதவராகி, நீக்கினோர்போல் [illegible] செய்பவரை [illegible] வாழ்பவரைப்போல இரக்கமில் [illegible], உலகத்தில் இல்லை. (6)

277. [illegible] குன்றிமணி காணப்படுகிறதுபோல் வேடத்தால் [illegible] உடையவராயிருந்தாலும், [illegible] அகத்தில் [illegible] போல [illegible] முடையவரை உலகம் [illegible] இருக்கின்றது. (7)

27?. [illegible] பயக்கங்கள், [illegible] த்தில் இருக்கப், [illegible] ரோகங்கள் [illegible] [illegible] கடக்கும் [illegible] ங்களை [illegible] தத்திலே [illegible] னர். (8)

279. [illegible] னால் நல்லதாக இருந்தாலும், செயலால் [illegible] இருந்தாலும், செயலினாலே நல் [illegible] தெரிந்து [illegible] [illegible] செய்கையினாலே அறிந்து [illegible] கடவர். (9)

280. [illegible] சாரால் கலைத்திறந்த் [illegible] கூடாதென்று சொல்லப்பட்ட [illegible] ஒழுக்கத்தை [illegible] விட்டால், [illegible] [illegible] சடை ஆக்கலும் ஆகிய [illegible] யில்லை. (10)

29- அதி- கள்ளாமை.

T[illegible] [illegible]ce of Fraud

[அதாவது பிறருடைய பொருள்களில் எதையாவது ஒன்றை வஞ்சித்துக் கவரக் கருதாமை.]

281. [illegible] இகழாமல் விரும்புவோன் இவன் என்று [illegible] மதிக்கப்படுவோன், எந்தப் பொருளையும் [illegible] கொள்ளாதபடி, தன் மனத்தைக் காக்கக்கடவன். (])

282. [illegible]ங்களைக் கள்ளத்தினாலே நினைத்தலும் பாவமே அதனால பிறன் பொருளைத் திருடிக்கொள்வோம் என்று நினையாதிருக்கக்கடவன். (2)

283. திருட்டினால் உண்டாகும் செல்வம் வளர்வதுபோலத் தோன்றிப் பின்பு எல்லாமும் கெட்டு அழியும். (3)

284. பிறர் பொருளைத் திருடவேண்டுமென்கிற மிகுந்த ஆசையானது, அ[illegible] பின்[illegible] துன்பத்தைத் தரும். (4)

285. [illegible]ரின் [illegible] பார்த்து, அதனாலே அன்புடையா[illegible] நினைத்து, அவருடைய [illegible] பார்ப்பாரிடத்து இல்லை. (5)

286. [illegible] ஆசாரமுடையார், * உயிர் முதலானவைகளை [illegible] வழியிலே நின்று அ[illegible] [illegible]. (6)

287. [illegible] அறிவினையுடையாரிடத்து, [illegible] ஆகிய என்று சொல்லப்படு[illegible] இல்லை. (7)

288. [illegible] மனத்தில் வஞ்சனை, அதுபோல [illegible] மனத்தில் [illegible]. (8)

289. [illegible] அறியாதவர் அளவு அல்லாத [illegible] கெடுவார்()

290. [illegible] சம்மதியல்லாத உடம்பும் தள்ளும், [illegible], தேவலோகமும் தள்ளாது (10)

---

* உயிர் முதலானவைகளை அளவு செய்தலாவது, காட்சி முதலாகிய பிரமாணங்களைக் கொண்டு, உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகிற துன்ப வினைகளையும், அவற்றால் அவ்வுயிர் [illegible] பிறந்து இறந்து வருதலையும், அதனை ஒழித்தற்கு உபாயமான போக ஞானங்களையும், அவற்றால் அந்த உயிர் அடையும் முத்தியையும் அளவு செய்து உணர்தல். [illegible]

30-ஆம்- அதி-வாய்மை.

Truth.

[அதாவது உண்மையின் குணமாம்.]

291. உண்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எது வென்று வினவினால், அது மற்றொரு உயிர்க்குச் சிறிதாகிலும் கெடுதலைக் கொடுக்காத சொற்களைச் சொல்லுதல். (1)

292. பொய்ச்சொற்களும் குற்றம் நீங்கிய பிறருக்கு நன்மையைக் கொடுக்குமானால், அவைகளும் மெய்ச்சொற்களின் தன்மையை உடையன. (2)

293. ஒருவன் தன் மனத்திலே அறியப்படுவதொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யாது ஒழியக்கடவன். அப்படிப் பொய் சொல்லுவானானால், அதனை அறிந்த தன் மனமே, அந்தப் பாவத்துக்குச் சாக்ஷியாய் நின்று தன்னைச் சுடும். (3)

294. ஒருவன் தன் மனமறியப் பொய் பேசாது நடப்பானானால், அவன் உயர்ந்தோருடைய மனங்களில்எல்லாம் இருப்பான்()

295. ஒருவன் தன் மனம் ஒத்து உண்மையைச் சொல்லுவானானால், அவன் தவமும் தானமும் ஒருமித்துச் செய்வாரைப் பார்க்கிலும் மேற்பட்டவனாவான். (5)

296. ஒருவனுக்குப் பொய் பேசாமைக்குச் சமானமான புகழ்க்காரணம் இம்மைக்கு இல்லை. அது அவனுக்கு உடம்பு வருந்தாமல் எல்லாத் தருமங்களையும் மறுமைக்குத்தானே கொடுக்கும். (6)

297. ஒருவன் பொய்சொல்லாமையே பொய்சொல்லாமையே செய்ய வல்லவனானால், அவன் பிறதருமங்களைச் செய்யாமையே செய்யாமையே நல்லது. (7)

298. ஒருவனுக்கு உடம்பு பரிசுத்தமாகும் தன்மை நீரினாலே உண்டாகும். அதுபோல மனப் பரிசுத்தமாகும் தன்மை உண்மையால் உண்டாகும். (8)

299. பெரியோர்க்குப் புறத்திருளை நீக்கும் உலகத்தோருடைய விளக்குகளாகிய சூரியன், சந்திரன், அக்கினி முதலியவைகள் எல்லாம் விளக்குகள் அல்ல. ஆனால் அஞ்ஞானமாகிய அகத்திருளை நீக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காம்.(9)

300. எம்மால் மெய்நூல்களாகக் காணப்பட்ட நூல்களுள் எந்த விதத்திலும் உண்மையைப்பார்க்கிலும் மேற்பட்டவைகளாகச் சொல்லப்பட்ட பிற தருமங்கள் இல்லை. (10)

31-ஆம்-அதி-வெகுளாமை.

Absence of Wrath.

[அதாவது கோபம் செய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனிடத்தே உண்டாகிய இடத்தும் கோபம் செய்யாமை.]

301. தன் கோபத்தைச் செல்லுமிடத்துச் செல்லாமல் காப்பவனே அருளினால் காப்பவனாவன். மற்றைப் பலியாத இடத்து அதனைத் தடுத்தால் என்ன தடுக்காவிட்டால் என்ன? (1)

302. ஒருவனுடைய கோபமானது, தன்னைப் பார்க்கிலும் வலியவர்மேல் உண்டானால் அது தனக்கே கெடுதலாம். தன்னைப் பார்க்கிலும் எளியவர்மேல் உண்டானால் அந்தக் கோபத்தை விடக் கேட்டைத் தருவது வேறில்லை. (2)

303. ஒருவனுக்குக் கெடுதிகள் எல்லாம் கோபத்தினால் வருகின்றபடியால், அதை எவரிடத்திலும் மறக்கக்கடவர். (3)

304. துறந்தவர்க்கு அருளினாலே உண்டாகிய முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும், கெடுத்துக் கொல்லுகின்ற கோபத்தைப் பார்க்கிலும் வேறு பகைகளும் உண்டோ? இல்லை. (4)

305. ஒருவன் தன்னைத் துன்பம் வந்து அடையாமல் காக்க நினைத்தால், தன் மனத்திலே கோபம் வராமல் காக்கக்கடவன். அப்படிக் காவாவிட்டால் அந்தக்கோபம் தன்னையே கெடுக்குங்கொடுந்துன்பங்களை அடைவிக்கும். (5)

306. கோபம் என்னும் நெருப்புத் தனக்கு இடமானவரை அல்லாமல், அவருக்கு இனமாகிய இதோபதேசம் செய்கிற மரக்கலத்தையும் சுடும். (6)

307. கோபத்தைத் தன் வல்லமையைக் காட்டும் ஒரு குணமென்று கொண்டவன், அந்த வல்லமையை இழத்தல், நிலத்திலே அறைந்தவன் கை அந்நிலத்திலே படுதல் தப்பாதவிதம்போல் தப்பாது. (7)

308 அநேக சுடர்களையுடைத்தாய பெரியநெருப்பு வந்து தழுவினாற்போலும் துன்பம் தருமவைகளை ஒருவன் செய்தானாலும், அவன்மேலே கோபம் செய்யாமை கூடுமானால் அது சிறந்தது. (8)

309 தவஞ்செய்வோன் தன் மனத்தால் கோபத்தை ஒருபோதும் நினையாதிருந்தால், தான் நினைத்த பயன்கள் எல்லாம் ஒருமிக்க அடைவான். (9)

310. கோபத்திலே மிகுந்தவர் உயிருடையவராய் இருந்தாலும், இறந்தவரோடு சமமாவார். கோபத்தை விட்டவர், இறக்குந் தன்மையை உடையவராய் இருந்தாலும், அதனை நீங்கினரோடு சமமாவார். (10)

32-ஆம்-அதி-இன்னா செய்யாமை.

Not doing Evil.

[அதாவது தனக்கு ஒரு பிரயோஜனத்தைக் குறித்தாவது, வைராக்கியம் பற்றியாவது, மறதியினாலாவது, ஒருயிர்க்குத் துன்பம் தருமவைகளைச் செய்யாமை.]

311. ஒருவர் பிறர்க்குத், தபசாதனைகளைச் செய்து, யோகமார்க்க சிறப்புச் செல்வமாகிய அணிமா முதலிய செல்வங்களை அடைந்தாலும், அயலார்க்குத் துன்பங்களைக் கொடுத்தலைச் செய்யாதிருத்தலே, ஆகமங்கள் சொல்லிய வழியான மனமாசற்றவர்களுடைய துணிவாம். (1)

312. ஒருவன் தன்மேல் வைராக்கியங்கொண்டு, துன்பந் தருமவைகளைச் செய்தவிடத்தும், மறுபடியும் அப்படித் துன்பம் கொடுக்குமவைகளைத் தாம் செய்யாமையும் குற்றமற்றவருடைய துணிவாம். (2)

313. தான் முன்பு ஒரு துன்பமும் செய்யாதிருக்கத் தன்மேல் வைராக்கியங் கொண்டவர்க்கும், துன்பங்கொடுக்குமவைகளைத் துறந்தவன் செய்தால், அது கடக்க முடியாத பழியையும், பாவத்தையும் கொடுக்கும். (3)

314. தமக்குத் துன்பம் செய்தவரைத் துறந்தோர் தண்டித்தலாவது தாம் நாணும்படி, அவர்க்கு இனிமையான மகிழ்ச்சிகளைச் செய்து, அவர் செய்த தீமைகள், தாம் செய்த நன்மைகள் ஆகிய இரண்டையும் மறத்தலாம். (4)

315. தாங்கள், மற்றோர் உயிருக்கு வரும் துன்பத்தைத் தம்முயிர்க்கு வந்தது போல் காப்பாற்றாவிட்டால், உயிர் முதலானவைகளை உள்ளபடி அறிந்த அறிவினால் உண்டாகும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. (5)

316. இவை மனிதருக்குத் துன்பம் கொடுக்கும் என்று அனுமானப்பிரமாணத்தினாலே, தாம் அறிந்தவைகளைப் பிறனிடத்துச் செய்யாதிருத்தல் அறவினருக்கு வேண்டும். (6)

317. மனத்தோடு உண்டாகின்ற துன்பங்களான செயல்களை எக்காலத்திலும் எவர்க்கும் எவ்வளவு சிறிதாயினும் செய்யாதிருத்தலே முதன்மையான தருமமாம். (7)

318. பிறர் தன்னுயிர்க்குச் செய்யும் துன்பத்தைத் தான் கெடுதல் என்று அனுபவித்து அறிகின்றவன், மற்ற உயிர்களுக்கு அவைகளைத் தான் செய்தல் அறியாமையே. (8)

319. துறந்தவர் பிறருக்குத் துன்பங்களானவைகளை, ஒரு முகூர்த்தத்தின் முன்பாகத்திலே செய்தால், தமக்கு அவைகள் அந்த முகூர்த்தத்தின் பின்பாகத்திலே அவர் செய்யாமல் தாமே வரும். (9)

320. துன்பம் தருபவை எல்லாம் ஒன்றின் உயிருக்குத் துன்பம் தருபவைகளைச் செய்தவர் மேலனவாம். ஆதலால் தம்முயிர்க்குத் துன்பம் தருபவைகளைச் செய்யமாட்டார். (10)

33-ஆம்-அதி-கொல்லாமை.

Not Killing.

[அதாவது ஐந்து அறிவுயிர் முதல் ஓரறிவுயிர் கடையாக உயிர்களை மறந்தாகிலும் கொல்லுதல் செய்யாமை.]

321. ஓர் உயிரைக் கொல்லுதல் பாவச்செய்கைகள் எல்லாவற்றையும் தானே கொடுத்தலால், தருமங்கள் எல்லாமாகிய செய்கை எது என்று கேட்டால், அது ஓர் உயிரையும் கொல்லாமையேயாம். (1)

322. உண்ணப்பட்டதைப் பசித்த உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துத், தானும் உண்டு, ஐவகை உயிர்களையும் காப்பாற்றலே அறநூலுடையாரால் துறந்தவர்க்கு என்று தொகுத்துச் சொல்லப்பட்ட தருமங்கள் எல்லாவற்றிலும் மேலானதாம். (2)

323. நூல்களிலே சொல்லப்பட்ட தருமங்களுள் கொ

ல்லாமை என்பதற்குச் சமானமான தருமம் இல்லை. அது நீங்கினால் பொய்பேசாமையாவது அதன்பின்னே நல்லது. (3)

324. மோக்ஷத்தையும் முத்தியும் அடைதற்கு நல்லவழி எது என்று வினவினால் அது எந்த உயிரையும் கொல்லாமையாகிய தருமத்தினைக் காக்க நினைக்கும் வழியாம். (4)

325. பிறப்பு சீறற நிலையைப் பிறவாமைப் பொருட்டு அஞ்சி, இல்வாழ்க்கையைத் துறந்தவர் எல்லாருள்ளும், கொலைப் பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய தருமத்தை மறவாதவனே சிறந்தவனாவான். (5)

326. உயிரைக் கொண்டுபோகும் யமனும், கொலைசெய்யாமையை விரதமாகக் கொண்டு நடப்பவனுடைய வாழ்நாள் மேலே செல்லான். (6)

327. தானே மற்றொன்றின் உயிரைக்கொல்வதாகிய தொழிலைச் செய்யாதொழிக; தன்னுயிர் நீங்கிப்போமானாலும் அதைச் செய்யாதிருக்கக்கடவன். (7)

328. தேவர்கள் பொருட்டு யாகத்திலேகொன்றால் இன்பம் பெரிதாகும்படியான செல்வம் விருத்தியாகும் என்று சொல்லப்பட்டபோதிலும், துறந்தவர்க்கு ஓருயிரைக்கொல்ல, அதனால் உண்டாவதாகிய செல்வம் இழிந்ததாம். (8)

329. கொலைத் தொழிலை உடையவராகிய மனிதர் அந்தக் கொலைத்தொழிலை இழிவாய் அபிப்பிராயமுடையவராய் இருந்தாலும் அதை அறிவோருடைய மனத்திலே, புலைத்தொழிலாயத் தோன்றுவர். (9)

330. பாவச்சேர்க்கையான நோயுடம்புடனே, வறுமைமிகுந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை, இவர் முற்பிறப்பிலே உயிர் அவைகளை உடம்புகளினின்று நீக்கினவர் என்று இவ்வியல்புகளைத் தெரிந்தோர் சொல்லுவார். (10)

ஞானம்

[அந்த விரதங்களின் பிரயோஜனமாகிய ஞானம்சொல்லல்]

34-ஆம்-அதி-நிலையாமை.

Instability of Earthly Things.

[தோற்றமுடையவை எல்லாம் நிலையில்லாத் தன்மையாம்]

331. நிலையில்லாதபொருள்களை நிலையுள்ளனவென்று நினைக்கின்ற அற்பபுத்தியை உடையவராய் இருக்கை துறந்தவர்க்கு இழிவாம். (1)

332. ஒருவனிடத்துப் பெருஞ் செல்வம் வருதல் எப்படி என்றால், கூத்தாடுகின்ற சபையிலே காண்போர் கூட்டம் வந்தாற்போலும். அது போதலும் எப்படி என்றால், கூத்துமுடிந்து போனபிறகு அக்கூட்டம் போதல் போலும். (2)

333. நிலையில்லாக் குணத்தையுடைய செல்வத்தைப் பெற்றால், அதனால் செய்யப்படும் தருமங்களை அப்பொழுதே செய்யக்கடவன். (3)

334. உயிரானது நாளென்று அளவுசெய்யப்படுவதாகிய ஒரு கால அளவுபோல் தன்னைக்காட்டி, அறுத்துச்செல்கின்ற வாளினுடைய வாயில் அறுபட்டுவருகின்றது. (4)

335. பேசாதிருக்கும்படி நாவை அடக்கி விக்கலானது, எழுவதற்கு முன்னே, மோக்ஷத்துக்கு ஏதுவாகிய தருமமானது விரைந்து செய்யப்படும். (5)

336. இந்த உலகம் நேற்றுப் பிறந்தவன் இன்று இறந்தான் என்று சொல்லும் நிலையாமையின் பெருமையை யுடையது (6)

337. அறிவில்லாதவர், ஒரு பொழுதளவும் தம்முடையும் உயிர் நிற்கக் கூடியிருக்கையை அறியமாட்டார். அப்படியிருந்தும் கோடிக்குமேலான எண்ணங்களை எண்ணுகிறார்கள். (7)

338. உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள சிநேகமானது முன்னே தனியாயிருந்த முட்டையானது, பின்பு தனித்துக் கிடக்க அதனுள்ளிருந்த பறவை பருவம்வந்தவிடத்துப் பறந்து போம் தன்மையுடையது. (8)

339. ஒருவனுக்கு மரணம் வருதல் தூக்கம் வருதல் போலும். அதன் பிறகு பிறப்பு வருதல் தூங்கி விழித்தல் வருதல் போலும். (9)

340. வாதமுதலானவைகளின் வீடுகளாகிய உடம்புகளுள் ஒதுக்குக்குடியிருந்தே வந்த உயிர்க்கு என்றைக்கும் இருப்பதாகிய ஓர்வீடானது இதுவரைக்கும் கிடைக்கவில்லை போலும் (10)

35-ஆம்- அதி- துறவு.

Renunciation

[அதாவது புறமாகிய செல்வத்திலும் அகமாகிய உடம்பிலும் உண்டாகிய ஆசையை அவைகளது நிலையாமையைப் பார்த்து விடுதலாம்.]

341. ஒருவன் எந்தப் பொருளை எந்தப் பொருளை விட்டு நீங்கினனோ, அவன் அந்தப் பொருளினாலே அந்தப் பொருளினாலே துன்பம் அடைதல் இல்லை. (1)

342. எல்லாப் பொருளையும் துறத்தலால் ஒருவனுக்கு இப்பிறப்பிலே உண்டாகும் முறைமையையுடைய இன்பங்கள் பலவாம். ஆதலால் இன்பங்களை விரும்பினால், காலம் உண்டாக அப்பொருள்களைத் துறக்கக்கடவன். (2)

343. முத்தியை அடைவோர்க்குச் செவி முதலாகிய ஐம்பொறிகளுக்கு உரித்தான ஓசை முதலாகிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும். அப்படிக் கெடுக்கும்போது அந்தப் புலன்களை அனுபவிக்கற் பொருட்டுத் தாம் படைத்த பொருள்களை எல்லாம் ஒருமிக்க விடுதல் வேண்டும். (3)

344. தவஞ் செய்வோர்க்கு ஒரு பொருளிலும் ஆசையில்லாதிருக்கை இயல்பாகும். அது உடைத்தாயிருக்கை அத்தவத்தைப் போக்குதலால் மீண்டும் மயக்கத்துக்குக் காரணமாகும். (4)

345. பிறவியை நீக்கும் முயற்சியுடையோர்க்கு அந்தப் பிறப்பை நீக்குதற்கு உதவியாகிய உடம்பும் மிகையாம். அதற்கு மேலும் சில பொருள்களின்மேல் ஆசைப்படுதல் எற்றுதும்? (5)

346. தான் அல்லாத உடம்பை யான் என்றும் தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை எனது என்றும் நினைத்து அவைகளிலே ஆசைப்படுகிறதற்குக் காரணமாகிய மயக்கத்தைக் கெடுப்பவன் தேவர்களுக்கும் அடைதற்கு அருமையான முத்தி உலகத்தை அடைவான். (6)

347. ஆசை மிகுதல் காரணமாக இருவகைப்பற்றினையும் விடாதவரைப் பிறவித்துன்பங்கள் இறுகப்பற்றிவிடலாம். (7)

348. முற்றுந்துறந்தவர் முத்தியையடைந்தவராவர். அப்படித் துறவாதவர் மயங்கிப்பிறப்பாகிய வலையில் அகப்பட்டவராவர். (8)

349. ஒருவன் இருவகைப் பற்றையும் நீக்கினபொழுதே அது அவனது பிறவியை நீக்கும். அவை அறாதபொழுதே அவற்றால் பிறத்தலும் இறத்தலும் வருகின்ற நிலையாமையானது அறியப்படும். (9)

350. எல்லாப்பொருள்களிலும் பற்றி நின்ற பற்றில்லாத கடவுள் அருளிய முத்தி வழியே நல்ல வழியென்று மனத்தில் கொள்ளக்கடவர். அதைக்கொண்டு விடாதவர்க்கு பற்று விடுதற்குவேண்டிய உபாயத்தை அமைத்துக்கொண்டு செய்யக்கடவர். (10)

36-ஆம்-அதி மெய்யுணர்தல்

Perception of the True.

[அதாவது பிறப்பு முக்திகளையும் அவற்றின் காரணங்களையும் * விபரீத சந்தேகங்களால் அல்லாமல் உண்மையாய் அறிதல்.]

351. உண்மையாய்ப் பொருள்களல்லாதவைகளை உண்மைப்பொருள்களென்று அறிகின்ற விபரீத ஞானத்தினால் மாட்சிமைப்படாத பிறவி, இன்பமில்லாதது. (1)

352. அஞ்ஞானம் நீங்கி, குற்றமற்ற மெய்ஞானத்தைத் தெரிந்தவர்க்கு, அது பிறவியை நீக்கி, முத்தியைக் கொடுக்கும். (2)

353. சந்தேகம் நீங்கி உண்மையுணர்ந்தவர்க்கு, அடைகின்ற பூலோகத்தைப் பார்க்கிலும், அடையவேண்டியதாகிய மோக்ஷலோகம் சமீபமாக உடையது. (3)

354. உண்மை அறிதல் இல்லாதவர்க்கு ஐந்து புலன்களிலும் செல்லுதலின் வேறுபாட்டால் ஐந்தாகிய உணர்வு தமக்கு வசப்பட்டபோதிலும் அதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. (4)

355. எந்தப்பொருள் எப்படிப்பட்டதாயத் தோன்றினும் அது தோன்றிய விதத்தைக்கண்டுவிடாமல், அந்தப்பொருளிலிருந்த மெய்யாகிய பொருளைக்காணுகையே மெய்யுணர்வாம். (5)

* கயிற்றைப்பாம்பு என்று அறிதல் போல்வன விபரீத ஞானம் என்றும், கயிறோ பாம்போவென்று துணியாதது போல்வன சந்தேக ஞானமென்றும் அறிக.

ய துன்பமும் அக்கர்த்த வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்குக்காரணமாகிய விதியாம்.]

371. ஒருவனுக்குக் கைப்பொருள் உண்டாதற்குக் காரணமாகிய ஊழினாலே முயற்சியுண்டாகும். அது அழிதற்குக் காரணமாகிய ஊழினால் சோம்பல் உண்டாகும். (1)

372. ஒருவனுக்கு எல்லா அறிவும் உண்டாயிருந்தும் கைப்பொருளை இழத்தற்குக் காரணமாகிய ஊழ் வந்து அடைந்த காலத்து, அது அந்த அறிவைப் பேதைமையாக்கும். அவன் அறிவு சுருங்கிய விடத்தும் கைப்பொருள் உண்டாதற்குக் காரணமாகிய ஊழ் வந்து அடைந்த விடத்து அது அந்த அறிவை விருத்தி செய்யும். (2)

373. அறியாமையை உண்டாக்குவதாகிய ஊழுடையவன் நுட்பமான பொருள்களைத் தெரிவிக்கும் பலநூல்களையும் கற்றவனாயிருந்தாலும், அவனுக்கு மறுபடி தன் ஊழினால் ஆகிய பேதைமையறிவே மிகும். (3)

374. உலகத்திலே ஊழின் இயற்கையானது இரண்டு கூறுபட்டிருக்கின்றபடியால், செல்வமுடையவராதலும், அறிவுடையவராதலும் வேறு வேறாய் இருக்கின்றன. (4)

375. விதிவசத்தால் செல்வத்தை உண்டாக்குவதற்கு நல்லவை எல்லாம் தீயவையாய் அழிக்கும், அல்லாமலும் தீயவை தாமும் நல்லவையாய் ஆகும். (5)

376. விதியால் தமக்கு உரியவை ஆகாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் அவை தம்மிடத்து நில்லாமல் போகும், தமக்கு உரியவையாகிய பொருள்களைப் புறத்தே கொண்டுபோய்ச் சொரிந்திட்டாலும் அது தம்மை விட்டு நீங்காது. (6)

377. ஐம்பொறிகளால் அனுபவிக்கப்படும் பொருள்கள் கோடியை முயற்சி செய்து சேர்த்தவர்களுக்கும் கடவுள் விதித்த வகை அல்லாமல் அனுபவித்தல் உண்டாகாது. (7)

378. ஊழ்வினைகள் துன்பங்களை அடைவிக்காமல் நீங்குமானால், வறுமையினாலே அனுபவித்தல் இல்லாதவர், இல்வாழ்க்கையைத் துறக்கும் கருத்துடையவராவார். (8)

379. நல்வினைப்பயன் தரும்பொழுது அதை நீக்கும் விதம் தேடாமல் நல்லவையென்று இசைந்து அனுபவிப்பார்.

மற்றைத் தீவினைப்பயன் தரும்பொழுது அதனுல் விளையும் துன்பங்களையும் அப்படி அனுபவியாமல், நீக்கும் விதம் தேடித் துன்பப்படுவது அறிவன்று. (9)

380. ஊழை விலக்குதற் பொருட்டு ஓர் உபாயத்தை ஆராய்ந்தாலும் அது அதற்கு முன் வந்து நிற்கும். ஆகையால் ஊழைப் பார்க்கிலும் மிக்க வலிமையுடையவை ஒன்றுமில்லை. (10)

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

Wealth.

[பொருளாவது, தருமவழியினலே சேர்க்கப்பட்ட பொன், மணி முதலானவையாம். அது தனக்குத் துணைக்காரணமாகிய அரசனிடை செல்லவே அடங்கும். அரசனியாவது காவலை நடத்தும் முறையாம். அதனை அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என மூன்று இயல்களால் அருளிச்செய்தார்.]

அரசு இயல்

Royalty.

[அரசாவது உலகத்திற்கு உயிரெனச்சிறந்த அரசனுடைய தன்மையாம்.]

39-ஆம்-அதி இறைமாட்சி.

The greatness of a King.

[அதாவது அரசனுடைய நற்குண நற்செய்கைகளாம்.]

381. சேனை, நாடு, பொருள், அமைச்சர், நட்பு, அரண் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையும் உடையவன், அரசருள் ஆண்சிங்கம் போல்வான். (1)

382. அஞ்சாமை, கொடை, விவேகம், ஊக்கம், முத

சிய நான்கு குணங்களும், இடைவிடாது நிற்றலே அரசனுக்கு இயல்பாக இருக்கவேண்டும். (2)

383. அரசருக்குக் காரியங்களிலே விரைவுடைமை, ஏற்ற கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய மூன்று குணங்களும் ஒருபொழுதும் நீங்காமல் இருக்கவேண்டும். (3)

384. தனக்குச் சொல்லப்பட்ட தருமத்திலே சிறிதும் தவறாமல் நடந்து, தருமமல்லாதவைகளைத் தன்னுடைய நாட்டிலும் உண்டாகாது விலக்கி, வீரத்திலே குறையாத மானத்தை உடையவனே அரசனாவான். (4)

385. தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேலும் மேலும் உண்டாக்கலும், அப்படி வந்தவற்றை ஓரிடத்தே சேர்த்து வைத்தலும், அதைப் பிறர் அபகரித்துக்கொள்ளாமல் காத்தலும், காத்து வைக்கப்பட்ட பொருள்களை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுச்செலவு செய்தலும் வல்லவனே அரசனாவான். (5)

386. அரசன் வழக்குச் சொல்பவர்க்கும், தரித்திரம் அடைந்து பொருளை யாசித்தவர்க்கும், பார்த்தற்கு எளியவனாகி, எவரிடத்தும் கடுமையான சொல்லைச் சொல்லாதவனுமாயிருந்தால், அந்த அரசனது நிலத்தை உயர்ந்தோர் எல்லா நிலங்களினும் மேலானதாகச் சொல்லுவார். (6)

387. இனிய சொல்லுடனே கொடுத்துக் காப்பாற்றவல்ல அரசனுக்கு இந்த உலகமுழுதும் ஆளுதல் அல்லாமல், நினைத்தவையெல்லாம் உண்டாகும். (7)

388. அறநூலிலும் நீதிநூலிலும் சொல்லும் வழிப்படிப் பிறரை வருத்தாமல் காத்தலையும் செய்யும் அரசன் பிறப்பிலே மனிதனாக இருந்தாலும், மனிதர்களுக்குச் செயலினால் கடவுளென்று வேறுவைக்கப்படுவான். (8)

389. கண்டித்துப் புத்தி சொல்லும் அமைச்சருடைய சொற்களைத் தன் செவிப் பொறுதாகவும், அவைகளின் பயனைக் குறித்துப் பொறுக்கும் சிறந்த அறிவுடைய அரசன், பூமி முழுதும் தானே ஆள்வான். (9)

390. வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், எவரிடத்தும் முகமலர்ந்து இன்சொற் சொல்லுதலும், முறை செய்தலும், தளர்ந்தோர்களைக் காப்பாற்றலும் ஆகிய இந்நான்கு

செல்வங்களையும் உடையவன் அரசர்களுக்கெல்லாம் விளக்குப் போல்வான். (10)

40-ஆம்-அதி-கல்வி

Learning.

[அதாவது தான் அறிதற்கு உரியதான நூல்களைக் கற்றல்.]

391. ஒருவன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்களை உணர்த்தும் நூல்களைக் குற்றம் நீங்கக் கற்கக்கடவன். அப்படிக் கற்றால் அதற்குத் தக்கபடி அது சொல்லுகின்ற வழியிலே நிற்கக்கடவன். (1)

392. தெரியாதவர்களாலே எண் என்று சொல்லுவனவும், மற்றைய எழுத்து என்று சொல்லுவனவும் ஆகிய இந்த இரண்டு நூல்களையும் அறிந்தவர், மக்களுக்குக் கண்களாகும் என்று சொல்லுவர். (2)

393. படித்தவரே கண்ணுடையவரென்று உயர்த்திச் சொல்லப்படுவார். மற்றப் படியாதவர் முகத்திலே இரண்டு புண்களுடையவரென்று இகழ்ந்து சொல்லப்படுவார். (3)

394. படித்தறிந்தவருடைய செய்கையாவது, எவரையும் அவர் சந்தோஷப்படும்படிச் சேர்ந்து, இனி அவரை நாம் எப்பொழுது சேர்வோம் என்று நினைக்கும்படிப் பிரிதலேயாம். (4)

395. பின் நிற்றலுக்கு வெட்கப்படாது கற்றல் நல்லது. ஆதலால் செல்வர் முன்னே எளியவர் நிற்கும் விதம் போல், தாமும் ஆசிரியர் முன் கற்கவேண்டும் என்னும் ஆசையினாலே தாழ்ந்து நின்று படித்தவர் உயர்ந்தவராவார். அப்படி நிற்றலுக்கு வெட்கப்பட்டுப் படியாதவர் எப்போதும் இழிந்தவரேயாவர். (5)

396. மணலிலே கிணறு எப்படித் தோண்டிய அளவினதாக நீர் சுரக்குமோ, அப்படியே மனிதருக்கு அறிவானது படித்த அளவினதாகச் சுரக்கும். (6)

397. படித்தவருக்குத் தன் நாடும் தன் ஊருமே அல்லாமல் யாதாயினும் ஒரு நாடும் நாடாகும்; யாதாயினும் ஒரு ஊரும்

னூராகும், இப்படியானால் ஒருவன் இறக்கும் பரியந்தம் படிக்காமல் காலங்கழிக்கிறது என்ன நினைத்து? (7)

398. ஒருவனுக்குத்தான் ஒரு பிறப்பிலே கற்ற கல்வியானது ஏழு பிறப்புகளிலும் போய் உதவுதலையுடையதாகும். (8)

399. கற்றவர் தாங்கள் இன்பமடைதற்குக் காரணமாகிய கல்விக்கு உலகத்தோர் இன்பம் அடைகின்றபடியால், அந்தச் சிறப்பு நோக்கிப் படித்தவர்கள் பின்னும் அந்தக்கல்வியையே மேலும் மேலும் விரும்புவர். (9)

400. கல்வியே ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம். அது நீங்கிய இரத்தினம், பொன் முதலான செல்வம் செல்வம் அல்ல. (10)

41-ஆம்-அதி-கல்லாமை.

Ignorance.

[அதாவது கற்றலைச் செய்யாமை.]

401. தான் நிரம்புதற்குக் காரணமாகிய நூல்களைப் படிக்காமல், ஒருவன் சபையிலே ஒன்றைச்சொல்லுதல் சூதாடுதற்கு இடக்கை ஏற்படுத்திக்கொள்ளாது உண்டையுருட்டிச் சூதாடுதற் போலும். (1)

402. கல்வியில்லாத ஒருவன் சபையினிடத்தே ஒன்று சொல்ல விரும்பினால், அது அவனுக்கு அவமானத்தைக் கொடுக்கும். (2)

403 படிக்காதவரும், தாமே தம்மையறிந்து, கற்றோர் கூடிய சபையிலே, ஒன்றும் சொல்லாதிருந்தால, மிக்க நல்லவராவார். (3)

404. படிக்காதவனுடைய அறிவுடைமை, சிற்சிலவிடத்து மிக நன்றாயிருந்தாலும், அறிவுடையார் அதனை அறிவுடைமையாகக் கொள்ளமாட்டார். (4)

405. நூல்களைப்படிக்காத ஒருவன் யான் அறிவுடையேன் என்று தன்னை மதிக்கும் மதிப்பானது கற்றவர்கள் முன் பேசக்கெடும். (5)

406. படிக்காதவர்கள் காணப்பட்டுக்கொண்டிருக்கையால் உளர் என்று சிலர் சொல்லுதலும் அன்னமே அல்லாமல், தம

க்கும் பிறருக்கும் பிரயோஜனப்படாமையால், நெல் முதலியவை விளையாத களர் நிலத்தை ஒப்பர். (6)

407. நுட்பமாகி, மாட்சிமைப் பட்டுப்பல நூல்களிலும் சென்ற அறிவில்லாதவனுடைய எழுச்சியும் அழகும், மண்ணைச் சாந்தினால் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட பாவையின் எழுச்சியும் அழகும் போலும். (7)

408. படிக்காதவரிடத்திலே உண்டாகிய செல்வம், படித்தவர்களிடத்திலே உண்டாகிய வறுமையைப்பார்க்கிலும் துன்பம் செய்வதேயாம். (8)

409. கல்வியறிவில்லாதவர் உயர்ந்த குலத்திலே பிறந்தவராயிருந்தபோதிலும், கீழ்க்குலத்திலே பிறந்திருந்தும் கற்றவரது பெருமை அளவினதாகிய பெருமை இல்லாதவராவர். (9)

410. விளங்கிய நூல் கற்றவருடன் கல்லாதவனை நோக்க, மிருகங்களுடன் மனிதர் எவ்வளவு நன்மையுடையவரோ அவ்வளவு தீமையுடையவராவர். (10)

42-ஆம்-அதி-கேள்வி.

Hearing.

[அதாவது கேட்கவேண்டிய நூலின் பொருள்களைப் படித்தவர் சொல்லக் கேட்குதல்.]

411. ஒருவனுக்குச் சிறப்புடைய செல்வம், செவியால் உண்டாகும் செல்வமே. அதுவே மற்றைய செல்வங்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் மேலானது. (1)

412. காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாத காலத்திலே வயிற்றுக்குச் சிறிது உணவு கொடுக்கவேண்டும். (2)

413. செவியுணவாகிய கேள்வியையுடையவர் பூலோகத்தவராக இருந்தபோதிலும், அவியுணவையுடைய தேவரோடு சமமாவர். (3)

414. கேள்வி, ஒருவனுக்குத் துன்பம் நேர்ந்தகாலத்து உதவித் துணையாகலால், புருஷார்த்தங்களைச் சொல்லும் நூல்களைப் படிக்காதிருந்தாலும், அவற்றின் பொருளைக் கற்றவர்கள் சொல்லக்கேட்கவேண்டும். (4)

415. ஆசிரியாசாரத்தைச் செலுத்தும் ஆசாரத்து ஒழுக்கத்தையுடையவருடைய வாயினின்றும் உண்டாகும் சொற்கள் சறுக்கும் குணமுடைய சேறு நிலத்தில், நடப்பவருக்கு ஊன்றுகோல்போல் உதவிசெய்யும். (5)

416. ஒருவன் சிறிதளவாகிலும் உறுதிப்பொருளைக் கேட்க்கடவன். அது அவ்வளவாக இருந்தபோதிலும் நிறைந்த பெருமையைக் கொடுக்கும். (6)

417. பொருள்களைத் தாமும் நுட்பமாய் ஆராய்ந்து தெளிந்து, அதன்மேலும் சம்பூரணமான கேள்வியையுடையார், வித்தியாசப்பட அறிந்தகாலத்தும் தமக்குப் பேதைமையை உண்டாக்கும் சொற்களைச் சொல்லார். (7)

418. கேள்வியாலே துளைக்கப்படாத செவிகள் தமக்கு விஷயமான ஓசைமாத்திரத்தைக் கேட்டாலும் செவிடாம் குணத்தை உடையன. (8)

419. நுட்பமான கேள்வியை உடையவர் அல்லாதவர் வணக்கத்தைக் கொடுக்கிற சொற்களையுடையராதல் இல்லை. (9)

420. காதுகளால் அனுபவிக்கப்படும் சுவைகளை உணராமலும், வாயால் உண்ணப்பட்ட சுவையையறியும் அறிவினையுமுடைய மனிதர், இறந்தாலும், வாழ்ந்தாலும் உலகத்துக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. (10)

43-ஆம்- அதி- அறிவுடைமை.

Wisdom.

[அதாவது கல்வி கேள்விகளினாலாகிய அறிவோடு உண்மையறிவு உடையவனாதல். அல்லாமலும் "அறிவாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணர்தல்" என்று தொல்காப்பிய பொருளியல் 53-வது சூத்திரம் "ஒப்புமுருவும்" என்பதின் விசேஷ உரையில் நச்சினார்க்கினியார் கூறியுள்ளார்.]

421. அரசருக்கு அறிவென்பது, முடிவுவாராமல் காக்கும் படையாம். அது அல்லாமல் பகைவர்க்கு அழிக்க முடியாத உள் அரணுமாம். (1)

422. மனத்தை அதுபோன விஷயத்தில் செல்லவிடாமல், அந்த விஷயங்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து கெட்டதை நீக்கி நல்லதிலே போகவிடுவதே அறிவு. (2)

423. யாதொரு பொருளை யார் யார் சொல்லக்கேட்டாலும், அந்தப்பொருளின் உண்மையாகிய பயனைக் காண்பதே அறிவாம். (3)

424. தான் சொல்லும் சொற்களை அருமையான பொருளாய் இருந்தாலும், எளிதில் பொருள் விளங்குமாறு மனதில் படும்படி சொல்லித் தான் பிறர் வாயில் கேட்கும் சொற்களில் நுட்பமான பொருளைக் காண்பது அருமையாய் இருந்தபோதிலும், அதனைக் காணவல்லதே அறிவாம். (4)

425. உயர்ந்தோரைச் சிநேகமாக்குவது நல்லறிவுக்கு மேன்மையாகும். அதில் முன்னே விரிதலும் பின்னே குவிதலும் இல்லாமல் எப்பொழுதும் ஒரே தன்மையுடையதாய் இருப்பது அறிவாம். (5)

426. உலகம் எந்தவிதத்தில் நடக்கின்றதோ அந்தவிதத்தில் உலகத்தோடு பொருந்தும்படி நடப்பதே அரசனுக்கு அறிவாம். (6)

427. அறிவுடையவர், வரக்கடவதனை முன்னே அறியவல்லவர். அதை முன்னே அறியமாட்டாதவர் அறிவில்லாதவராவர். ()

428. பயப்படவேண்டியதற்குப் பயப்படாதிருத்தல் பேதைமையாம். பயப்படவேண்டியதற்குப் பயப்படுதல் அறிவுடையார் தொழிலாம். (8)

429. வரக்கடவதாகிய துன்பத்தை முன்னே அறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு, அவர் நடுங்கும்படி வருவதோர் துன்பமும் இல்லை. (9)

430. அறிவுடையார் வேறு ஒன்றும் இல்லாதவராய் இருந்தாலும், எல்லாமுடையாராவர். அறிவில்லாதார் எல்லாமுடையவராயிருந்தாலும் இல்லாதவராவர். (10)

44-ஆம் அதி-குற்றம் கடிதல்
The Correction of Faults

[அதாவது காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் என்னும் ஆறு குற்றங்களையும் அரசன் தன்னிடத்திலே உண்டாகாமல் நீக்குதலாம்.]

431. மதம், குரோதம், காமம், ஆகிய குற்றங்கள் இல்லாத அரசருடைய செல்வம், மேம்பாடமிக்க பெருமிதத்தையுடையதாம். (1)

432. வேண்டுமிடத்துப் பொருள் கொடாதிருத்தலும், நன்மையின் நீங்கியமானமும், அளவில்லாத மகிழ்ச்சியும் அரசருக்குக் குற்றங்களாம். (2)

433. பழிக்கு அஞ்சுவோர் தினையளவாகிய சிறிய குற்றம் தம்மிடத்து வந்தாலும், அதனை யவ்வளவாக நினைக்காமல் பனையின அளவாகிய பெரிதாகக்கொள்ளுவார். (3)

434. தனக்கு முடிவைக் கொடுக்கும் பகைக்குற்றமே ஆதலால், அதைத் தன்னிடத்து வாராமையே பயனாகக் கொண்டு காக்கவேண்டும். (4)

435. குற்றம் வருவதற்கு முன்னே அதனை வாராமல் காக்காத அரசனுடைய வாழ்க்கை, அது வந்தால் தீயின் முகத்திலே நின்ற வைக்கோலின் கூட்டம் போலக் கெடும். (5)

436. முன்னே தன் குற்றத்தை நீக்கிப்பின்னே பிறர் குற்றத்தைக்காண வல்லவனானால், அரசனுக்கு உண்டாவதாகிய குற்றம் ஒன்றுமில்லை. (6)

437. செல்வத்தினாலே தனக்குச் செய்து கொள்ளவேண்டியவைகளைச் செய்து கொள்ளாமல், அதனிடத்து உலோபஞ் செய்தவனுடைய பொருள் பின்னுள்ளதாகும் குணம் இல்லாமல் வீணாகக்கெடும். (7)

438. பொருளை விடவேண்டிய விடத்து விடாது, பற்றுதல் செய்யும் உள்ளமாகிய உலோபத்தன்மையாம் குற்றத்தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து நினைக்கப்படுவது ஒன்றல்ல; பலவாம். (8)

439. எந்தக்காலத்திலும் (மிக உயர்ந்தகாலத்திலும்) தன்னை மதத்தினாலே நன்கு மதியாதிருக்கக்கடவன். தனக்கு நன்மையைக் கொடுக்காததொழில்களை மனத்தினால் விரும்பாதிருக்க. (9)

440. தான் விரும்பிய பொருள்களைப் பகைவர் அந்த விருப்பத்தையறியாதிருக்கும்படி அனுபவிக்கவல்லவனானால், அவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணமானது குற்றமாம். (10)

45-ஆம்-அதி- பெரியோரைத் துணைக்கோடல்.

Seeking the Aid of Great Men.

[அதாவது காமம் முதலிய ஆறுவகைக் குற்றங்களையும் நீக்கிய

அரசன், தன்னைக் குற்றமில்லாமல் நல்ல வழியிலே செலுத்தும் பேரறிவுடையவனைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல்;

441. தருமத்தின் நுட்பத்தை அறிந்து தன்னைப்பார்க்கிலும் முதிர்ந்த அறிவுடையோர் சிநேகத்தை, அதன் அருமையைத் தெரிந்து கொள்ளும் திறமறிந்து, அரசன் கொள்ளக்கடவன். (1)

442. தெய்வத்தாலாவது அல்லது மனிதராலாவது வந்த துன்பங்களை நீக்கி விலக்கி, பின்பு அப்படிப்பட்டவை வாராதபடி முன் அறிந்து, காக்கவல்ல அறிவுடையவரை அவர் சந்தோஷப்படுமவைகளைச் செய்து அரசன் துணையாகக் கொள்ளக்கடவன். (2)

443. அரசனுக்கு அருமையான பேறுகள் பலவற்றுள்ளும் அருமையானது பெரியவர்களை அவர் சந்தோஷிக்கத்தக்கவைகளை அறிந்து செய்து, தமக்குச் சிறந்தவராகக் கொள்ளுதலே. (3)

444. அரசனுக்கு வலியுடைமை பலவற்றுள்ளும் முதன்மையானது அறிவு முதலானவைகளிலே தம்மைப்பார்க்கிலும் மிகுந்து, இருப்பவரைத் தமக்குச் சிறந்தவராகக் கொண்டு அவர் வழியிலே தாமும் நடத்தலே. (4)

445. மந்திரிகளைக் கண்ணாகக்கொண்டு பூமிபாரம் நடத்துதலால், அரசன் அப்படிப்பட்ட மந்திரிகளை ஆராய்ந்து, தனக்குத் துணையாகக் கொள்ளக்கடவன். (5)

446. போக்கியமான இனத்தினையுடையவனாகித் தானும் தெரிந்து நடக்கவல்ல அரசனைப் பகைவர் செய்யக்கிடக்கிறது ஒன்றுமே இல்லை. (6)

447. கெட்டவைகளைக் கண்டால் நெருங்கிச் சென்று கோபித்துப் புத்திசொல்லும் துணையாம் குணத்தையுடையவரை இவர் நமக்குச் சிறந்தவரெனக்கொண்டு ஆளுகிற அரசனைக் கெடுக்கும் பகைவர் உலகத்தில் ஒருவருமில்லை. (7)

448. கண்டித்துப் புத்தி கூறுதற்குரியவரை அரசன் தனக்குத் துணையாகக் கொள்ளாமையால், பகையாகக் கெடுப்பவர் இல்லாதிருந்தாலும் தானே கெடுவான். (8)

449. முதலில்லா வியாபாரிகளுக்கு லாபம் இல்லாதது போலத், தம்மைத்தாங்குவதாகிய துணை இல்லாத அரசருக்கு அதனால் வரும் நிலையானது இல்லை. (9)

450. அரசன் பெரியோரோடு நட்பினைக்கொள்ளாது விடுதல், தான் தனியனாய் இருந்துகொண்டு, பலரோடு விரோதம் கொள்ளுதலைப் பார்க்கிலும், பத்துமடங்குத் தீமையுடையதேயாம். (10)

46-ஆம்-அதி சிற்றினஞ்சேராமை.

Avoiding of Mean Associations.

[அதாவது சிறிய இனத்தைச்சேராதிருத்தல். சிறிய இனமாவது நல்லதிலே நன்மையும் தீயதிலே தீமையும் இல்லை என்போரும், காமுகரும், வஞ்சகரும், கூத்தாடியும் முதலான கூட்டம்.]

451. பெரியோர் இயல்பு சிற்றினத்துக்கு அஞ்சும். மற்றைச் சிறியோர் இயல்பு அது சேர்ந்தபோதே தனக்கு உறவாக எண்ணித் துணியும். (1)

452. நிலத்தின் இயல்பினாலே அதில் சேர்ந்த நீர் தன் தன்மை வேறுபட்டு அந்த நிலத்தின் தன்மையதாகும். அதுபோல மனிதருக்கு அறிவும் தாம் சேர்ந்த இனத்தின் இயல்பினாலே, தன் தன்மை வேறுபட்டு அந்த இனத்தின் தன்மையதாகும். (2)

453. மனிதருக்குப் பொது அறிவு தம்முடைய மனம் காரணமாக உண்டாகும். இவன் இப்படிப்பட்ட குணத்தை உடையவன் என்று உலகத்தாராலே சொல்லப்படுகிற சொல்லானது இனம் காரணமாக உண்டாகும். (3)

454. ஒருவனுக்குச் சிறந்த அறிவானது, மனத்தினிடத்தே உண்டாவது போலக்காட்டி, அவன் சேர்ந்துள்ள இனத்தினால் உண்டாகும். (4)

455. அந்த அறிவு வெளிப்படுதற்கு இடமாகிய மனம் பரிசுத்தமாகும் தன்மையும், செய்தொழில் பரிசுத்தமாகும் தன்மையும், ஆகிய இரண்டும் ஒருவனுக்கு இனம் பரிசுத்தமாகும் தன்மையினால் உண்டாகும். (5)

456. மனம் பரிசுத்தமானவர்க்குப் புத்திரசம்பத்து நன்றாக உண்டாகும். இனம் பரிசுத்தமானவர்க்கு நல்லதாகாத செயல் ஒன்றுமில்லை. (6)

457. நிலைபெறும் உயிர்களுக்கு மனத்தின் நன்மையானது

செல்வத்தைக்கொடுக்கும். இனத்தின் நன்மையாவது, அதனோடு எல்லாப்புகழையுங் கொடுக்கும். (7)

458. மனநன்மையை முன் நல்வினைப்பயனால் தாமே யுடையவராய் இருந்தபோதிலும், பலகுணங்களால் நிறைந்தோர்க்கு இனநன்மையாவது அதற்கு வலி செய்தலையுடையதாம். (8)

459. மனநன்மையினாலே ஒருவனுக்கு மறுமையின்பம் உண்டாம். அதற்கு அச்சிறப்புந்தானும் இனநன்மையால் வலி பெறுதலை உடையதாம். (9)

460. ஒருவனுக்கு நல்ல இனத்தைப் பார்க்கிலும் மிகுந்த துணையுமில்லை. தீய இனத்தைப்பார்க்கிலும் மிகுந்த பகையு மில்லை. (10)

47-ஆம்-அதி தெரிந்துசெயல்வகை.

Acting after due consideration.

[அதாவது அரசன் தான் செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யும் வகைமை.]

461. தொழில் செய்யுங்காலத்து அதனால் அழிவனவையும் அழிந்தால் பின் ஆவனவையும், பிற்காலத்திலே தரும் இலாபத்தையும் ஆராய்ந்து பொருந்துவதாக இருந்தால் செய்யக்கடவன். ()

462. தாம் அறிந்துகொண்ட இனத்துடனே செய்யுந் தொழிலை ஆராய்ந்துபின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்க வல்ல அரசருக்குப் பெறுதற்கரிய பொருள் ஒன்றுமில்லை. (2)

463. அறிவுடையார் பின் அடையக்கடவதாகிய இலாபத்தை நோக்கி, முன் பெற்றுள்ள முதலையும் இழத்தற்குக் காரணமாகிய செயற்றொழிலை மேற்கொள்ளார். (3)

464. தமக்கு அவமானம் என்னுங்குற்றமுண்டாதலை அஞ்சுவோர் இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து நிச்சயமில்லாத தொழிலை ஆரம்பித்துச் செய்யமாட்டார். (4)

465. சென்றால் நடக்கும் விதங்களை எல்லாம் முழுதும் எண்ணாமல், செலவாகத்தை எண்ணிப்பார்த்து, அரசன் பகைவர்

போலே, போர்க்குச்செல்லுதல் அந்தப் பகைவனை அவர் உள்ள இடத்திலேயே பலப்படுத்துவதாகிய ஒரு வழியாம். (5)

466. அரசன் தன் தொழில்களிலே செய்யக்கூடாத காரியங்களைச் செய்தால் கெடுவான். செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாதிருந்தாலும் கெடுவான். (6)

467. செய்யவேண்டிய காரியங்களை முடிக்கும் உபாயத்தை எண்ணி ஆரம்பிக்கக்கடவன். ஆரம்பித்தபிறகு எண்ணுவோமென்று ஒழிதல் குற்றமாம். (7)

468. முடியும் உபாயத்தால் தொழிலை முயற்சி செய்யாத முயற்சியானது, துணைவர் பலரிருந்து காத்தபோதிலும் குற்றப்படும். (8)

469. வேற்று அரசர்களுடைய குணங்களை ஆராய்ந்து அறிந்து, அவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், அவரிடத்து நல்ல உபாயத்தைச் செய்தலினாலும் குற்றம் உண்டாம். (9)

470. அரசன் தொழில் முடித்தற் பொருட்டுத் தம் நிலைக்குப் பொருந்தாத உபாயங்களைச் செய்தால், உலகம் அங்கீகரியாது. ஆகலால் அந்த உலகத்தால் இகழப்படாத உபாயங்களை ஆராய்ந்து செய்யக்கடவன். (10)

48-ஆம்-அதி- வலி அறிதல்.

The Recognition of Power in an Opponent.

[அதாவது நால்வகை உபாயங்களுள் தண்டம் செய்யக்குறித்த அரசனானவன் நால்வகை வலிமைகளையும் அளந்து அறிதலாம்.]

471. தான் செய்யக்கருதிய தொழிலது வலிமையையும், அதனைச் செய்து முடிக்குந் தன் வலிமையையும், அதனை விலக்கும் பகைவன் வலிமையையும், இருவருக்கும் துணையாயுள்ளோர் வலிமையையும் ஆராய்ந்து, தன் வலிமை மிகுந்தால் அந்தத்தொழிலைச் செய்யக்கடவன். (1)

472. தம்மால் முடியும் தொழிலையும், அதற்குத்தெரியவேண்டுவதாகிய வலிமையையும், அறிந்து எப்பொழுதும் மனம், மொழி, மெய்களை அதனிடத்து வைத்துப் பகைவர் மேல் செல்லும் அரசருக்கு முடியாத பொருள் ஒன்றுமில்லை. (2)

473. தலைவனுக்குடைய சத்ருவுடைய வலிமையின் அளவைத் தெரிந்துகொள்ளாது, உற்சாகத்தினால் தம்மைப் பார்க்கிலும் வலியவரோடு போர்செய்ய ஆரம்பித்துப் பின் அதை முடிக்க வகை தெரியாமல் நடுவிலே கெட்ட அரசர் உலகத்திலே பலராவர். (3)

474. பக்கத்து அரசருடன் பொருந்தி நடத்தலும் செய்யாதவனாய், தன்னுடைய வலியின் அளவை அறியானாயும், தன்னைப் புகழ்ந்துகொண்டு அந்த அரசருடன் பகைத்துக்கொள்பவன் சீக்கிரத்தில் கெடுவான். (4)

475. மயிலிறகை ஏற்றப்பட்ட பண்டியும் சுமக்கும் அளவுக்குமேல் ஏற்றப்பெற்றால் அச்சு முறியும். (5)

476. ஒரு மரக்கொம்பின் நுனியிலே ஏறி நின்றவர் உற்சாகத்தினால் அதைக்கடந்து மேலும் ஏற முயற்சி செய்தால், அது அவர் உயிருக்கு முடிவைக் கொடுக்கும். (6)

477. கொடுக்கும் வழியினாலே தம்மிடத்தில் இருக்கும் பொருளின் அளவை அறிந்து அதற்குத் தக்கபடி கொடுக்கக்கடவன். அப்படிக் கொடுப்பதானது பொருளைக் காப்பாற்றி நடக்கும் வழியாம். (7)

478. அரசனுக்குப் பொருள் வரும் வழி சிறியதாக இருந்தபோதிலும், செலவாகும் வழியின் அளவு அதைப்பார்க்கிலும் அதிகமாக இல்லாவிட்டால் கெடுதல் ஒன்றுமில்லை. (8)

479. தனக்கு இருக்கும் பொருளின் அளவை அறிந்து, அதற்குத் தக்கபடி வாழமாட்டாதவனுடைய வாழ்க்கை உள்ளது போலத் தோன்றி, உண்மையில் இல்லாததாகிப் பின் அந்தத் தோற்றமும் இல்லாமல் கெடும். (9)

480. அரசன் தனக்குள்ள பொருளின் அளவை ஆராயாது அளவு கடந்து செலவு செய்வானானால், அவன் செல்வம் சீக்கிரத்தில் கெடும். (10)

49-ஆம்-அதி-காலம் அறிதல்.

The Recognition of the Fitting Time

[அதாவது வலிமையினால் மிகுதியுடையவனும் பகைவர் மேல் சண்டைக்குப் போக ஆரம்பித்த அரசன் அதற்குத் தகுந்த காலத்தை அறிதல்.]

481. காக்கை தன்னிலும் வலிமையுடைய கோட்டானைப் பகற்காலத்தில் வெல்லுதல்போலப், பகைவருடைய மாறுபாட்டை வெல்லக் கருதுகிற வேந்தர்க்குக் காலம் பார்த்துச் செய்தல் அவசியம் வேண்டும். (1)

482. அரசர் காலத்தோடு பொருந்தத் தொழில் செய்தல், ஒருவரிடத்திலும் நிலைபெறாது நீங்கும் செல்வத்தைத் தன்னிடத்திலே போகாமல் கட்டும் கயிறாகும். (2)

483. அரசர் தொழில்களை முடித்தற்காகும் சாதனங்களுடனே பொருந்தும் காலத்தையும் அறிந்து செய்வாராகில் அவரால் செய்வதற்கு அருமையான தொழிலும் உண்டோ? (3)

484. ஒருவன் பூமி முழுவதையும் ஆளக்கருத்துளவனானாலும், அதற்கேற்றபடி தொழிலைக் காலத்தைத் தெரிந்து இடத்தோடு பொருந்தச்செய்வானானால், அது அவனுக்குக் கைகூடும். (4)

485. தலைமையான பூமி முழுவதையும் அடைய நினைக்கும் அரசர், தம்முடைய வலியதிகமாக இருந்தாலும், அதற்குத் தகுதியான காலத்தைப் பார்த்து, அதுவரையில் பகைவர்மேற்செல்லாதிருப்பார். (5)

486. அதிக வலிமையையுடைய அரசர், பகைவர்மேற் செல்லாது காலம்பார்த்திருக்கிற இருப்பு, சண்டை செய்கின்ற ஆட்டுக்கடா தன் பகைமேற்பாய்தற்பொருட்டுப் பின்னே கால் வாங்குந் தன்மையை உடையது. (6)

487. அறிவுள்ள அரசர், பகைவர் தீங்குசெய்தபொழுதே அவர் அறியச் சீக்கிரமாகப் புறத்திலே கோபங்கொள்ளார். தாம் அவரை வெல்லுதற்குப் பொருத்தமான காலத்தைப்பார்த்து, அது வருமளவும் உள்ளே கோபங்கொள்வர். (7)

488. தாம் வெல்ல நினைத்த அரசர், பகைவரைக் கண்டால், அவருக்கு முடிவுகாலம் வருமளவும் பணியக்கடவர். அந்தக் காலம் வந்து முடியும் இடத்து அவர் தலை கீழ் விழும். (8)

489. பகைவரை வெல்லக்கருதும் அரசர், தம்மால் அடைதற்கு அருமையான காலம் வந்து கூடும்பொழுது, அது நிற்குமளவிலே செய்தற்கு அருமையாய் இருந்த தொழில்களைச் செய்யக்கடவர். (9)

490. பகைவர்மேலே செல்லாதிருக்கவேண்டிய காலத்திலே கொக்கு இருத்தல்போல் இருக்கக்கடவன். செல்லுங்காலம் வாய்த்த இடத்து, அது தப்பாமல் செய்து முடிக்கும் விதம் போலத் தப்பாமல செய்து முடிக்கக்கடவன். (10)

50-ஆம்-அதி-இடன் அறிதல்.

The Recognition of Place.

[அரசாவது வலிமை, காலம் முதலியவற்றை அறிந்து பகைவர் மேல் செல்லுங்கால் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தினை அறிதல்.]

491. பகைவரை வளைத்துக்கொள்ளுவதற்கான இடத்தைக் கண்டபிறகு அல்லாமல், எந்தத்தொழிலையும ஆரம்பிக்காமலும், அவரைச் சிறியவர் என்று இகழாமலும இருக்கக்கடவர். (1)

492. மாறுபாட்டோடு சேர்ந்த வலிமையுடையவர்க்கும், அரணைச்சேர்ந்து அதினாலுண்டாகின்ற பெருக்கம் பல பிரயோஜனங்களையும் கொடுக்கும. (2)

493. தகுந்த இடத்தைத் தெரிந்து தம்மைக் காத்துப் பின் பகைவர்மேல செல்வாரானால், வலிமை இல்லாதவரும வலிமையுடையவராய வெல்லுவார். (3)

494. யுத்தம் செய்தற்குத் தகுந்த இடத்தைத் தெரிந்து சென்ற அரசர், அதனைப்பொருந்தி நின்று அத்தொழிலைச் செய்வாரானால், முன் அவரை வெல்ல நினைத்திருந்த பகைவர் அந்த எண்ணத்தை இழந்துவிடுவார். (4)

495. முதலை ஆழமுள்ள தண்ணீரிலே மற்ற உயிர்களை எல்லாம் வெல்லும். அது அந்தத் தண்ணீரினின்றும் நீங்கினால், அந்த முதலையை மற்றைய உயிர்கள் எல்லாம் வெல்லும். (5)

496. பூமியிலே ஓடுகின்ற வலிமையுள்ள சக்கரங்களையுடைய பெரிய தேர்கள், கடலிலே ஓடமாட்டாது. இனிக்கடலிலே ஓடுகின்ற மரக்கலங்களும், நிலத்தில் ஓடமாட்டாது. (6)

497. பகைவரிடத்து யுத்தம் செய்யும் விதங்களையெல்லாம் ஆலோசித்து, அவைகளுடனே தகுந்த இடத்திலே செய்-

வாரானாகையால், அவற்குத் தைரியமல்லாமல் வேறொரு துணை வேண்டுவதில்லை. (7)

498. பெருஞ்சேனையையுடைய அரசன், சிறு சேனையையுடையானை அழிக்க நினைத்து, அவன் தங்கியிருக்கும் இடத்தைப்போய்ச்சேர்வானானால் அவன்தன் பெருமை கெடும். (8)

499. அரணை அழித்தற்கு அருமையையும் பெருமையாகிய வல்லமையும் இல்லாதவராயிருந்தாலும், யுத்தம் செய்வதற்குரிய பகைவரை இருப்பிடத்தில் சென்று வெல்லுதல் முடியாது. (9)

500. பாகர்க்கு அடங்காதவையாயும், வேலையுடைய ஆளைக் கோத்த கொம்பையுடையவையாயுமுள்ள யானைகளைக் கால் புதைகின்ற சேற்று நிலத்திலே அகப்பட்டபொழுது நரிகள் கொல்லும். (10)

51-ஆம்-அதி-தெரிந்து தெளிதல்.

Selection and Confidence.

[அதாவது மந்திரி முதலானவர்களைப் பிறப்பு, குணம், அறிவு எனப்படுகின்றவைகளையும், காட்சி, செயலையும், கருத்து, ஆகமம் என்கிற பிரமாணங்களினாலே ஆராய்ந்து தெளிதல்.]

501. அரசராலே தெளியப்படுவான் ஒருவன் அறம், பொருள், இன்பம், உயிர் பொருட்டால் வரும் அச்சம் என்கிற நான்கு சோதனையின் திறத்தினாலே ஆராய்ந்து, பின்பு தெளியப்படுவான். (1)

502. உயர்ந்த குடியிலே பிறந்து குற்றங்களினின்று நீங்கி நமக்குப்பழுதுண்டாகுமென்று பயப்படும் நாணமுடையவனிடத்தே அரசர் தெளிவு "நாணுவது செய்யத்தகாதனவற்றின்கண் உள்ள மொடுங்குதல்" என்று, தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியார் கூறியுள்ளார். (2)

503. படித்தற்கு அருமையான நூல்களைக்கற்றுக் குற்றங்கள் நீங்கினவரிடத்தும், நுட்பமாய் ஆராயுங்கால், அறியாமை இல்லாதிருத்தல் அருமையாம். (3)

504. குணக் குற்றங்களில் ஒன்றே யுடையார் உலகத்திலே இல்லாமையால், ஒருவன் குணங்களையும் குற்றங்களையும் சீர்தூக்கிப் பார்த்து அந்த இருவகையுள் மிகுந்தவைகளை ஆராய்ந்து மிகுந்தவைகளாலே அவனை அறியக்கடவன். (4)

505. குடிப்பிறப்பு, குணம், அறிவு என்பவைகளால் மனி
தர் அடையும் பெருமைக்கும் மற்றைய சிறுமைக்கும், உரை
கல் தாம் தாம் செய்யும் செயல்களே (5)

506. சுற்றம் இலாதவர் சம்பந்தம் இல்லாததினாலே பழி
க்கு நாணுகிறதில்லை, அவரை அரசர் தமக்கு உரியவராகக்
கொள்ளல் ஒழியக்கடவர். (6)

507. அன்பு காரணமாக அறியவேண்டியவைகளை அறியா
தவனை அரசன் சினேகிதனாகத் தெளிதல், அவனுக்கு
அறியாமையும் கொடுக்கும். (7)

508. தனக்கு சம்பந்தமில்லாதவரைப் பிறப்பு, குண
அறிவு முதலியவைகளாலும், செய்கையாலும் ஆராயாது, தெளி
க்க அரசனுக்கு அது அவன் சந்ததிக்கும் நீங்காத துன்
பத்தைக் கொடுக்கும் (8)

509. யாரையும் ஆராயாது தெளியாதிருக்கக்கடவன். ஆ
ராய்ந்த பின் தெளிந்த பொருள்களைத் தெளியக்கடவன். (9)

510. அரசன் ஒருவனை ஆராயாமல் தெளிதலும், ஆரா
ய்ந்து தெளியப்பட்டவனிடத்தில் சந்தேகப்படுதலும், அவனுக்
கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். (10)

52-ஆம்- அதி- தெரிந்து வினையாடல்.

Selection and Employment.

[அதாவது அப்படித் தெளியப்பட்டவரை அவர் செய்யவல்ல
வினைகளை அறிந்து அவைகளிலே ஆளுந்திறமாம்.]

511. அரசன் முதலிலே ஒரு தொழிலைத் தன்னிடத்தே
வைத்தால் அதிலே ஆவதும் ஆகாததும் ஆகிய செயல்களை ஆரா
ய்ந்து அறிந்து, அவற்றுள் ஆவதையே விரும்பிய குணத்தையு
டையவன், பின் அந்த அரசனாலே சிறந்த தொழில்களிலே ஆள
ப்படுவான் (1)

512. பொருள்கள் வரும் வழியை விருத்தி செய்து, அதி
னாலே செல்வங்களை வளர்த்து, அந்தப்பொருள் வரும் வழிகளுக்
கும், பொருள்களுக்கும், செல்வங்களுக்கும், வந்த இடையூறுகளை
ஆராய்ந்து நீக்க வல்லவனே, அரசனுக்குத் தொழில் செய்யக்க
டவன். (2

513. அரசனிடத்திலே அன்பும், அவனுக்கு ஆமவைகளை

அறியும் அறிவும், அதைச் செய்கையிலே கலங்காமையும், அதினால் பொருள் கைகூடியவழி அதன்மேல் ஆசையில்லாமையும் ஆகிய இந்த நான்கு குணங்களும் உடையவனிடத்தே அரசனுக்குத் தெளிவுண்டாகும். (3)

514. எந்த வகையாலும் ஆராய்ந்து தெளிந்து தொழில் வைத்தபின்னும் அந்தத்தொழிலின் குணத்தினாலே வேறுபடும் மனிதர் உலகத்திலே பலர் இருக்கின்றனர். (4)

515. தொழில் தான் செய்யும் உபாயங்களைத் தெரிந்து, செயலாலும், இடையூறுகளாலும் வரும் துன்பங்களைப் பொறுத்து முடிவு செய்ய வல்லவனை அல்லாமல் இவர் நம்மிடத்திலே அன்புடையவரென்று மற்றொருவனை ஏவும் குணமுடையதல்ல()

516. செய்பவனுடைய இலக்ஷணத்தை முன்னே ஆராய்ந்து செய்யப்படும் தொழிலின் குணத்தைப் பின்னே ஆராய்ந்து அவ்விரண்டையும் அந்தத் தொழிலையும் காலத்தோடு பொருந்த அறிந்து, பின்பு அவனை அந்தத்தொழிலிலே ஏவுதல் செய்யக்கடவன. (6)

517. இந்தத்தொழிலை இந்தச்சாதனத்தினால் இவன் முடிக்கவல்லவனென்று ஆராய்ந்து அறிந்து, இந்தமூன்றும் தம்முள் ஒத்திருந்தால், அந்தத் தொழிலை அவனிடத்து விடக்கடவன். (7)

518. அரசன் ஒருவனைத் தன்தொழில் செய்தற்கு உரியவனாக ஆராய்ந்து, துணிந்தபிறகு, அவனை அந்தத் தொழில் செய்தற்கு உரியவனாகும்படி உயரச் செய்யக்கடவன. (8

519. தன்னுடைய காரியத்திலே எப்பொழுதும் முயற்சியுடையவனாய் இருப்பவனைத் தனக்குச் சுற்றமாய் நடக்கின்ற குணத்தை அது பொறுத்தவருடைய சொல்லைக்கேட்டு அரசன் மாறுபட நினைப்பானாகில் சீதேவி அந்த அரசனை விட்டு நீங்குவாள்.

520. தன்னுடைய தொழில் செய்பவன் மாறுபடாது தொழில் செய்வதனால், உலகம் மாறுபடாதிருத்தலால், அவனை அரசன் தினந்தோறும் ஆராய்ந்து வரக்கடவன். (10)

53- ஆம்- அதி- சுற்றந்தழால்.
The union of Relations.

[அதாவது அரசன் தன் சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காமல் தழுவுதல்.]

521. ஒருவன் செல்வம் நீங்கித் தரித்திரனான காலத்திலும் விடாது தம்மோடு அவனிடத்துண்டாகிய பழைமையைப் பாராட்டுங் குணஞ் சுற்றத்தாரிடத்தே உண்டு. (1)

522. அன்புள்ள சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மிகுதல் இல்லாத பல செல்வங்களையும் கொடுக்கும். (2)

523. அந்தச் சுற்றத்தோடு மனங்கலப்பில்லாதவனது வாழ்க்கை குளப் பரப்புக் கரையில்லாமல் நீர் நிறைந்ததை ஒக்கும் (3)

524. ஒருவன் செல்வத்தைப் பெற்றுப் பெறுவது தன் சுற்றத்தினால் தான் சூழப்படும் வகையைக் கண்டு நடக்கலாம். (4)

525. ஒருவன் சுற்றத்தார்க்கு வேண்டியவைகளைக் கொடுத்தலும் இன்சொல் சொல்லுதலும் செய்ய வல்லவனானால், அவன் தம்மில் தொடர்ந்த பலவகைச் சுற்றத்தாரால் சூழப்படுவான் (5)

526. ஒருவன் கொடையை உடையவனாயும் கோபத்தை விரும்பாதவனாயும் இருப்பானானால், அவனைப்போலச் சுற்றமுடையவர் இப்பூலோகத்தில் ஒருவருமில்லை. (6)

527. காகம் தனக்கு இரை கிடைத்தபோது அதை மறைக்காமல், இனத்தை அழைத்து அவற்றோடு உண்ணும்; அதனால், சுற்றத்தார் அடையும் செல்வங்களும் அப்படிப்பட்ட தன்மை உடையவர்க்கே உண்டாகும். (7)

528. அரசன் எல்லாரையும் ஒருதன்மையாகப் பாராமல் அவரவர் தகுதிக்குத் தக்கபடி உபசரித்து நடப்பானானால், அதுநோக்கி அந்த அரசனைச் சுற்றத்தார் பலரும் விடாது வாழுவார். (8)

529. முன் சுற்றத்தாராயிருந்து தன்னோடு பொருந்தாமல் ஏதாகிலும் ஒருகாரணத்தால் தன்னைவிட்டுப் பிரிந்துபோனவர், பின் வந்து சுற்றத்தார் ஆகுதல் அந்தப் பிரிவின் காரணம் நீக்கத்தானே உண்டாகும். (9)

530. ஒருவன் தன்னிடத்தினின்றும் காரணமில்லாமல் பிரிந்துபோய், பின் ஒருகாரணத்தினாலே வந்த சுற்றத்தானை அரசன் அந்தக் காரணத்தைச் செய்துவைத்து ஆராய்ந்து தழுவிக்கொள்ளக்கடவன். (10)

54-ஆம் அதி- பொச்சாவாமை.

Unforgetfulness.

[அதாவது அழகு, செல்வம், ஆற்றல் முதலானவைகளால் சந்தோஷப்பட்டுக் கனங்களைக் காத்துக் கொள்ளுகையிலும், பகைவரை யழித்தல் முதலிய காரியங்களிலும் மறதிசெய்யாமை.]

531. அரசனுக்கு மிக்க மனமகிழ்ச்சியால் உண்டாவதாகிய மறதி, அளவு இல்லாத கோபத்திலும், தீதாம். (1)

532. நித்திய தரித்திரம் அறிவைக்கெடுக்கும் விதம்போல, ஒருவன் கீர்த்தியை மறதி கெடுக்கும். (2)

533. புகழுடையவராகவிருத்தல், மறந்து நடப்பவருக்கு இல்லை. அது நீதி நூலுடையவர்க்கு மாத்திரமே அல்லாமல், உலகத்திலே எப்படிப்பட்ட நூலுடையார்க்கும் சமமாக முடிந்தது. (3)

534. மனத்தில் பயமுடையவர்க்குக் காடுமலை முதலாகிய அரண்களுள்ளே இருந்தாலும் அவைகளால் பிரயோஜனம் இல்லை. அதுபோல மறதியை உடையவராகச் செல்வம் எல்லாம் உடையவராக இருந்தாலும் அவைகளாலே பிரயோஜனமில்லை (4)

535. தன்னால் வாராமல் காக்கக்கூடிய துன்பங்களை அவை வருவதற்குமுன்னே தெரிந்து காத்துக்கொள்ளாமல் மறந்திருந்தவன், பின் வந்தகாலத்துக் காக்கமுடியாமல் தன் குற்றத்தை நினைந்து வருத்தப்படுவான். (5)

536. எவரிடத்திலும் மறதி இல்லாமையாகிய குணம் எத்தக்காலத்திலும் நீங்காமல் இருக்குமானால், அதற்குச் சமமானது வேறொன்றுமில்லை. (6)

537. மறவாத மனத்திலே நன்கு ஆலோசித்துச் செய்யும் அரசனுக்கு இவைசெய்யத் அருமையானவை என்று சொல்லப்படுகிற முடியாத காரியங்கள் இல்லை. (7)

538. நீதி நூலுடையார் இவை, அரசருக்கு உரித்தானவை என்று உபாத்திச் சொல்லிய செயல்களைச் செய்யாது மறந்திருந்தவர்க்கு எழுபிறப்பிலும் நன்மை இல்லை. (8)

539. அரசர் தம் மகிழ்ச்சியினாலே, கர்வம் அடைந்தபோது

முற்காலத்திலே அதனால் உண்டாகிய மறதியினாலே, கெடுவார்களை நினைக்கக்கடவர். (9)

540. அரசன் தான் நினைத்தபொருளையே மறதி இல்லாமல் நினைக்கக்கூடுமானால், தான் அடைய நினைத்தபொருளைத் தான் நினைத்தபடியே அடைதல் எளிதாகும். (10)

55-ஆம்-அதி-செங்கோன்மை.

The Right Sceptre

[அதாவது அரசராலே செய்யப்படும் முறைமை.]

541. அரசர் தம்முடைய குடிகள் குற்றஞ்செய்தால், அந்தக் குற்றத்தை ஆராய்ந்து எவரிடத்திலும் தாக்ஷிண்ணியம் இல்லாமல் நடுவுநிலைமையுடையவராய், அந்தக் குற்றத்துக்கு நூல்களிலே சொல்லும் தண்டனையைச் செய்தலே நீதியாம். (1)

542. உலகத்திலுள்ள உயிர்களெல்லாம், மழைபெய்தால் அந்த மழையை நோக்கி வாழும். அதுபோலக்குடிகள் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழும். (2)

543. அரசருடைய செங்கோலானது பிராமணருக்கு உரித்தான வேதத்திற்கும், அதினால் சொல்லப்பட்ட தருமத்திற்கும் காரணமாயிருக்கின்றது. (3)

544. தன்னுடைய குடிகளை அணைத்துச் செங்கோலையும் செலுத்தும் பெரிய நிலத்தையுடைய அரசரது அடியைப் பொருந்தி உலகத்தார் விடாது நிற்பார். (4)

545. வேண்டுங்காலத்து மழையும், குறையாத விளைவும் ஒன்றாய்ச்சேர்ந்து, நீதிபொருந்திய அரசனுடைய நாட்டில் உள்ளனவாம். (5)

546. அரசருடைய செங்கோல் கோணாதிருந்தால், அவருக்குப் போரில் ஜயத்தைக் கொடுப்பது அவர் எறியும்வேல் அல்ல; ஆனால் அவருடைய செங்கோலே. (6)

547. அரசன் தன்னுடைய செங்கோலைத் தடை நேரிடாதபடிச் செலுத்துவானானால், அவன் பூமி முழுவதையும் காப்பாற்றுவான்; அவனுடைய செங்கோலே அவனைக் காக்கும். (7)

548. வழக்குச் சொல்லுபவர்க்கு எளிய சமயத்தை கொடாதவனாகி. அவற்றை அறிவுடையோர் பலரோடும் விசாரித்து நீதி செலுத்தாத அரசன் தாழ்ந்த பதத்திலே நின்று ஒருவரும் கெடுக்காமல் தானே கெடுவான். (8)

549. குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் துன்பப்படுத்தாது காப்பாற்றி அவரிடத்திலே குற்றமுண்டானால் அதனை நீக்கும்படித் தண்டித்தல் வேந்தன் தொழிலாம். ஆனால் அதுபழியல்ல. (9)

550. அரசன் கொடியவர்களைக் கொன்று நல்லோரைக் காப்பாற்றல், உழவன் பயிரைக், களைப்பிடுங்கிக் காப்பாற்றலோடு சமமாகும் (10)

58-ஆம்-அதி-கொடுங்கோன்மை.

Tyranny.

[அதாவது செங்கோல் கோணுதலாம்.]

551. பொருளை விரும்பிக் குடிகளை வருத்தி அநியாயம் செய்யும் அரசன் விரோதத்தினால் கொலைத்தொழிலைக் கைக்கொண்டு நடப்பவனைப்பார்க்கிலும் கொடியவனாவான். (1)

552. கொடுங்கோல் அரசன் குடிகளிடத்தில் பொருள் வேண்டுதல், வேற் படைகொண்டு வழியில் அலைந்துப் பறிக்கும் இடத்தைக் கவனித்து நின்ற கள்வன் வழிப்போக்கர்களை நோக்கி உன்னுடைய கையிலுள்ள பொருளைக் கொடுவென்று வேண்டுவதோடு சமமாகும். (2)

553. நாள்தோறும் தன்னுடைய நாட்டிலே உண்டாகும் குற்றங்களைத் தீர விசாரித்து, அதற்குத் தக்கபடி நீதி செலுத்தாத மன்னவன் தினந்தோறும் நாடு இழப்பான். (3)

554. பின் வருவதை எண்ணாமல் அநீதியாய் நடக்கும் அரசன், அந்தத்தீயசெயலால் முன் சம்பாதித்த பொருளையும் பின் அதைச் சம்பாதித்தற்குக் காரணமாகிய குடிகளையும் ஒருசேர இழப்பான். (4)

555. அரசன் அநீதியினாலே குடிகள் துன்பப்பட்டு அதைச்

சகிக்கமாட்டாமல் அழுத கண்ணீர் அல்லவா, அரசனுடைய செல்வமாகிய மரத்தை வெட்டும் வாள். (5)

556. அரசருக்குக் கீர்த்தி தம்முடைய நீதியினால் உண்டாகும்; அந்த நீதியில்லாவிட்டால் அந்த அரசருக்கு அப்புகழ் இல்லை. (6)

557. பூமியிலே வாழும் உயிர்களுக்கு மழை இல்லாமை எந்தவகைத் துன்பம் கொடுக்குமோ, அந்தவகைத் துன்பம் அருள் இல்லாத அரசனுடைய நாட்டில் வாழும் குடிகளுக்குண்டாகும். 7

558. நீதி தப்பிய அரசன் கொடுங்கோலின் கீழ் வாழும் குடிகளுக்குத் தரித்திரத்தைப் பார்க்கிலும், பொருள் உள்ளவராக இருத்தல் அதிக துக்கத்தைக்கொடுக்கும். (8)

559. அரசன் தான் சம்பாதிக்கும் பொருளை நீதி தப்பிச் சம்பாதிப்பானானால், அவனுடைய நாட்டிலே பருவமழையானது இல்லாமற்போகும்படி மேகம் பொழிதலைச் செய்யாது. (9)

560. காப்பாற்றவேண்டிய அரசன் உயிர்களைக் காப்பாற்றாவிட்டால் அவன் நாட்டிலே தருமமில்லை; பசுக்களும் பால் சுருங்கும்; பிராமணர்களும் நூல்களை மறந்துவிடுவார். (10)

57-ஆம்-அதி-வெருவந்த செய்யாமை.

Absence of Terrorism.

[அதாவது குடிகள் அஞ்சுவதும், பகுதி என்று சொல்லப்படுகிற மந்திரி முதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச் செய்யாமை.]

561. ஒருவன் மெலியவனுக்குத் தீங்கு செய்தகாலத்து மத்தியஸ்தமாயிருந்து அதைத்தீர விசாரித்துப்பின் அப்படிப்பட்ட காரியம் செய்யாமலிருக்கும்படி அந்தக்குற்றத்திற்குப் பொருந்த அவனைத் தண்டிப்பவனே அரசனாவான். (1)

562. செல்வம் நீண்டகாலம் தம்மிடத்து நீங்காமல் இருக்க விரும்புவோர், ஒருவனைத் தண்டிக்க ஆரம்பிக்கும்போது, அளவு மீறிச் செய்பவர்போல் ஆரம்பித்துச் செய்யும்பொழுது அளவு மீறாமல் செய்யக்கடவர். (2)

563. அரசன் குடிகளால் பயப்படும்படியான செய்கைகளைச் செய்து நடக்கும் கொடுங்கோலனாயிருந்தால், அவன் உண்மையாகவே சீக்கிரத்தில் கெடுவான். (3)

564. நம்முடைய அரசன் நீதி இல்லாதவனென்று குடிகளால் சொல்லப்படும் துன்பம் தரும் சொல்லையுடைய அரசன், ஆயுளும் குறைந்து, செல்வமும் சீக்கிரத்தில் இழப்பான்.()

565. தனைக்காணவேண்டும் குடிகளுக்குச் சமயம் கொடாதவனாய், கண்டால் கடுகடுத்த முகத்தையுடையவனுமிருக்கிற அரசனுடைய பெரிய செல்வம், பேயால் காணப்பட்ட செல்வம் போல பிரயோஜனப்படாது நீங்கும். (5)

566. அரசன் கடுஞ் சொல்லையுடையவனும், தாட்சண்ணியமில்லாதவனுமிருந்தால், அவன் பெரிய செல்வம் நீண்டகாலமில்லாமல் அப்பொழுதே கெடும். (6)

567. கடுஞ்சொல்லும், குற்றத்திற்கு அதிகமான தண்டனையும், அரசனுடைய பகை வெல்லுதற்கு ஏற்ற மாறுபாடாகிய இரும்பைத் தேய்க்கும் அரமாம். அதாவது அரசனது வலிமையைக் கெடுக்கும். (7)

568. ஒரு காரியத்தைப்பற்றி உண்டாகிய எண்ணத்தை மந்திரிகளுடனே தானும் எண்ணிச்செய்யாத அரசன் அந்தத் தவறினாலே தன் காரியம் கெட்டவிடத்துத் தனைக் கோபத்திலே செலுத்தி அவர்களைக் கோபிப்பானானால், அவன் செல்வம் நாள்தோறும் சுருங்கும். (8)

569. யுத்தம் வருதற்கு முன்னே தனக்குக் காவலாக அரண்கட்டிக்கொள்ளாத அரசன் போர் வந்தபொழுது காப்பில்லாமையால் பயந்து சீக்கிரத்தில் கெடுவான். (9)

570. கொடுங்கோலரசன் நீதி நூல் முதலியவைகளைக் கல்லாதவரைத் தனக்கு மந்திரிகளாகச் சேர்த்துக் கொள்ளுவான்; அந்தக்கூட்டம் பூமிக்கு அதிகமான பாரமே ஒழிய வேறொன்றில்லை. (10)

51-ஆம்-அதி-கண்ணோட்டம்.

Beuginity.

[அதாவது தன்னோடு பழகினவரைக்கண்டால் அவராலே சொல்லப்பட்டவைகளை மறுக்கமுடியாதிருத்தல்.]

571. கண்ணோட்டம் என்று சொல்லப்படுகிற மிகவும் சிறப்புடைய அழகு, அரசரிடத்தே உண்டாயிருக்கதால், இவ்வுலகம் உண்டாயிருக்கு. (1)

572. உலக நடையானது கண்ணோட்டத்தினிடத்தே நிகழ்கின்றபடியால், அந்தக் கண்ணோட்டம் இல்லாதவர் உளராதல் பூமிக்குப் பாரமேயொழிய வேறொன்றுமில்லை. (2)

573. இசை, பாடல் தொழிலோடு பொருந்தவில்லாவிட்டால் என்ன பிரயோஜனத்தையுடையது? அதுபோலக் கண்ணிற் கண்ணோட்டமில்லாதவிடத்து என்ன பிரயோஜனமுடையது? (3)

574. தகுதியுள்ளதாகத் தாட்சண்ணியமில்லாத கண்கள் முகத்திலே உள்ளவைபோல் பார்ப்பவர்க்குத் தோன்றுமே அல்லாமல் வேறு என்ன பிரயோஜனத்தைச் செய்யும்? (4)

575. ஒருவன் கண்ணிற்கு அணியும் ஆபரணமானது தாட்சண்ணியமே. அந்த ஆபரணம் இல்லாவிட்டால், அந்தக் கண் புண்ணென்று அறிவுடையோரால் அறியப்படும். (5)

576. ஒளிதருதலுடைய கண்ணோடு பொருந்தியிருந்தும் தாட்சண்ணியமில்லாதவர், சரீரத்தின் மேலாய் இருந்தாலும் மண்ணோடு பொருந்தி நிற்கிற மரத்தையொப்பார். (6)

577. தாட்சண்ணியம் இல்லாதவர் கண்ணுடையவருமல்லர்; அது உடையவர் கண்ணுடையாருமாவார். (7)

578. தம்முடைய காரியம் கெடாமல் தாட்சண்ணியம் செய்யும் அரசருக்கு இந்த உலகம் உரிமையுடையதாயிருக்கின்றது. (8)

579. தம்மை வருத்தும் குணத்தையுடையவருக்கும் தாட்சண்ணியமுடையவராகிக் குற்றத்தைப் பொறுக்கும் குணமே அரசருக்கு மேலான குணம். (9)

580. எவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தை விரும்புவோர், தம்மோடு பழகினவர் நஞ்சைக் கலக்கக் கண்டாலும், கண்டு மறுக்கப்படாதவராய், அதனை உண்டு பின்னும் அமைவோடிருப்பார். (10)

59 ஆம்-அதி ஒற்றாடல்

The use of Detectives.

[அரசாவது பகைவர், அயலோர், சிநேகிதர் என்ற மூவரிடத்தும் நிகழ்ந்ததை அறிதற்கு ஒற்றை ஆளுதலாம்.]

581. அரசன், ஒற்றனும் புகழ்உள்ள நீதி நூலும் ஆகிய இரண்டும் தன்னுடைய இரண்டு கண்களாகத் தெளியக்கடவான். (1)

582. எல்லாரிடத்திலும் நடப்பவைகள் எல்லாவற்றையும் நாள்தோறும் ஒற்றனாலே சீக்கிரத்தில் அறிதல் அரசருக்குரித்தான தொழிலாம். (2)

583. ஒற்றனால் யாவரிடத்திலும் நிகழ்ந்தவைகளைத் தெரிந்து விசாரசெய்து அவைகளால் உண்டாகும் பயனை ஆராய்ந்து அறியாத அரசன் வெற்றியடையான். (3)

584. அரசனுக்குரிய காரியம் செய்யும் அமைச்சர் முதலியோர் சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொல்லாலும், செயலாலும் ஆராய்பவனே ஒற்றனாவான். (4)

585. எவருடைய செய்தியைத் தெரிந்து கொள்ளச் சென்றானோ, அவராலே சந்தேகிக்கப்படாத வடிவோடு பொருந்தி, அவர் சந்தேகங்கொண்டு தெரிந்துகொள்ள ஆரம்பித்தால், கோபங்கொண்டு பார்க்கின்ற அவர் கண்ணிற்கு அஞ்சாமல் நின்று, சாமபேத தானதண்டம் என்கிற நான்கு உபாயங்களைச் செய்தாலும், மனத்திலுள்ளதை வெளிப்படுத்தாது இருக்கவல்லவனே ஒற்றனாவான். (5)

586. முழுவதுந்துறந்தவராயும், விரத ஒழுக்கத்தவராயும், போகக்கூடாத இடங்களில் எல்லாம் போய விசாரிக்க வேண்டியவைகள் எல்லாம் நன்றாய் விசாரித்து, அந்த இடத்திலுள்ளோர் சந்தேகப்பட்டுப் பிடித்து எந்த விதமான துன்பஞ்செய்து கேட்டபோதிலும், தன்னை வெளிப்படுத்தாமலிருப்பவனே ஒற்றனாவான். (6)

587. எவருடைய செயல்களைத்தெரிந்து கொள்ளச் சென்றானோ, அவர் மறைவச்செய்த செயல்களை, அவருக்கு உரித்தானவர்களாலே கேட்கவல்லவனாகிக் கேட்டுத் தெரிந்துகொண்ட செயல்களிலே பின் சந்தேகப்படாமல் நிர்மாணிக்கவல்லவனே ஒற்றனாவான். (7)

588. ஒரு ஒற்றன் மறைவாய்த் தெரிந்துகொண்டு வந்து அறிவிக்கப்பட்ட காரியத்தை, மற்றும் ஓர் ஒற்றனால் தெரிந்துகொண்டு வரச்செய்து, ஒத்திருத்தலையும் பார்த்துக் கொள்ளக் கடவன். (8)

589. ஒற்றரை ஆளுமிடத்து ஓர் ஒற்றன் மற்றோர் ஒற்றனை அறியாதிருக்கும்படி ஆளக்கடவன். அந்தமாதிரி ஆளப்பட்ட ஒற்றர் மூவரை ஒரு காரியத்திலே வேறு வேறு அனுப்பி அந்த மூன்று பேர்களுடைய சொற்களும் ஒத்திருக்குமானால், அந்தப் பொருளை உண்மை என்று தெளிந்து கொள்ளக்கடவன். (9)

590. மறைந்தவைகளைத் தெரிந்து சொல்லிய ஒற்றனிடத்துச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியாமல் அரசன் செய்யக்கடவன். அப்படிச் செய்தானானால், தன் உள்ளே அடக்கப்படும் இரகசியங்களைத் தானே வெளியில் இட்டவனாவான்.

60 ஆம் - அதி - ஊக்கம்உடைமை

Energy.

[அதாவது மனம், தொழில் செய்தலிலே தளர்வு இல்லாமல், உற்சாகம் உடைத்தாதலாம்.]

591. ஒருவரை உடையவர் என்று சொல்லுதற்குச் சிறந்தது ஊக்கமே. அது இல்லாமல் வேறுடையது தாமும் உடையராவரோ? ஆகார். (1)

592. ஒருவனுக்கு ஊக்கமுடைமையே நிலைபெற்ற உடைமையாம். மற்றைய பொருளுடைமையாவது நிலைபெறாமல் நீங்கிப்போம். (2)

593. நிலைபெற்ற மனவெழுச்சியைக் கைப்பொருளாக உடையவர் கைப்பொருளை இழந்தாராயினும், யாம் இழந்துவிட்டோமென்று மனம் சுழலார். (3

594. அசைவில்லாத ஊக்கத்தை உடையானிடத்தே, பொருளானது தானே வழி கேட்டுக்கொண்டு செல்லும். (4)

595. நீர்ப்பூக்களுடைய தாளினது நீட்சியானவை நின்ற நீரின் அளவினவாம். அதுபோல் மக்களுடைய உயர்ச்சி, மனவெழுச்சியின் அளவினதாகும். (5)

596. அரசர் நினைப்பதெல்லாம் தம்முடைய உயர்ச்சியை

[illegible] அநாவிதிவசத்தால் கூடாமல் போனாலும் நினைப்புத் தளராமைக் குணமுடையதாகும். (6)

597. யானை கட்டாகிய அம்பினாலே புண்பட்டவிடத்தும் தனது பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல மனவெழுச்சியுடையவர் தாம் நினைத்த காரியங்கள் அழிவடைந்த காலத்திலே தளராமல் தம் பெருமையை நிலைநிறுத்துவார். (7)

598. ஊக்கமில்லாத அரசர் இந்த உலகத்தாருள் யாம் கொடையாளிகள் என்று தம்மைத்தாமே மதித்தலை அடையார். (8)

599. யானை எல்லாமிருகங்களிலும் தான் பெரிய உடம்பை உடையது ஆகவும் கூர்மையான கொம்புகளையுமுடையது. ஆனாலும் புலியானது எதிர்த்தால் அதற்கு அஞ்சும். (9)

600. ஒருவனுக்குத் திடமான அறிவு ஊக்கமிகுதியே; அதில்லாதவர்கள் மரங்களாவார். சரீரமாகக் காணப்படுகிற வேற்றுமை வடிவு மனிதவடிவாயிருப்பதேயன்றி வேறில்லை. (10)

---

61. மடி இன்மை
Unsluggishness

[ஆகாவென்று நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்பல் இல்லாமையாம்]

601. தாம் பிறந்த குடியாகிய மாசற்ற விளக்கு, ஒருவனுடைய சோம்பலாகிய இருள் மூடுதலால் மழுங்கிக்கெடும். (1)

602. தாம் பிறந்த குடியை மேன்மேலும் உயர்ந்ததாகச் செய்ய விரும்புவோர், சோம்பலைச் சோம்பலாகவே கருதி முயற்சியோடு நடக்கக்கடவர். (2)

603. நீக்க வேண்டியதாகிய சோம்பலைத் தன்னுள்ளே கொண்டு நடக்கும் அறிவில்லாதவன், பிறந்தகுடி அவனின் முன்னே அழியும். (3)

604. சோம்பலில் வீழ்ந்து முயற்சியில்லாதவருக்குக் குடியும் கெட்டுப்போய் பல குற்றங்களும் அதிகரிக்கும் (4)

605. சோம்பலும், சீக்கிரத்தில் செய்யவேண்டியவைகளைக் காலதாமதப் படுத்திச் செய்யும் குணமும், மறதியும், நித்திரையும் ஆகிய இந்த நான்கும் கெடுந்தன்மையை உடையவர் விரும்பி, ஏறும் மரக்கலமாம். (5)

606. பூமி முழுவதையும் ஆண்ட அரசருடைய செல்வம் தானே வந்து சேர்ந்த விடத்தும், சோம்பலுள்ளவர் பெரிய பிரயோஜனத்தை அடைதல் இல்லை. (6)

607. சோம்பலை விரும்புதலால் பெருமையை உடைய முயற்சி இல்லாதவர் சிநேகிதர் முன்னே கண்டிக்கப்படுத்திசொல்லி அதனால் பயன்காணாமல பிறர் இகழ்ந்து சொல்லும் சொல்லைக்கேட்பர். (7)

608. நற்குடியிலே பிறந்த அரசனிடத்திலே சோம்பல் என்னும் குணம் உண்டாகுமானால், அது தன் விரோதிகளுக்கு அடிமையாகும் தன்மையை உண்டாக்கும். (8)

609. ஒருவன் தன் சோம்பலை முற்றும் விட்டுவிடுவானானால், அவனுடைய குடியினிடத்தும் வலிமையினிடத்தும், குற்றங்கள் நீங்கும். (9)

610. சோம்பல் இல்லாத அரசன், தன் அடியினாலே எல்லாவற்றையும் அளந்த மகாவிஷ்ணுவானவர் அளந்த சுவர்க்க மத்திய பாதாளம் என்னும் மூவுலகத்தையும் ஒருசேர அடைவான். (10)

62-ஆம்-அதி-ஆள் வினை உடைமை

Manly Effort.

[அதாவது இடைவிடாத தேகமுயற்சியுடையவனாதல]

611. தம்முடைய சிறுமையை நோக்கி, நாம் இத்தொழிலை முடித்தல் அருமை உடையது என்று நினைத்து மேற்கொண்ட தொழிலில் மனந்தளராதிருக்க வேண்டும். அந்தத்தொழிலை முடித்தற்கு வேண்டிய பெருமையை, முயற்சியானது கொடுக்கும். (1)

612. மேற்கொண்ட காரியத்தை முற்றுப் பெறச்செய்யாது விட்டவரை உலகம் விட்டு நீங்கிப்போதலால், செய்யவேண்டிய காரியத்திலே தளர்ச்சியில்லாமல் முடிக்கக்கடவன். (2)

613. யாவர்க்கும் உபகாரம் செய்தல் என்னும் சிறப்பானது, முயற்சி என்று சொல்லப்படுகிற உயர்ந்த குணத்தினிடத்தே தங்கியது. (3)

614. முயற்சி இல்லாதவனுடைய உபகாரி என்னும் குணமானது, படையைக்கண்டால் பயப்படும் பேடியானவன், அந்தப்படையினிடத்தே தன்னுடைய கையில் வாளைக்கொண்டு ஆடுந் தன்மைபோல இல்லையாம். (4)

615. தனக்கு இன்பத்தை விரும்பாமல் தொழில் முடித்தலையே விரும்புவோன், தன்னுடைய சுற்றத்தாரும் சிநேகிதருமாகிய கேளிருடைய துன்பத்தை விலக்கி அதனைத் தாங்குவதாகிய தூணாம். (5)

616. அரசரிடத்தே உண்டாகிய முயற்சி அவருடைய செல்வத்தை வளர்க்கும். அந்த முயற்சி இல்லாமையானது தரித்திரத்தையுண்டாக்கும். (6)

617. கருமை நிறமுள்ள மூதேவியானவள், ஒருவனுடைய சோம்பலினிடத்தே இருப்பாளென்றும், இலக்ஷுமிதேவியானவள் ஒருவனுடைய முயற்சியிலே இருப்பாள் என்றும் அறிந்தோர் சொல்லுவார். (7)

618. பிரயோஜனத்தைக் கொடுப்பதாகிய விதியில்லாமை ஒருவருக்கும் பழியாகாது. தெரிந்துகொள்ள வேண்டியவைகளைத் தெரிந்து, தொழில்செய்யாமையே பழியாகும். (8)

619. முயற்சித்துச் செய்ததொழில் விதிவசத்தால் முடியாமற்போனாலும், பிரயத்தனமானது தன்னுடைய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு பாழாகாமல் கொடுக்கும். (9)

620. தளர்ச்சியில்லாமல் தொழிலைச்செய்பவர், பயனை நீக்குவதாகிய விதியையும் நீக்குவார். (10)

63. ஆம்- அதி- இடுக்கண் அழியாமை.

Hopefulness in Trouble.

[அதாவது தொழில் செய்பவன் விதியினாலாவது, பணம் இல்லாததினாலாவது, உடம்பு வருத்தத்தாலாவது தனக்குத் துன்பம் சேர்ந்தவிடத்து, அதற்கு மனங்கலங்காமை.]

621. ஒருவனுக்குத் தீவினையினாலே துன்பம் வந்தவிடத்து அதற்கு வருந்தாமல் மனமகிழக்கடவன். அந்தத் துன்பத்தை மேலும் மேலுமாய் எதிர்க்கவல்லது அந்த மகிழ்ச்சி போலவேறு வேறொன்றுமில்லை. (1)

622. வெள்ளம்போலக் கரை இல்லாத துன்பங்களெல்லாம், அறிவுடையவர் தன் மனத்தினாலே ஒன்றை நினைக்க அப்பொழுதே கெடும். (2)

623. தொழில் செய்யும்போது அதற்கு இடையிலே வந்த துன்பத்திற்கு வருந்தப்படாதவர், அந்தத் துன்பத்திற்குத் துன்பத்தைத் தாமுண்டாக்குவார். (3)

624. தடைப்பட்ட இடங்களெல்லாவற்றிலும் பண்டியை இழுத்துச்செல்லும் கடாவைப்போலக், காரியத்தை மேற்கொண்டு செலுத்தவல்லவனை வந்து அடைந்த துன்பம் தானே துன்பப்படுதலை உடையது. (4)

625. துன்பங்கள் இடைவிடாமல் மேலும் மேலும் வந்த போதிலும், மனங்கலங்குதல் இல்லாதவனை அடைந்த துன்பங்கள் தாமே துன்பப்படும். (5)

626. செல்வமுள்ள காலத்து இது பெற்றோமென்று உலோபம் செய்யாதவர், தரித்திரம் அடைந்த காலத்திலே, மனத்தினாலே துன்பத்தைக் குறித்து வருந்தார். (6)

627. அறிவுடையார், மக்கள், தேவர், நரகர், விலங்கு என்கிற நாலுவகைப் பிறப்பிலுமுள்ள உடம்புகள் துன்பம் என்னும் வாளுக்கு இலக்கானது என்று தெளிந்து தம்மேல் வந்த துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளார். (7)

628. தன்னுடைய உடம்பிற்கு இன்பமானவைகளை விரும்பாமலே, வினையால் துன்பமடைதல் சுபாவமென்று அறிந்திருப்பவன் தன்னுடைய முயற்சியினாலே துன்பமடையான். (8)

629. தொழில் செய்தால் தனக்கு இன்பம் வந்தவிடத்து அந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டே மனத்தினால் விரும்பாதவன், துன்பம் வந்தவிடத்தும் அந்தத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டே மனத்தினால் வருந்தான். (9)

630. ஒருவன் தொழில்செய்யும் காலத்து முயற்சியினால் உண்டாகும் துன்பத்தைத் தனக்கு இன்பமாக நினைத்தால், அது தன்னுடைய பகைவர் நன்கு மதித்தற்குக் காரணமாகிய சிறப்பைக் கொடுக்கும். (10)

அரசியல் முற்றிற்று.

அங்க இயல்.

The Essentials of a State.

[அரசு இயலை நடத்துதலிலே ஒன்றற்கு ஒன்று துணையாகிய அங்கங்களினது தன்மையைக் கூறுதலாம்.]

---

64. ஆய்-அதி அமைச்சு.

The Ministry.

[அதாவது மந்திரியினது குணங்களும் செய்கைகளும் ஆம்]

631. தொழில் செய்யும் காலத்து அதற்கு வேண்டும் சேனை, பொருள் முதலிய சாதனங்களும், அதற்கு உரித்தான காலமும், அது செய்யும் விதமும், அந்த விதத்திலே செய்யப்படும் அந்த அருமையான தொழில்களும் பொருந்த நினைக்கவல்லவனே மந்திரியாவான். (1)

632. தொழில் செய்தலிலே அசைவு இல்லாமையும், குடிகளைக் காத்தலும், நீதி நூல்களைக் கற்று விதிவிலக்குகளை அறிதலும், முயற்சியும், முன் சொல்லப்பட்ட அங்கங்கள் ஐந்துடனே திருந்த உடையவனே மந்திரியாவான். (2)

633. போர் உண்டாகிய காலத்திலே பகைவர்க்குத் துணையாய் உள்ளவரை, அவரைவிட்டுப் பிரிக்கவேண்டுமானால் பிரித்தலும், தம்மிடத்தில் உள்ளவரை அவர் பிரியாமல் கொடையினாலும் இன்சொல்லினாலும் காத்துக்கொள்ளுதலும், தம்மை விட்டுத் தம்முடையவரை விட்டுப் பிரிந்தவரை மறுபடிப் பொருத்த வேண்டினால் பொருத்தலும், வல்லவனே மந்திரியாவான். (3)

634. ஒரு காரியத்தைச் செய்தல் பலவிதமாகத் தோன்றினால், அவற்றுள் பொருந்துவதை ஆராய்ந்து அறிதலும், அது செய்யும்போது பலிக்கும் விதத்தை ஆராய்ந்து செய்தலும், சிலவா நீக்கல், சேர்த்தல் செய்தலிலே அரசற்கு இதுவே செய்யத்தக்கது என்று துணிவு உண்டாகும்படிச் சொல்லுதலும் வல்லவனே மந்திரியாவான். (4)

635. அரசனால் செய்யப்படும் தருமங்களைத் தெரிந்து, தனக்கு உரித்தான கல்வியாலே நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய் எக்காலத்திலும் தொழில் செய்யும் திறங்களை அறிந்தவன் அந்த அரசனுக்குத் துணையாவான். (5)

636. இயற்கையாகிய நுண் அறிவை செயற்கையாகிய நூல் அறிவோடுடைய மந்திரிகளுக்கு அதிக நுட்பத்தையுடைய ஆலோசனைகளாய் முன் நிற்பன எவையுள? (6)

637. நூலறிவினால் தொழில் செய்யும் வகைகளைத் தெரிந்தவிடத்தும் உலகத்தில் அப்போது நடக்கின்ற இயற்கையை அறிந்து, அதனோடு பொருந்துமபடிச் செய்யக்கடவன. (7)

638. அறிந்து சொல்லினவனுடைய அறிவையும் அழித்து, அரசன்தானும் அறியானாயினும், அந்தக் காரணத்தை நோக்கிக் கைவிடாமல் அந்த அரசனுக்கு உறுதியானவைகளைச் சொல்லுதலே மந்திரியினது கடமை (8)

639. அருகிலிருந்து தீமை செய்ய நினைக்கிற மந்திரி ஒருவனில் அரசனுக்கு எதிரிடுவார் ஓர் எழுபதுகோடி பகைவர் உறவர் (9)

640. செய்யப்புகும் தொழில்களை முடிக்கத்தக்க திறம் இல்லாதவர் அவைகளை முறைமை அடைவுபட ஆலோசித்திருந்தும், செய்யும்போது அவைகளை முடிவு இல்லாதனவாகவே செய்யாநிற்பர். (10)

65-ஆம்-அதி-சொல்வன்மை.

Power in Speech.

[அதாவது தான் நினைத்த தொழில் முடியும் வழியால் வார்த்தை சொல்ல வல்லவனாதல்]

641. மந்திரிகளுக்கு அவசியம் வேண்டிய குணம் பெரியோர்களால் நாநலம் (நாவால் உண்டாகிய நலம்) என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற நலத்தினையுடையராதலே. அந்த நாநலமானது பிற நலங்கள் எல்லாவற்றினுள்ளும் அடங்குவதன்றி மிகுந்தது. (1)

642. மந்திரிகள் தம்முடைய அரசனுக்கும், அவர்களுக்கும் பெருக்கமும் கேடும் தம்முடைய சொல்லினாலே வருமாதலால், அப்படிப்பட்டதாய சொல்லில் சோர்வு உண்டாகாமல் காக்கக்கடவர். (2)

643. கட்டாய ஏற்றுக்கொண்டவரைப் பின் வேறுபடாமல் கட்டும் குணங்களை அவாவி, வேறு பகையாய், ஏற்றுக்கொள்

ளாதவருர் பின்பு அக்கப் பகைமை ஒழிந்து சிநேகத்தை விரும்பும்படிச்சொல்லப்படுவதே மந்திரிகளுக்குச்சொல்லாவது. (3)

644. மந்திரிகள் அந்தப்படிச் சிறப்புடைத்தாகிய சொல்லைத் தம்முடையவும் கேட்பாருடையவும் ஆளைவினைகளைத்தெரிந்து சொல்லக்கடவர். ஏனெனில் அவ்வாறு சொல்லுதற்கு மேம்பட்ட தருமமும் பொருளும் இல்லை. (4)

645. தாம் சொல்ல நினைத்தசொல்லை மற்றவருடைய சொல்லால் வெல்லாத இலாமையை அறிந்து பின்பு அந்த சொல்லைச் சொல்லக்கடவர். (5)

646. பிறர் பின் தாங்கேட்க விரும்பும்படிச் சொல்லிப் பிறர் சொல்லுஞ் சொல்லையும் சொல்லில் குற்றமுளதாயினும், அவை களைந்து கொள்ளாது, பயன்கொண்டிடவேண்டுவது நல்ல மந்திரியுடைய இலக்கணமென்று பெரியாருடைய துணிவாம். (6)

647. தாம் நினைத்த காரியங்களைப் பிறர்க்குப் பொருந்தும்படி சொல்லுதலில் வல்லவனாகியும், அவை மிகவும் பலவானவிடத்திலும் மறவாதவனாகியும், சபைக்கு அஞ்சாதவனாகியும், உடையவனை யாதுபாட்டினாலும் வெல்லுதல் எவர்க்கு முடியாது. (7)

648. சொல்லப்படும் காரியங்களை ஒழுங்குபடக்கோத்து இனிமையுண்டாகும்படி சொல்ல வல்லவருடைய வார்த்தையை, உலகத்தார் விரைந்து ஏற்றுக்கொள்ளுவார். (8)

649. குற்றம் இல்லாதவையாய் சிலவார்த்தைகளைச் சொல்ல அறியாதவர் பலவார்த்தைகளைச் சேர்த்துச் சொல்ல விரும்புவார். (9)

650. கற்ற நூல்களைப் பிறர் அறியும் விதமாக விரித்துச் சொல்லமாட்டாதவர் பூங்கொத்தினிடத்தே மலர்ந்திருந்தும் வாசனை இல்லாத பூவைப்போல்பவர். (10)

66-ஆம்-அதி-வினைத்தூய்மை.

Purity in Action.

[அதாவது செய்யப்படும் தொழில்கள் பொருளைமாத்திரம் அல்லாமல் தருமமும் புகழும் கொடுத்து நல்லவையாதல்.]

651. ஒருவனுக்குத் துணையினது நன்மை செல்வத்தை மாத்திரம் கொடுக்கும், தொழிலின் நன்மையோ அவன் வேண்டியவைகளை எல்லாம் கொடுக்கும். (1)

652. [illegible] புகழையும் [illegible] நன்மையையும் கொடாத தொழில்களை எக்காலத்திலும் [illegible] ஒழித்தல் வேண்டும். (2)

653. மேன்மையை அடைய விரும்புவோர் கௌரவத்தைக் கெடுக்குங் காரியமாகிய தொழில்களைச் செய்யாது நீக்கவேண்டும். (3)

654. அசைவு இல்லாத தெளிவை உடையவர் துன்பமுண்டாகிய காலத்தும் அதை நீக்கற்பொருட்டு [illegible] செய்யத்தக்க இழிதொழிலைச் செய்யார். (4)

655. நான் செய்தது தப்பு [illegible] என்று இரங்கி வருந்துந் தொழில்களை ஒருபொழுதும் செய்யாதிருக்கக் கடவர். ஒருகால் [illegible] செய்வாராயினும் பின்பு அப்படிப்பட்ட தொழில்களைச் செய்யாதிருத்தல் நன்று. (5)

656. ஒருவன் தன்னைப் பெற்ற தாயின் பசியைக் [illegible] நேர்ந்தபோதும் அறிவுடையோர் பழிக்குந் தொழில்களைச் செய்யாதிருக்கக்கடவன். (6)

657. பெரியோர் அருவருத்த [illegible] தொழில்களைச் செய்து [illegible] (7)

658. [illegible] விலக்கிவிடாமல் பொருந்தச் செய்தால், அத்தொழில்களை [illegible] ஒருவழியால் முடிந்தாலும் பின்பு துன்பத்தைக் கொடுக்கும். (8)

659. ஒருவன் கெட்டதொழில்களைச் செய்து பிறர் அழக் கொண்டு அடைந்த பொருள் எல்லாம் [illegible] அவன் தான் அழக் [illegible] போகும். மற்ற நல்ல தொழில்களைச் செய்து அவைகளால் வந்த பொருள்கள் முன்பு இழந்தாலும் பின்பு வந்து நல்ல பலனைக் கொடுக்கும். (9)

660. மிகுதி கெட்டதொழில்களால் பொருளைச் சம்பாதி

த்த. அதனால் வேந்தனுக்குக் காப்புச்செய்தல் பசிய மண்பாத்திரத்தில் நீரை வார்த்துக் காப்புச்செய்தலை யொக்கும். (10)

67-ஆம் அதி-வினைத்திட்பம்.

Firmness in Action.

[அரசாங்கத்து அமாத்யப்பரிசுத்தமாகிய தொழில் முடிப்பவனுக்கு அவசியமாகிய மனவலிமையாம்.]

661. தொழில் செய்யுங்கால் வலிமை என்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரிய ஒருவனுடைய மனத்தின் வலிமையாம். அது ஒழிந்த மற்றைய எல்லாம் வலிமை என்று சொல்லப்படுவன அல்ல. (1)

662. நீதி நூல்களைப் படித்தறிந்த மந்திரிகளது துணிபாவது பழுதுபடும் தொழிலைச் செய்யாமையும், செய்யும் தொழில் விதிவசத்தால் பழுதுபட்ட இடத்துத் தளராமையும் ஆகிய இந்த இரண்டின் வழியாகும் என்று நூலோர் சொல்லுவர். (2)

663. செய்யப்படும் தொழிலை முடிவிலே வெளிப்படும்படி மறைத்துச் செய்வதே வலிமையாகும். அப்படியில்லாமல் நடுவிலே வெளிப்படுமாயின் செய்தவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். (3)

664. யாம் இந்தத் தொழிலை இந்த விதத்தாலே செய்வோமென்று முறையாகச் சொல்லுதல் எவர்க்கும் எளியவையாகும். ஆனால் அதனைச்சொல்லியபடிச் செய்தல் யாவருக்கும் அருமையாம். (4)

665. எண்ணத்தினாலே சிறப்பை அடைந்து மற்றைய இலக்ஷணங்களாலும் பெருமை அடைந்த மந்திரிகளின் தொழில் வலிமையானது அரசனிடத்தே சம்பந்தத்தை அடைதலால் எல்லோராலும் நன்கு மதிக்கப்படும். (5)

666. ஒருவன் தான் எண்ணிய பொருள்களுக்கு வழியாகிய தொழிலினிடத்து வலிமை உடையவராக இருந்தால், எண்ணியபடியே எல்லாம் அடைவர். (6)

667. உலகம், உருளுகின்ற பெரிய தேர்க்கு அச்சினிடத்தே உள்ள ஆணிபோல், தொழிலில் வலிமை உடையோரை உடையது. ஆகையினால் அவரை வடிவில் சிறுமையை நோக்கி இகழாமை வேண்டும். (7)

668. ஒருவன் மனந் துணிந்து செய்யத்தகத் துணிந்த தொழிலினிடத்து அசைதல் இல்லாமல் ஆலசியத்தை நீக்கிச் செய்யக்கடவன். (8

669. முதலில் மெய்ம் முயற்சியினால் தாக்குந் துன்பம் மிகவந்தாலும் அதுகண்டு தளராமல் முடிவிலே சுகத்தைக் கொடுக்கின்ற தொழிலை வலிமை உடையராய்ச் செய்யக்கடவர்.

670. உயர்ந்தோர், தொழில் வலிமை நமக்குச் சிறந்ததென்று கொள்ளாத மந்திரிகளை, அது ஒழிந்த மற்றைய வலிமைகளெல்லாம் உடையராயிருந்தும், மதியார். (10)

68-ஆம்-அதி-வினைசெயல்வகை.

The method of Acting.

[அதாவது அந்த வலிமை உடைய மந்திரி அந்தத் தொழிலைச் செய்யுந் திறமாம்.]

671. யோசனைக்கு எல்லையாவது யோசிப்பவன் இனி இது தப்பாது என்னும் துணிவை அடைதல். அப்படித் துணிவு அடைந்த தொழில், பின்பு ஆலசியத்தில் தங்குமானால் அது குற்றம் உடையதாம். (1)

672. தாழ்த்துச் செய்யும் தொழில்களுள் தாமதம் செய்யக்கடவன். தாமதம் செய்யாத தொழில்களுள் தாமதம் செய்யாதிருக்கக்கடவன். (2)

673. தொழில் செய்யும்போது பகைவனைப் பார்க்கினும் தான் வலியனாகிய காலத்துப் போர் செய்தல் நலமாம். அப்படியில்லாமல் தான் ஒத்தவனாயும் இளைத்தவனாயும் இருந்தால், அது முடிவது ஒரு உபாயத்தைச் செய்யக்கடவன். (3)

674. செய்ய ஆரம்பித்த தொழிலும், அப்படி ஆரம்பித்த பகையும், என்று சொல்லப்பட்ட இரண்டினுடைய குறை நிற்கப்படும், ஆராயுங்கால் தீயினது குறைபோல பின்வளர்ந்து கெடுக்கும். (4)

675. தொழில் செய்யும்போது பொருள் (அழியும் பொருளும், ஆகும் பொருளும்) சாதனம் (தன் சேனையும் பகைவர் சேனையும்) காலம் (தனக்கு ஆகுங் காலமும் பகைவர்க்கு ஆகும்

காலமும் தொழில் (தான் வல்ல தொழிலும் பகைவர் வல்ல தொழிலும்) இடம் (தான் வெல்லும் இடமும் பகைவர் வெல்லு மிடமும்) ஆகிய ஐந்தினையும் மயக்கம் நீங்க ஆலோசித் துச் செய்யக்கடவன். (5)

676. தொழில் செய்யுங் காலத்து, அது முடிக்கிறதற் குண்டாகிற முயற்சியும், அதனால் வரும் இடையூறும், அந்த இடையூறு நீங்கி முடிந்தால் அடையும் பெரும்பிரயோ ஜனமும் முதலியவைகளை நன்றாய்ச் சீர்தூக்கிச் செய்யக்கடவன் (6)

677. அந்த வழியினாலே செய்யப்படும் தொழிலைச் செய்ய ஆரம்பித்தவன் செய்யும் முறையாவது, அந்தத்தொழிலை [illegible] அறிந்தசொல்பவனது கருத்தினைத்தான் தெரிதலே (7)

678. மதங்கொள் யானையால் அது போன்ற வேறு ஒரு யானையைக் கட்டுதல் போலச் செய்கின்ற தொழிலினாலே அதைப்போலுள்ள வேறு ஒரு தொழிலை முடித்துக்கொள்ளக் கடவன். (8)

679. தொழில் செய்பவன் தன்னுடைய சிநேகிதருக்கு நன்மை செய்வதைப்பார்க்கிலும், தன் பகைவருடன் பகைத்து விரோதமாய் உள்ளவர்களைத் தனக்குச் சிநேகிதராகக் கொள்ளுதல் விரைந்து செய்யத் தக்கதாகும். (9)

680. [illegible] சிறியவர்களாகிய மந்திரிகள் தம்மையுடைய [illegible] எதிர்த்தபோது, தம்முடைய [illegible] அந்த [illegible] அவசியமானால் அவரைப்பணிந்து அதனை ஏற்றுக்கொள்வர். (10)

69-ம்-அதி-தூது

The Envoy.

[அரசாவது சேர்தல் பிரிதல் முதலியவைகளுக்காக வேறு அரசரிடத்தில் போவாருடைய குணமும்.]

681. அன்புடைய சுற்றத்தாரிடத்திலே அன்புடையவனா தலும், மந்திரித்தொழில் செய்தற்குப் பொருத்தமுள்ள குடியி லே பிறத்தலும், அரசர் ஜாதிகளால் விரும்பும் குணமுடைய

வகைகளும், தூது வார்த்தை சொல்லுவோனுடைய இலக்கண ங்களாம். (1)

682. தம்முடைய அரசனிடத்திலே, அன்புடைமையும், அவனுக்கு வேண்டியவைகளைத் தெரிந்து கொள்ளுகிற அறிவுடைமையும், அவைகளை வேறு அரசனிடத்திலே சொல்லும்போது ஆராய்ந்து சொல்லும் வன்மையும் ஆகிய இந்த மூன்று குணங்களும் தூது சொல்லப் போகிறவனுக்கு அவசியம் இருக்க வேண்டும். (2)

683. நீதி நூல்களைத் தெரிந்த மந்திரிகளிடத்திலே தான் அந்த நூலில் வல்லவனாயிருக்கிறதோடே, வேலையுள்ள வேறு அரசனிடத்தைச் சென்று தன்னுடைய அரசனுக்கு வெற்றியைக் கொடுக்கின்ற தொழிலைச் சொல்லுகின்ற தூதனுடைய இலக்கணமாம். (3)

684. இயல்பாகவே அறிவும், பார்த்தவர் விரும்புகின்ற தோற்றமும், மேன்மேல் பலரோடும் ஆராய்ந்த கல்வியும், வினையை மிகவும் நன்றாக முடிக்கத்தக்க காரணமாகிய இந்த மூன்றின் கூட்டத்தையுடையவன் வேறு அரசனிடத்திலே தூதாகச் செல்லக்கடவன். (4)

685. வேறு அரசனுக்குப் பல காரியங்களைச் சொல்லும் பொழுது, காரணங்களைப் பல தொகுத்துச் சொல்லியும், இனிமையில்லாத காரியங்களைச் சொல்லும்போது கேட்பதற்கு அரிய மில்லாத சொற்களை விலக்கி இனிமையான சொற்களால் மன மகிழும்படிச் சொல்லியும், தன்னுடைய அரசனுக்கு நன்மை பயப்பவனே தூதனாவான். (5)

686. நீதி நூல்களைப் படித்துப் பகையாயுள்ள அரசன் மனங்கொள்ளும்படி தான் சொல்லுந் தொழிலைச் சொல்லி, அவர் கோபங்கொண்டு பார்த்தால் அதற்குப் பயப்படாது காலத்திற்குப் பொருந்த அதை முடிக்கத்தக்க உபாயத்தை அறியவனே தூதனாவான். (6)

687. வேறு அரசனிடத்திலே தான் செய்யும் முறைமையைத் தெரிந்து அவனுடைய சமயத்தைப் பார்த்து, தக்கதும் பொருந்திய தொழிலைச் சொல்லுதற்குத் தகுதியான இடத்தைத் தெரிந்து, சொல்லும் விதத்தை முன்னே விசாரித்து அறிந்து, அந்த விதத்திலே சொல்லுவோனே தூதரில் முதல்வனாவான். (7)

688. தன்னுடைய அரசன் வார்த்தையை அவன் சொல்லிய விதத்திலேயே வேற்றரசனுக்குச் சென்று சொல்லுபவனுடைய இலக்கணமாவது பொருளிலும் சிறந்த பதிலும

ஆசையில்லாதவனும், தனக்கு அவருடைய மந்திரிகள் துணையாகும் தன்மையும் துணிதல் உடைமையும் ஆகிய இந்த மூன்றோடு கூடிய சத்தியமுமே. (8)

689. தன்னுடைய அரசன் சொல்லிய வார்த்தையை வேற்றரசரிடம் போய்ச் சொல்லுதற்குரியவன், தனக்கு உண்டாகும் துன்பத்திற்குப் பயந்து அவனுக்குத் தாழ்மையான வார்த்தையை வாய்சோர்ந்தும் சொல்லாத வலிமையை உடையவனே. (9)

690. தன்னுடைய அரசன் சொல்லிவிட்ட வார்த்தையைத் தன்னுயிர்க்கு முடிவைக்கொடுப்பதாக இருந்தாலும் அதற்குச்சிறிதும் பயப்படாது தன்னுடைய அரசன் சொன்னபடியே அந்த அரசனுக்கு மிகுதியைத் தெரிவிப்பவனே தூதனாவான். (10)

70-ஆம்-அதி-மன்னரைச் சேர்ந்து ஒழுகல்,

Conduct in the Presence of the King.

[அதாவது மந்திரி அரசரைப் பொருந்தி நடக்கும் விதம்]

691. விரோதமுள்ள அரசரைச்சேர்ந்து நடக்கும் மந்திரிகள் நெருப்பிலே குளிர்காய்வார் போல, அதிகமாக நீங்காமலும் அதிகமாக நெருங்காமலும் நடுவிலே நிற்கக்கடவர். (1)

692. தாம் அடைந்துள்ள அரசர்கள் விரும்பினவைகளை மந்திரிகள் விரும்பாது விடல் வேண்டும். அது அவர்களுக்கு நிலைபெற்ற செல்வத்தைக்கொடுக்கும். (2)

693. மந்திரிகள் தம்மைக்காத்துக்கொள்ள நினைத்தால், அருமையான பிழைகள் தம்மிடத்திலே உண்டாகாமல் காக்கக்கடவர். அரசர் அவைகளை வந்தவைகளாகக் கேட்டுச் சந்தேகப்பட்டால் அவரைப்பின்பு தெளிவித்தல் எவர்க்கும் முடியாது. (3)

694. தம்முடைய அரசர் சமீபத்திலிருக்கும்பொழுது மந்திரிகள் அவர் பார்க்க ஒருவனுடைய காதிலே சொல்லுதலையும், ஒருவனுடைய முகத்தைப்பார்த்துச் சிரித்தலையும், விலக்கி நடக்கக்கடவர். (4)

695. அரசன் பிறரிடம் இரகசியம் பேசும்பொழுது,

மந்திரிகள் எக்காலத்திலாயினும் வெளி கொடுக்கப்பட்டாலும் அவனை விடாமலும் கடவாமலும் இருக்கவேண்டும். ஆக இரகசியத்தை அரசனே தாமே மனமுவந்தாலே சொன்னால் கேட்கக்கடவர். (5)

696. அரசனுக்கு மந்திரிகள் காரியங்களைச் சொல்லும்போது, அவன் பிரியத்தால் அவனிருக்கும் சமயத்தைக் குறிப்பால் அறிந்து, சொல்லுகிறதற்குத் தகுந்த காலம் பார்த்து, வெறுப்பு இல்லாதவையாய் ஆக வேண்டிய காரியங்களை அவன் மனம் விரும்பும்படிச் சொல்லக்கடவர். (6)

697. அதிகப் பிரயோஜனமுள்ளவையாய் அரசன் விரும்பத்தக்கவைகளான காரியங்களை, அவர் கேட்காவிட்டாலும், மந்திரிகள் தாமே சொல்லவேண்டும். பிரயோஜனம் இல்லாதவைகளைத்தாம் கேட்டபோதிலும் சொல்லாது விடவேண்டும். (7)

698. அரசர் எமக்கு இளையவரென்றும் இன்ன முறையை உடையவரென்றும் அவரை அவமதியாமல் அவரிடத்தே நின்ற பிரகாசத்திற்குப் பொருந்தும்படி மதிக்கவேண்டும். (8)

699. அசைவு இல்லாத அறிவுடையார், அரசனால் யாம் நன்குமதிக்கப்பட்டோமென்று நினைத்து, அவனால் விரும்பாத காரியங்களைச் செய்யார். (9)

700. அரசனுக்கு யாம் பழகப்பட்டவரென்று அமைந்த தமக்குத் தகாத காரியங்களைச் செய்யும் சுதந்தரம் மந்திரிகளுக்குக் கேட்டைத்தரும். (10)

71-ஆம் அதி-குறிப்பு அறிதல்.

Reading the Mind.

[அதாவது அரசர் நினைத்ததை அவர் சொல்லாமலே அறிதல்.]

701. அரசனால் குறிக்கப்பட்ட காரியத்தை அவன் சொல்லாமல் இருக்கும்பொழுதே, முகத்திலும் கண்ணிலும் பார்த்து அறிகிற மந்திரி எக்காலத்திலும் வற்றாத கடல் சூழப்பட்ட உலகத்துக்கு ஓர் ஆபரணமாம். (1)

702. ஒருவன் மனத்தில் உண்டானவைகளைச் சந்தேகப

படாமல் துணிவாக அறியவல்லவனை மனிதனுயிருந்தாலும் தெய்வத்தோடு சமானமானவனுக சன்கு மதிக்கப்படுவான். (2)

703. தம்முடைய குறிப்புப் போகும்விதத்தை அறிந்து அந்தக குறிப்பினுல் பிறர் குறிப்பை அறியும்குண முடையவரை, அரசர் பொருள், நாடு, யானை, குதிரை முதலிய உறுப்புகளில அவர் வேண்டுவது ஒன்றைக் கொடுத்தாகிலும் துணையாகக் கொளளக்கடவர். (3)

704. ஒருவன் மனத்திலே நினைத்ததை அவன் சொல்லாமலே அறியவல்லவரோடு, மற்றைய அறியமாட்டாதவர் அவயவதால ஒருதன்மையராகச் சமமாய் இருந்தபோதிலும், அறிவால் ஒவ்வார். (4)

705. குறிததனை அறியவல்ல தன்னுடைய பார்வையினுலே பிறா குறிபபை அறியாவிட்டால் அவயவங்களுள் சிறந்த கணகள வேறு என்ன பிரயோஜனத்தைச்செய்யும்? (5)

706. தன்னை அடுத்த பொருளின் நிறத்தைத் தானே கொண்டு காட்டுகிற பளிங்குபோல, ஒருவனுடைய மனத்தில் மிகுந்த குணத்தை அவன் முகம் தானேகாட்டும். (6)

707. உயிரானது ஒருவனைச் சந்தோஷப்படுத்தினுலும், வெறுத்தாலும் காண அறிந்து அந்த இரண்டிலும் அந்த உயிருககு முறபட்டு நிற்கும். ஆகலால் முகம போல அறிவு மிகுந்தது வேறு ஒன்றுண்டோ? இல்லை. (7)

708. ஒருவன் தன் குறைகளைக்குறிப்பால் அறிந்து,தான் அடைந்த துன்பததைத தெரிந்து, தீர்ப்பாரைப் பெற்றுல், அவர் தன முகத்தைப் பார்ககும்படியாயநதாலும் அவர் முகத்தைப்பார்தது நிற்றலே போதுமானதாம். (8)

709. அரசர் தம்முடைய பார்வையிலே வேறுபாட்டின் தன்மையை அறியவலல மந்திரிகளைப் பெற்றுல், அவர்க்கு மனத்திலுள்ள விரோதத்தன்மையும் மற்ற சிநேகத்தன்மையும் வேறு அரசர் சொல்லாமல்போனுலும் அவர் கண்களே சொல்லும். (9)

710. நுட்பமான அறிவுள்ளோம் என்று இருக்கும் மந்திரிகள், அரசருடைய கருத்தை அளக்கும் கோலாவது, ஆராயும பொழுது அவருடைய கண்களே அல்லாமல் வேறில்லை. ()

72. ஆம்-அறி-அவை அறிதல்.

Tact in the council Chamber.

[அதாவது அரசனோடிருந்த சபையின் தன்மை அறிதல்.]

711. சொல்லின் கூட்டத்தைத் தெரிந்த பரிசுத்தமான குணத்தையுடையவர், தாம் ஒன்றைச் சொல்லும்பொழுது அப்பொழுதுள்ள சபையை அறிந்து ஆராய்ந்து சொல்லக்கடவர். (1)

712. சொற்களின் நடையை ஆராய்ந்து அறிந்த நன்மையையுடையவர், சபையிலே சொல்லும்பொழுது அதனுடைய சமயத்தை ஆராய்ந்து அறிந்து, குற்றம் இல்லாமல் நன்றாய்த் தெளிந்து சொல்லக்கடவர். (2)

713. சபையின் அளவை அறியாமல் ஒன்றைச்சொல்லத் தம்மேற்கொள்ளுநரவர், அந்தச்சொல்லின் கூறுபாட்டையும் அறியாதவராவர், அல்லாமலும் கற்றுவல்லவரான சாஸ்திர அறிவும் அவருக்கில்லை. (3)

714. அறிவால் பிரகாசம் பொருந்தியவருடைய சபையிலே, தாமும் அறிவால் பிரகாசமுள்ளவராகக்கடவர். மற்றும் அறிவில்லாதவருடைய சபையிலே, தாமும் வெண்மையான சுதைச்சாந்தின் நிறத்தைக்கொள்ளக்கடவர். (4)

715. தம்மைப் பார்க்கிலும் வல்லவராயுள்ளவருடைய சபையிலே, அவருக்கு முன் ஒன்றைச் சொல்லாத அடக்கம், ஒருவனுக்கு நன்று என்று எடுத்துச்சொல்லும் குணங்கள் எல்லாவற்றுள்ளும் மிகச்சிறந்தது. (5)

716. பரந்த நூற்பொருள்களை உட்கொண்டு அவைகளின் உண்மையை அறிந்துகொள்ள வல்லவராயுள்ளவருடைய சபையிலே குற்றப்பட ஒருவனுடைய சொல் தவறுதல், முத்தி அடைதற்கு நல்லவழியிலே நடந்த ஒருவன் அந்த வழியினின்றும் நீங்கிக்கெட்டவழியில் விழுதல் போலும். (6)

717. குற்றம் உண்டாகாமல் சொற்களை ஆராய்தலில் வல்லவருடைய சபையிலே, சொல்லினால் பல நூல்களையும் கற்று அவைகளால் உண்டாகிய பயனை அறிந்தவருடைய கல்வியானது யாவருக்கும் விளங்கித் தோன்றும். (7)

718. பிறர் தெரிவித்தல் இல்லாமலே பொருள்களைத்தா...

தெரிந்து கொள்ளவல்ல அறிவினையுடையவருடைய சபையிலே, கற்றவர் ஒன்றைச் சொல்லுதல் தானே வளரும் குணமுள்ள பயிர் இருந்த ஒரு பாத்தியிலே நீர் சொரிதல் போலாம். (8)

719. நல்லவர் இருக்கும் சபையிலே நல்ல பொருள்களை அவர் மனதிலே பதியும்படி சொல்லுதற்குரியவர், ஆகையால் அற்பமக்கள் இருக்கும் சபையிலே மறந்தும் அவைகளைச் சொல்லாதிருக்கக் கடவர். (9)

720. நல்லோர் தம் இனத்தவர் அல்லாதவருடைய சபையிலே ஒன்றையும் சொல்லாதிருக்கக்கடவர். அப்படிச் சொன்னால் அது பரிசுத்தம் இல்லாத முற்றத்தில் சிந்திய அமிர்தத்தை ஒக்கும். (10)

---

73. ௭௩-அதி-அவை அஞ்சாமை.

Not to dread the Council.

[அதாவது சொல்லுதற்குரிய சபையை அறிந்து சொல்லும் பொழுது அதற்குப் பயப்படாமை.]

721. சொற்களின் கூட்டத்தின் குணத்தை அறிந்த பரிசுத்த குணமுடையவர், கற்றவர்கள் அடங்கியசபை என்றும், மூடர்கள் அடங்கிய சபையென்றும் தெரிந்து கற்று வல்லவரையுள்ள சபையிலே, முன்னறச் சொல்லும்பொழுது பயத்தால் பிழையுள்ளதாகச் சொல்லார். (1)

722. கற்றவர்கள் நிறைந்துள்ள சபையிலே பயப்படாமல் தாம் கற்றவைகளை அவர் மனங்கொள்ளும்படி சொல்லவல்லவர், கற்றவர் எல்லாரையும் பார்க்கிலும் இவர் நன்றாய்க் கற்றவர் என்று உயர்ந்தோரால் சொல்லப்படுவார். (2)

723. விரோதிகளிடத்திலே பயப்படாமல் சென்று சாவ வல்லவர் உலகத்திலே அநேகர் இருக்கின்றனர். ஆனால் சபையிலே அஞ்சாமற் சென்று சொல்லுவார் சிலரே உலகத்தில் இருக்கின்றனர். (3)

724. பல நூல்களையும் கற்றோர் அடங்கிய சபையிலே, தாம் கற்றவைகளை அவர் மனங்கொள்ளும் வழியாய்ச் சொல்லித் தாம் படித்தவைகளைப் பார்க்கிலும் அதிகமாய் உள்ளபொருளை அவரிடத்து அறிந்து கொள்ளக்கடவர். (4)

725. வேறு அரசனுடைய சபையிலே பயப்படாமல், அவர் சொல்லும் சொல்லுக்குப் பதில் சொல்லுவதற்காக, சொல் இலக்கணவழியாகவே அளவைநூலை அறிந்து மந்திரிகள் கற்க வேண்டும். (5)

726. சௌரியமுடையார் அல்லாதவர்க்கு வாளாயுதத்தினாலே என்ன பிரயோசனமுண்டு? அதுபோல புத்திநுட்பமுள்ளவர் சபையில் அஞ்சுவோர்க்கு நூல்களினாலே என்ன பயனுண்டு? (6)

727. சொல்லப்படும் சபைக்கஞ்சினவன், அதற்கு அஞ்சுவோனாய் படித்த நூல், எதிர்ப்படும் பகைக்கஞ்சின பேடி கையிலே பிடித்த கூரிய வாளை ஒக்கும். (7)

728. நல்லோர் அடங்கிய சபையிலே நல்ல சொற்பொருள்களை அவர்களுக்கு ஏறுமாறாத பயமுடைய அச்சத்தால் சொல்லமாட்டாதவர், பலநூல்களைக் கற்றவராக இருந்தபோதிலும் பிரயோசனப்படார். (8)

729. பலநூல்களைக் கற்றும் அவற்றின் மெய்ப்பொருளைத் தெரிந்துமுள்ள நல்லோர் அடங்கிய சபைக்கு, ஒன்றும் சொல்லாதவரை கல்லாதவரைக் காட்டிலும் கடையரென்று உயர்ந்தோர் சொல்லுவார். (9)

730. சபைக்கு அஞ்சிக் கற்ற நூற்பொருள்களை அதற்கேற்றபடி சொல்லமாட்டாதவர், உயிரோடிருந்தாலும் உலகத்தால் எண்ணப்படாமையால் இறந்தவர்போல் சமமாவார். (10)

74 அதிகாரம்-நாடு.

The Land.

[அதாவது அந்த அரசனும் மந்திரிகளும் கொண்டு செலுத்தப்படுவதாய் மற்றைய அரண் முதலிய அங்கங்களுக்கு அவ்விடமாய் வேண்டும் சிறப்பினை உடையதாகிய நாடு சொல்லுகின்றார்.]

731. குறைவில்லாத விளைவைச் செய்வோரும், தகுமுடையோரும், அழிவில்லாத செல்வமுடையோரும் சேர்ந்து வாழ்வதே நாடாகும். (1)

732. அளவு இல்லாத பொருள் உள்ளதினால் அயல்தேசத்தாராலும் விரும்பத்தக்கதாகிக் கெடுதல் இல்லாமையும் சேர்ந்து மிக்க விளைவையும் உடையதே நாடாகும். (2)

733. அந்நிய நாடுகள் சுமந்த பாரத்தை எல்லாம் ஒரு சேரத் தன்மேல் வரும்பொழுது தாங்கி, அதன்மேல் தன்னுடைய அரசனுக்கு வரிப் பொருள் முழுவதையும் கொடுப்பதே நாடாகும். (3)

734. அதிக பசியும், நீங்காத நோயும், பக்கத்திலிருந்து வந்து கெடுதல் செய்யும் பகையும் அடையாமல் இனிதாக நடப்பதே நாடாகும். (4)

735. கட்டுப்பாட்டினால் வித்தியாசப்பட்டுச் சேரும் பல கூட்டமும் சமீபத்திலிருந்து கொண்டு பாழாக்கச் செய்யும் உட்பகையும், சமயம் நேர்ந்தால் அரசனை வருத்தும் கொலைத் தொழிலை உடைய குறும்பரும் இல்லாததே நாடாகும். (5)

736. பகைவராலே கெடுதல் அடையாததாய், அப்படி அருமையாய்க் கெட்டபோதிலும் வளப்பம் குறையாத நாடு எல்லா நாடுகளைப் பார்க்கிலும் மேலானதென்று நூலோர் சொல்லுவார். (6)

737. கிணறு சிறு குளம் முதலிய கீழ்நீர், ஏரி ஆறு முதலிய மேல் நீர் என்று சொல்லப்பட்ட தன்னிடத்திலுள்ள நீரும், நன்றாய் அமைக்கப்பட்ட மலையும் அதிலிருந்து வருவதாகிய நீரும், அழியாத காவலும் நாட்டிற்கு அவயவமாகும். (7)

738. நோய் இல்லாமையும், செல்வமும், நெல் முதலியவற்றின் விளைவும், சுகமும், காவலும் ஆகிய இந்த ஐந்தையும் நாட்டிற்கு அழகாகும் என்று நூலோர் சொல்லுவர். (8)

739. தம்மிடத்திலே வாழ்வோர் தேடி வருந்தாமல், அவ்விடத்திலே தானே போய் அடையும் செல்வத்தை யுடையதை நூலோர் நாடென்று சொல்லுவார். ஆதலால் தேடி வருந்தி செல்வத்தை அடைவிக்கும் நாடுகள் நாடுகளாகா. (9)

740. அரசனோடு பொருந்துதலில்லாத நாடானது, மேற்சொல்லிய குணங்களை எல்லாவற்றையும் உடையதாயிருந்தபோதிலும் அவைகளால் பயன் உடையதல்ல. (10)

75-ஆம்-அதி-அரண்.

The Fortification.

[அந்த நாட்டுக்கு உறுப்பாய் அடங்குவதாயிருந்தாலும்

பகைவராலே அழிவு வந்த காலத்து அதற்கும் அரசனுக்கும் காப்பாதல் சிறப்புப்பற்றி வேறு ஓர் அங்கமாகச் சொல்லப்பட்ட அரண் சொல்லுகின்றார்.]

741. அறிவு, ஆண்மை, பெருமை என்று மூவகை வல்லமையுடையவராய்ப் பகைவர் மேல் போருக்குச் செல்வோருக்கும் கோட்டையானது சிறந்ததாகும் அவை இல்லாமல் தம் மேல் வருவோர்க்கும் அஞ்சித் தன்னை அடைவோர்க்கும் அரண் சிறந்ததாகும். (1)

742. அரணாவது மணிபோலும் நிறத்தையுடைய நீரும், வெளிநிலமும் மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதே. (2)

743. உயர்ச்சியும், அகலமும், வலிமையும், அருமையும் என்று சொல்லப்பட்ட இந்த நான்கின் மிகுதியையுடைய மதிலை நூலோர் அரண் என்று சொல்லுவர். (3)

744. காக்க வேண்டும் இடம் சிறிதாய், பரந்த இடத்தை உடையதாய்த், தன்னை வந்து சூழ்ந்த பகைவருடைய ஊக்கத்தைக், கெடுப்பதே அரணாகும். (4)

745. பகைவராலே உள்ளே புகுதற்கு அருமையாயும், பலவகை உணவுகளை உள்ளே பொறுள்ளதாயும், தன்னுள்ளிருப்பவர், போர் செய்வதற்கு எளிதாயும், உள்ள குணத்தை உடையதே அரணாகும். (5)

746. தன்னுள் இருப்போருக்கு வேண்டும் பொருள்களெல்லாம் உள்ளே உடையதாய், பகைவரால அழிவு வருங் காலத்து அது வாராமல் உதவிக்காக்கவல்ல நல்ல வீரரையும் உடையதே அரணாகும். (6)

747. வரவு போக்கு நீங்கும் வகை நெருங்கிச் சூழ்ந்தாலும், அப்படிச் சூழாமல் சமயம் பார்த்து ஒரு முகமாய்ப் போர் செய்தும், உள்ளே இருப்போரை அவருக்கு நம்பிக்கையானவரை விட்டு வஞ்சித்து மாறுபடுத்தியும் பகைவராலே கொள்ளுதற்கு அருமையாயுள்ளதே அரணாகும். (7)

748. சேனைப்பெருமையால் சூழ்தலில் வல்லவராகி வந்து சூழ்ந்த பகைவரையும் தன்னைப்பற்றிய உள்ளிடத்தோர் தாம் பற்றிய இடம் விடாதே நின்று போர்செய்து வெல்வதே அரணாகும். (8)

749. போர் தொடங்கிய காலத்திலே பகைவர் கெடும்படித் தன்னிடத்துள்ளோர் செய்யும் தொழில் வேறுபாடுகளால் புறமெற்றுக்குமில்லாத சிறப்பை அடைந்து மற்றும் வேண்டும் பெருமையை உடையதே அரணாகும். (9)

750. முன் சொல்லப்பட்ட பெருமை எல்லாம் உடைத்தான காலத்தும், போர் செய்யும் வீரரை இல்லாதவிடத்து அவையெல்லாம் இல்லாததாகும். (10)

76-ஆம்-அதி-பொருள் செயல்வகை.

Way of Accumulating Wealth.

[இனிமேல் பெரும்பாலும் நாட்டாலும், அரணாலும் வளர்க்கவும், காக்கவும் படுவதாகிய பொருள் சம்பாதித்தலின், வகை இந்த அதிகாரத்தில் சொல்லுகின்றார்.]

751. ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் பொருளாக மதிக்கச் செய்யவல்லது பொருளை ஒழிய ஒருவனுக்குப் பொருளாவது இல்லை. (1)

752. எல்லா நன்மையும் உடையவராய் இருந்தாலும், பொருள் இல்லாதவனை எல்லாரும் இகழ்வார்; தீமை எல்லாம் உடையவராய் இருந்தாலும் பொருள் உடையவனை எல்லாரும் உயரச் செய்வார். (2)

753. பொருள் என்று எல்லாராலும் சிறப்பித்துச் சொல்லப்படும் கெடாத விளக்குத் தன்னைச் சம்பாதித்தவர்க்கு அவர் நினைத்த தேசத்திற்கு எல்லாம் போய்ப் பகை என்னும் இருளைக் கெடுக்கும். (3)

754. பொருள் சம்பாதிக்கற்கு வேண்டிய நன்மார்க்கத்தினால் அரசன் ஒருவர்க்குந் தீமை இல்லாதவனாக உண்டாகிய பொருள், அவனுக்கு மறுமைக்குரிய தருமத்தையும் இம்மைக்குரிய இன்பத்தையும் கொடுக்கும். (4)

755. தாம் குடிகளிடத்துச் செய்யும் கருணையோடும், அவர் தம்மிடத்துச் செய்யும் அன்போடும் கூடி வாராத பொருள் சம்பாத்தியத்தை அரசர் பொருந்தாது நீக்க விடக்கடவர். (5)

756. உடையவர் இல்லாமையால் தானே வந்து கிடைத்த பொருளும், சுங்கமாகிய பொருளும், தன்னுடைய பகை வரை

வென்று கப்பமாகக் கொள்ளும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம். (6)

757. அன்பென்னும் பெற்றெடுத்த அருள் என்னும் குழந்தை பொருள் என்று உயர்த்திச் சொல்லப்படும் செல்வத்தை உடைய செவிலித்தாயால் வளரும். (7)

758. கைப்பொருள் உள்ள ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய மேற்கொண்டால், அது ஒருவன் மலையின்மேல் ஏறி நின்றுகொண்டு யானைப்போரைப் பார்ப்பதற்கு ஒக்கும். அதாவது அதை வருத்தமில்லாமல் இனிது முடியும். (8)

759. தமது நன்று உண்டாக நினைப்பவர் பொருளைச் சம்பாதிக்கக்கடவர். அது தம்முடைய பகைவருடைய செருக்கைக் கெடுக்கும் ஆயுதமாம். அதற்கு அதுபோலக் கூர்மையான ஆயுதம் வேறு இல்லை. (9)

760. நல்ல வழியிலே பொருளை அதிகமாகச் சம்பாதித்தவர்க்கு மற்றைய அறமும் இன்பமும் ஒருசேர எளிதில் கிடைக்கும். (10)

77-ம் அதி-படைமாட்சி.

The Excellence of an Army

[அதாவது சேனையின் நன்மையாம்]

761. யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நான்கு உறுப்புகளாலும் நிறைந்து, யுத்தத்திலே காயப்படுகிறதற்கு அஞ்சாமல் நின்று, பகையை வெல்லவல்லதாகிய சேனை, அரசனுடைய செல்வங்களெல்லாவற்றுள்ளும் முதன்மையான செல்வமாம். (1)

762. தான் சுருங்கி வருந்திய இடத்தும், அரசனுக்கு யுத்தத்திலே அழிவு வந்தால் தன்மேலே காயப்படுகிறதற்கு அஞ்சாமல் நின்று தாக்கும் சௌரியம், அவன் மூலப்படைக்கல்லாமல் வேறு படைக்கில்லை. (2)

763. எலிகள் பலகூடி கடல்போலச் சத்தித்து எதிர்த்தாலும், அவை பாம்பு மூச்செறிந்த அளவிலே கேடடைதல் போல வீரர் அல்லாதார் பலர்கூடி எதிர்த்தாலும், அவர்கள் வீரன் ஒருவன் எழும்பின அளவிலே கெடுவார்கள். (3)

764. அரசருக்குப் படையாவது யுத்தத்திலே அழிதலு

ல்லாமல், பகைவராலே வஞ்சிக்கப்படாததாகித் தொன்றுதொட்டு வந்த வீரமுடைமையே. (4)

765. சேனையாவது, யமனே கோபித்துத் தன்னை வந்து எதிர்த்தாலும், மனமொத்து எதிர்நின்று தாக்கும் வலிமை உடையதே. (5)

766. சௌரியம், மானம், முன் வீரராயிருந்தவர் சென்ற நல்வழியிலே செல்லுதல், அரசனாலே நம்பப்படுதல் முதலிய இந்த நான்கு குணங்களும் படைக்கும் அரணாம். (6)

767. பகைவராலே வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் யுத்தத்தை விலக்கும் வகுப்பைத் தெரிந்து, வகுக்கக்கொண்டு அவருடைய தூசிப்படையைத் தன்மேல் வாராமல் தடுத்து, தான் அதன்மேலே செல்வதே படையாம். (7)

768. பகைவர்மேலே சென்று போர்செய்யும் சௌரியமும், அது தன்மேல் வந்தால் பொறுக்கும் வலிமையும் இல்லாதிருந்தாலும் தேர், யானை, குதிரைக் கூட்டமும், பதாகை, கொடி, குடை, சங்கீதம், எக்காளம் முதலியவைகளுடனும் அணிந்து விளங்கும் அழகினாலே, சேனை பெருமையை அடையும். (8)

769. தான் தேய்ந்து சுருங்குதலும், மனத்தில் நீங்காத வெறுப்பும், தரித்திரமும் தனக்கு இல்லாதிருந்தால் படையானது பகையை வெல்லும். (9)

770. போரிலே நிலைபெற்ற வீரர்கள் அதிகமாக இருந்தபோதிலும், தனக்குத் தலைவராகிய படைத்தலைவர் இல்லாத சேனை பயனிலது. (10)

78. ஆம் அதி - படைச்செருக்கு.

Military Spirit.

[அதாவது அந்தப் படையின் வீர மிகுதியாம்.]

771. பகைவரே! இன்று நிங்கு என்றலைவன் எதிர்சென்று நின்று அவன் வேல்பட்டு வீழ்ந்து கல்லுருவமாக நின்ற வீரர் பலராதலால், நீங்கள் அப்படிக்காகாமல் உயிரோடு பிழைக்கவேண்டினால், யுத்தம் செய்தலை ஒழியுங்கள். (1)

772. காட்டிலே ஓடுகின்ற முயலைத் தப்பாமல் எய்த அம்

யை ஏந்துதலைப் பார்க்கிலும், வெளியே நின்ற யானையை எறிந்து தப்பிய வேலை ஏந்துதல் நல்லது. (2)

773. பகைவரிடத்திலே முகங்கொடாமல் செய்கின்ற வீரத்தை மிகுந்த ஆண்மையாகும் என்பார், அவனுக்குத் தாழ்வு வந்தால் முகங்கொடுத்து அதைத் தீர்த்துக்கொள்ளும் ஒரு நட்பு உபகாரஞ்செய்தலை அதற்குக் கூர்மையாகுமென்றும் நூலோர் சொல்லுவார். (3)

774. தன்னுடைய கையிலுள்ள வேலைத் தன்னை எதிர்த்த யானையின்மேலே எறிந்துவிட்டு, வருகின்ற யானைக்கு வேல் தேடித்திரிபவன், தன்னுடைய மார்பிலிருந்த வேலைக்கண்டு பிடுங்கிச் சந்தோஷப்படுவான். (4)

775. பகைவரைக் கோபித்துப் பார்த்த கண், அவர் வேலைக்கொண்டு எறிய, அதற்குப் பொறுத்து அசைப்பார்வையை மூடித்து இமைக்குமானால், அது வீரர்க்குத் தோல்வியல்லவா?

776. வீரன் தனக்கு நடந்த நாளை எடுத்து எண்ணி அந்த நாளில் பொருத காயங்கள் படாத நாளெல்லாம், பிரயோஜனமில்லாமல் கழிந்த நாளென்றே எண்ணுவான். (6)

777. புவியெல்லாம் பரந்த கீர்த்தியாகிய புகழை விரும்பி, உயிர் வாழ்தலை வேண்டாத வீரர், வீரக்கழலைக் காலிலே கட்டுதல் அலங்காரகுணத்தை உடையது. (7)

778. யுத்தம் வந்தால் தம்முயிர்க்கு அஞ்சாது அதனிடத்தில் செல்லும் வீரர், தம்முடைய அரசன் அதை வேண்டாமென்று கோபித்தாலும் அந்த வீரம் மிகுதி குறைந்துபோகாது. (8)

779. தாம் செய்த சபதம், தப்பாமல் போராடச் சாகவல்ல வீரரை அது தப்பினீர் என்று சொல்லி இகழ்வதற்கு உரியவர் யாவர்? (9)

730. தான் செய்த உபகாரங்களை நினைந்து, அரசன் கண்ணீர் சொரியும்படி போர்செய்து சாவைப்பெறுவாரானால், அந்தச்சாவு இரந்தேனும் கொள்ளத்தக்க தன்மையை உடையது (10)

79-ஆம்-அதி-நட்பு.

Friendship.

[அதாவது சிநேகமாம்.]

781. சிநேகத்தைப்போல் சம்பாதித்துக்கொள்ளுதற்கு அரு

மையான பொருள்கள் எவைகள் இருக்கின்றன? அதைச் சம்பாதித்துக்கொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் தொழிற்கு தப்புதற்கு அருமையான காவல்களானவை எவை இருக்கின்றன? (1)

782. அறிவுடையார் சிநேகம் வளர் பிறைச் சந்திரன் நாளுக்கு நாள் வளரும் தன்மையைப் போலும் மற்றைய அறிவில்லாதார் சிநேகம் பூரண சந்திரன் குறையும் தன்மை போல நாடோறும் குறையும். (2)

783. நல்ல குணமுடையார் செய்த சிநேகம் பழகும் தோறும் அவருக்கு இன்பம் கொடுக்கும். அது எதுபோல என்றால் நூற்பொருளை கற்குந்தோறும் கற்பவர்க்கு இன்பஞ் செய்தலைப்போல. (3)

784. ஒருவனோடு ஒருவன் சிநேகம் செய்தல், தங்களுள்ளே சிரிப்புசெய்தற்கு ஏற்றவைகளைச் சொல்லிச் சிரித்தற் பொருட்டு அல்ல. ஆனால் அவருக்கு வேண்டாத செய்கைகள் உண்டான காலத்து, முன்சென்று கண்டித்துப் புத்தி சொல்லும் பொருட்டே. (4)

785. ஒருவனோடு ஒருவன் சிநேகமாவதற்கு ஒரு தேசத்தாராய் இருக்கவேண்டும் என்பதும், பலதரம் கண்டு பேசியும் கூடுதல் என்பதும் முதலாகிய காரணங்கள் வேண்டுவதில்லை. இவருக்கும் அறிவு ஒத்தலே சிநேகமாகும் உரிமையைக்கொடுக்கும். (5)

786. பார்த்த அளவிலே மனம் நீங்க முகமாத்திரமே மலரும்படி சிநேகிப்பது சிநேகம் அல்ல. ஆனால் அன்பால் மனமும் மலரச் சிநேகிப்பதே சிநேகமாம். (6)

787. கேட்டைத்தரும் தீய வழிகளை நீக்கி, பற்ற நல்வழிகளை நடத்தி, வரினுலே கெடுதிவருங்காலத்து, அது விலக்கமுடியாமல் அந்தத் துன்பத்தைக் கூட இருந்து அனுபவிப்பதே சிநேகமாகும். (7)

788. சபையிலே வஸ்திரம் அவிழ்ந்தவனுக்கு, அப்பொழுதே கைசென்று உதவி அந்த அவமானத்தை நீக்குவதுபோல் சிநேகிக்கப்பட்டவனுக்குத் துன்பம் வந்தபோது அப்பொழுது சென்று உதவி அந்தத்துன்பத்தை ஒழிப்பதே சிநேகமாகும். (8)

789. நட்பினுக்கு அரசு இருக்கை யாதென்று கேட்டால் அது எந்த நாளும் வேறுபடாமல் கூடும் இடத்தெல்லாம் அறம்பொருள்களிலே தளராமல் தாங்கும் உறுதியே. (9)

790. இவர் நமக்கு இவ்வளவு அன்பினர், யாம் இவர்க்கு இவ்வளவு அன்பினேம் என்று ஒருவரை ஒருவர் சிறப்பித்துச் சொன்னாலும் நட்பு சிறிதாய்த் தோன்றும். (10)

80. ஆம் - அதி - நட்பு ஆராய்தல்.

The Choice of Friends.

[அதாவது முன் சொல்லப்பட்ட இலக்ஷணமுடையவரை ஆராய்ந்து அறிந்து பின்னே சிநேகிக்கவேண்டும்.]

791. சிநேகத்தை விரும்பி அந்தச் சிநேகத்தினிடத்திலே. நிற்பவர்க்கு ஒருவனோடு நட்புச் செய்த பின் அவனை விடுதலில்லை ஆகலால் நன்றாய் ஆராயாமல் சிநேகஞ் செய்வதைப் போலக் கேட்டைத்தருவது வேறு ஒன்றுமில்லை. (1)

792. குணமும் செய்கையும் நல்லது என்பதும் தீயது என்பதும் பலதரம் ஆராய்ந்தும், பலவழியால் ஆராய்ந்தும் ஒருவனோடு சிநேகம் செய்யாதவன், முதிய காலஞ் சாவதற்கு வருவதாகிய துன்பத்தைத் தனது பகைவர் நினைக்கவேண்டாமல், தானே விளைத்துக்கொள்ளுவான். (2)

793. ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும் குற்றத்தையும், குறைவில்லாத சுற்றத்தையும் ஆராய்ந்து அறிந்து அவனோடு சிநேகம் செய்யக்கடவன். (3)

794. உயர்ந்த குடியிலே பிறந்து தன்னிடத்து உலகத்தார் சொல்லும் பழிக்குப் பயப்படுவோனை, அவன் விரும்பும் பொருள்களில் சிலவற்றைக் கொடுத்தாகிலும் சிநேகம் செய்தலே சிறந்தது. (4)

795. தாம் உலகநடை அல்லாததைச் செய்ய நினைத்தால் சோகம் பிறக்கும் வகை சொல்லி விலக்கியும், செய்தால் பின் செய்யாத வகைசொல்லிக் கடிந்தும், அந்த உலகநடையைச் செய்யாத பொழுது செய்விக்கவும் வல்லவரை ஆராய்ந்து சிநேகம் செய்துகொள்ளக்கடவர். (5)

796. ஒருவனுக்குக் கேடு என்பது தன் சிநேகிதராகிய நீளங்களைக் குறைபாமல் அளப்பதாகிய ஒரு கோலாம். ஆதலால் அந்தக் கேட்டினிடத்தும் அதனாலே அடைபடுவது ஒரு நல்லதுவுண்டு. (6)

797. ஒருவனுக்கு லாபம் என்று சொல்லப்படுவது அறிவில்லாதவருடன் சிநேகங்கொண்டானானால் அதை நீக்குவதேயாம். (7)

798. தம்முடைய ஊக்கம் சுருங்குதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்ய நினையாதிருக்கக்கடவர். அதுபோலத் தமக்குத் துன்பம் வருங்காலத்துக் கைவிடுவோரது சிநேகத்தைக் கொள்ளாதிருக்கக்கடவர். (8)

799. ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீங்குவாருடைய சிநேகமானது, தன்னை யமன் கொல்லுங்காலத்து ஒருவன் நினைத்தாலும், நினைத்த மனத்தைச் சுடும். (9)

800. உலகத்தோடொத்துக் குற்றமில்லாதவருடைய சிநேகத்தையே பழக்கக்கடவன். உலகத்தோடொத்தல் இல்லாதவருடைய சிநேகத்தைத் தெரியாது கொண்டானானால் அவருக்கு வேண்டியது ஒருபொருளைக் கொடுத்தாகிலும் விடக்கடவன். (10)

81. ஆட்-அதி-பழைமை.

Familiarity.

[அசாவாக சிநேகிதர் பழைமையைப் பாவிருக்கும் குணத்தைப் பற்றி, அவர்செய்த பிழைகளைப் பொறுக்குதல்.]

801. பழைமையென்று சொல்லப்படுவது யாதென்று கேட்டால், அது பழைமையான சிநேகிதர் சுதந்திரத்தினாலே செய்தவைகளைச் சிறிதாகிலும் நினைக்காமல் அவைகளுக்குச் சம்மதப்பட்டு ஒழுகும் நட்பு. (1)

802. சிநேகிதர் உரிமையால் செய்பவையே நட்பிற்கு அவயவமாதலால் அவற்றைச் சம்மதிப்பதே சான்றோர் முறைமையாம். (2)

803. தாம் சம்மதிக்காத காரியமாக இருந்தபோதிலும் சிநேகிதர் சுதந்திரத்தினாலே செய்தவைகளைத் தாம் செய்தவைபோல் சம்மதிக்காவிட்டால், அவரோடு பழையதாய் வந்த சிநேகம் என்ன பிரயோசனத்தைச் செய்யும்? (3)

804. சிநேகிதர் உரிமையால் தம்மைக் கேளாது, தம்முடைய காரியத்தைச் செய்தால், அது விரும்பப்படும் குணத்தைப் பற்றி அறிவுடையோர் அதை விரும்புவார். (4)

805. சிநேகிதர் வெறுக்கத்தக்கவைகளைச் செய்தால், அதற்குக் காரணம் அறியாமை என்றாவது அல்லது மிகுந்த உரிமை என்றாவது அறிவுடையோர் கொள்ளுவர். (5)

806. சிநேகத்தின் எல்லைகடவாமல், அதிலே நின்றவர், தம்மோடு பழைமையில் வேறுபடாது சேர்ந்தவருடைய சிநேகத்தை அவராலே பொருள்கேடு வந்தகாலத்தும் விடார். (6)

807. அன்புடனே பழைமையாய் வந்த சிநேகத்தை உடையார், தமக்குக் கேடுகளைச் செய்தாராயினும் அவரிடத்து அன்பு நீங்கார். (7)

808. சிநேகிதர் செய்த பிழையைத் தாமாகவே அல்லாமல், பிறர் சொல்லையும் கொள்ளாத உரிமையுடையவர்களாக, அந்த நட்பினர் பிழை செய்தநாளும், அது பயன்பட்ட நாளாம். (8)

809. உரிமை கெடாமல் தொன்றுதொட்டு வருகின்ற நட்பினருடைய சிநேகத்தை, காரணமின்றிக் கைவிடாதவரை உலகத்தார் நட்புக்குரித்து விரும்புவர். (9)

810. தொன்றுதொட்டுவந்த நட்பினர் பிழை செய்தாலும், அந்தச் சிநேகிதர் தம் நட்புப்போல் அன்புடையராயிருந்தால், அவரைப் பகைவரும் விரும்புவர். (10)

82. தீ நட்பு.

Evil Friendship

[அதாவது தீக்குணத்தாரோடு உண்டாகிய நட்பாம்.]

811. ஆசை மிகுதியால் உண்பவர் போலிருந்தாலும், நற்குணம் இல்லாத தீக்குணமுடையவர் சிநேகம் வளர்தலைப் பார்க்கிலும் குறைதலே நல்லது. (1)

812. தமக்குப் பயனுள்ள காலத்துச் சிநேகித்து, அந்தப் பயன் இல்லாதகாலத்து நீங்குமனம் ஒத்திராதவருடைய சிநேகத்தைப் பெற்றதினால் இலாபம் என்ன? இழந்தால் கேடு என்ன? (2)

813. சிநேகத்தின் அளவு பாராமல் அதனால் வரும் பிரயோஜனத்தின் அளவுபார்க்கும் நட்பினரும், கொடுப்பாரைக்

கொள்ளாமல் விலையைக்கொள்ளும் வேசையரும் பிறர் கேடு நோக்காது அவர் சோர்வுபார்க்கும்கள்வரும் தம்முள் ஒப்பர். (3)

814. யுத்தம் வாராததற்கு முன்னெல்லாம், தாங்குவது போலிருந்து, யுத்தம் வந்தவிடத்து, யுத்தகளத்திலே தள்ளிவிட்டுப் போகின்ற கல்வியில்லாத குதிரையைப் போல்பவருடைய சிநேகத்தைக் கொள்ளுவதிலும் தனித்திருத்தல் நல்லது. (4)

815. செய்து வைத்தாலும் காவலாகாத கீழ்மக்களுடைய கெட்ட சிநேகம் ஒருவருக்கு உண்டாதலைப் பார்க்கிலும் இல்லாதிருத்தல் நன்று. (5)

816. புத்தியில்லாதவனுடைய மிக நெருங்கிய சிநேகத்தைப்பார்க்கிலும், அறிவுடையார் பகை கோடி மடங்கு நல்லது.

817. நகைப்புக்காரணமாகச் செய்யும் சிநேகிதரால் வரும் கெடுதியைப்பார்க்கிலும் பகைவரால் வரும் கெடுதி பத்துக்கோடி மடங்கு நன்றாம். (7)

818. தம்மால் முடியுங்காரியத்தை முடியாததாக நடிப்பவருடைய சிநேகத்தை அவர்க்குச் சொல்லாமலே விட்டுவிடக்கடவர். (8)

819. செய்கையும் சொல்லும் ஒவ்வாமல் வேறு வேறாயிருப்பவருடைய சிநேகம் நனவிலே மாத்திரமே அல்லாமல் சொப்பனத்திலும் துன்பம் செய்யும். (9)

820. வீட்டிலே தனியே இருக்கும்பொழுது, சிநேகஞ்செய்து சபையிலே பலர் நடுவிருக்கும்பொழுது பழிச்சொல்லுவாருடைய நட்பு, எவ்வளவு சிறிதாக இருந்தாலும் தம்மைச்சேராது நீக்கக்கடவர். (10)

83-ஆம்-அதி-கூடா நட்பு.

False Friendship.

[அதாவது பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமயம் கிடைக்கும் அளவும் புறத்திலே கூடி நடப்பவர் நட்பு.]

821. மனத்தால் கூடாது பகைகொண்டு வெளிக்கு நட்புப்பூண்டு ஒழுகுபவருடைய சிநேகம் சமயம் நேர்ந்தவிடத்துத் தாங்காது அற எறியும் (முழுதும் வெட்டும்) ஆயுதத்திற்குத் துணையாகிய பட்டடையாம். (1

822. சமத்த[illegible]க்கு [illegible]வர்களுடன் உண்டாகிய சிநேகம், [illegible], பெண்பாலார் மனம்போல் வேறுபட்டிருக்கும். (2)

823. கலைகளையும் பலவற்றைக் கற்றாலும், அதனால் மனந்திருந்தி நட்பினராகுதல் பகைவர்க்கு இல்லை. (3)

824. கண்டவிடத்து முகத்தால் இனிமையுள்ளவராகச் சிரித்து, [illegible] உள்ளே பகையாயிருக்கும் வஞ்சகருக்குப் பயப்படவேண்டும். (4)

825. மனத்தால் தம்மோடு பொருந்தாதவரை யாதொரு காரியத்திலும் [illegible] சொல்லின் தெளிதல் முறைமையுடையது அல்ல என்று [illegible]. (5)

826. சிநேகிதர்போல் நன்மைதரும் சொற்களைச் சொன்னாலும் பகைவர் சொற்கள் நன்மையைக் கொடுக்காது என்பதை அவர் சொல்லிய பொழுதே அறிந்துகொள்ளப்படும். (6)

827. வில்லின் வணக்கம் எதிர்த்தவர்களுக்குத் தீமை செய்தலைக் குறிக்குமையால், பகைவரிடத்தே உண்டாகும் சொல்லின் வணக்கத்தையும் [illegible] நன்மை செய்தலைக் குறித்தது என்று நினையாதிருக்கக்கடவர். (7)

828. பகைவர் குறிப்பை அறியவல்லவர்க்கு அந்தப் பகைவர் தொழுத கையுள்ளும் ஆயுதம் மறைந்திருக்கும்; அவர் அழுத கண்ணீருள்ளும் அப்படியே அது மறைந்திருத்தற்கு இடமாம். (8)

829. மிகவும் நட்பானது விரோதம் தோன்றும்படிப் புறத்திலே [illegible] நகைசெய்து, உள்ளே தம்மை இகழும் பகைவரைத் தாமும் அந்தச் சிநேகத்தினிடத்தே நின்று, புறத்திலே அவர் மகிழும்படிச்செய்து உள்ளே அது கெடும்படிக்குப் பொருந்திய குணத்தையுடையது. (9)

830. தம்முடைய பகைவர் தமக்கு நட்பினராய் நடக்கும் காலம் வந்தால் தாமும் முகத்தால் அவரோடு சிநேகம் செய்து, மனத்தால் அந்த நட்பை நீக்கிப், பின் அதுவும் விடக்கடவர். (10)

84ஆம்-அதி-பேதைமை.

Folly.

[அஃதாவது யாதொன்றும் அறியாமை.]

831. பேதைமை யென்று சொல்லப்படுவது, ஒருவனுக்கு [illegible] குற்றங்களெல்லாவற்றைப் பார்க்கிலும் மிகுந்த குற்றமாம். அது எது என்று கேட்டால், வறுமை பழி, பாவங்களைத் [illegible] கைக்கொண்டு செல்வம், புகழ், அறங்களைத் தரும் ஆக்கத்தைக் கொடுக்குமவைகளைக் கைவிடுதலாம். (1)

832. ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றுள்ளும், மிகுந்த பேதைமையாவது தனக்கு [illegible] ஆரம்பிக்கும் ஆகாக் காரியத்தை விரும்பிச் செய்தலாம். (2)

833. நாணவேண்டியவைகளாகிய பழிபாவங்களுக்கு நாணாமையும், நாடவேண்டியவைகளாகிய [illegible] நாடாமையும், எவரிடத்திலும் தாட்சண்ணியமில்லாத சொற்செயல் உடைமையும், விரும்பத்தக்கவைகளாகிய குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கங்களைப் பேணாமையும் பேதையின் தொழில்களாம். (3)

834. மனம், வாக்கு, மெய்களை அடக்கத்தக்க காரணமாகிய நூல்களைப் படித்தும், அந்த அடக்கத்தால் வரும் பயனை அறிந்தும், அதனைப் பிறர்க்குப் படும்படி சொல்லியும், தான் அடங்காதவனாகிய மூடனைப்போல, வேறு மூடன் இந்த உலகத்தில் இல்லை. (4)

835. மூடனானவன் வரும் பிறப்புகளில் எல்லாம், தான் புக்கு அழுந்துதற்கு இடமாகிய நரகத்தை இந்த ஒரு பிறப்பிலேயே செய்து கொள்ள வல்லவனாவான். (5)

836. செய்யும் முறைமையை அறியாத மூடன் ஒரு தொழிலை மேற்கொள்ளுவானானால், அதுவும் முடியாது [illegible] தன்னையும் கெடுத்துக்கொள்ளுவான். (6)

837. [illegible] பெருஞ்செல்வத்தைப் பெறுவானாகில் அதனை [illegible] சுற்றத்தார் பசியால் வருந்துவர். (7)

838. மூடன் தன்னுடைய கையிலே ஒரு பொருளை உடைமையாக அடைந்தால், அவன் மயங்குதல் முன்னமே பித்தனாகிய ஒருவன் அந்த மயக்கத்தின் மேலே கள்ளுண்டு மயங்கினாற் போலும். (8)

839. மூடனது சினேகம் பின் பிரிவு வந்த விடத்தும் இருவருக்கும் கொடுப்பதாகிய ஒரு துன்பமும் இல்லை. ஆகையால் மூடர் தம்முடன் கொண்ட நட்பு மிகவும் இனியது. (9)

840. பெரியோர்கள் நிறைந்த சபையிலே மூடன் புகுதல் அசுத்தம் மிதித்த காலைக் கழுவாமல் [illegible] அமளியின் மேலே வைத்தாற் போலும். (10)

85-ஆம்-அதி-புல் அறிவு ஆண்மை.

Fools' self Conceit.

[அதாவது தானே சிற்றறிவினைக் கொண்டிருந்து கொண்டே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் சொல்லும் உறுதிச் சொல்லைக் கொள்ளாமையாம்.]

841. ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் அறிவு இல்லாமையாவது அறிவில்லாமையே. அதை மற்றைய பொருள் இல்லாமையைப் போலெண்ணாமல், உலகத்தார் அதனை அப்படிப்பட்ட இல்லாமையாகக் கொள்ளார். (1)

842. தாழ்ந்த புத்தியையுடையவன் மனமகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்றைக் கொடுத்தல் கூடினாலும், அதற்குக் காரணம் பெறுகின்றவனுடைய நல்வினையே யன்றி வேறொன்றுமில்லை. (2)

843. புல்லறிவுடையோர் தாமே தமக்கு வருத்தும் வருத்தத்தைப்போல, வருத்தம் அவர் பகைவரானவர் தாமுடைய பகைவர்க்குச் செய்தல் முடியாது. (3)

844. புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது யாதென்று வினவின், அது தம்மைத் தாமே நல்லறிவுடையோம் என்று தாமே மதிக்கும் மயக்கமாம். (4)

845. புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும், தாம் கற்றவராக மேலிட்டுக் கொண்டு நடத்தல், குற்றமும் ஐயப்படு

தனக்கு ஒரு நோய் கொண்டாற்போல், அவனிடத்தும் பிறர்க்குச் சஞ்சலத்தைக் கொடுக்கும். (5)

846. புல்லறிவாளர் தமக்கு உண்டாகும் குற்றங்களைத் தெரிந்து விலக்காமல் [illegible]வாராஞல், மறைக்கத்தக்க அவயவத்தை ஆடையால் மறைத்தவராகத் தம்மை நினைத்தலும் புல்லறிவே. (6)

847. அருமையான [illegible] உபதேசப் பொருளைப் பெற்றும், மனதில் வையாது விடும் புல்லறிவாளன், அந்த உபதேசப் பொருளின் அடையும் நன்மையை அறியாமல் தானே தனக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்து கொள்ளுவான். (7)

848. புல்லறிவாளன் தனக்கு நன்மை பயப்பவைகளை அறிவுடையார் சொன்னாலும் செய்யான். அதுவன்றித் தானுமாக இவை செய்யத்தக்கவை என்று அறிந்து கொள்ளான். அந்த உயிர் போமளவும் [illegible] பூமிக்குப் பொறுத்தற்கு அருமையான ஒரு நோயாம். (7)

849. தனக்கு எல்லாம் அறிந்தவனாக மதித்தலால், பிறரால் குறைகளைத் தெரிந்து கொள்ளும் குணமில்லாதவனை, அறிவிக்கப்புகுவோனே அவனாலே பழிக்கப்பட்டுத் தான் அறியாதவனாய் முடிவான். அல்லாமலும் அந்த அறியும் தன்மை இல்லாதவனோ கொண்டது விடாமையால் தான் அறிந்த விதத்தால் அதனை அறிந்தவனாய் முடிவான். (9)

850. உலகத்தார் பலரும் உண்டென்று சொல்லும் ஒரு பொருளைத் தனதுடைய புல்லறிவால் இல்லையென்று சொல்லுவோன் மனிதனாக நினைக்கப்படான். பூமியிலே காணப்படுகிற ஒரு பேயாகக் கருதப்படுவான். (10)

86. [illegible]ம்-அதி-இகல்.

Hostility.

[[illegible] கம் முன்னே யுத்தம் செய்து வலிமை குன்[illegible] மாறுபாடு.]

851. [illegible] உயிர்களோடு சேர்ந்து இசையாமை [illegible] சுற்றம் மாறு படாமை என்[illegible]. (1)

852. பிறரோடு சேராமையைக் கருதி வெறுக்கத்தக்கவைகளை ஒருவன் செய்தானாயினும் மாறுபாட்டைக் கருதித் துன்பமானவற்றைச் செய்யாமல் தாம் அவனுக்குச் செய்யாமையே சிறந்தது. (2)

853. மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச் செய்யும் நோயை ஒருவன் தன் மனத்திலிருந்து நீக்குவானானால், அது அவனுக்கு எக்காலத்திலும் புகழ் உடையவனாயிருக்கத்தக்க காரணமாகிய கெடுதல் இல்லாத புகழைக் கொடுக்கும். (3)

854. மாறுபாடு என்று சொல்லப்படுகின்ற துன்பமானவைகள் எல்லாவற்றைப் பார்க்கிலும் மிகுந்த துன்பம் ஒருவனுக்கு இல்லாதிருந்தால் அது அவனுக்கு இன்பங்களெல்லாவற்றையும் பார்க்கிலும் அதிகமான இன்பத்தைக் கொடுக்கும். (4)

855. மாறுபாடு என்னும் நீக்குணம் தன் மனத்திலே உண்டானவிடத்து, அதைப் பொறுத்துக்கொண்டு சாய்ந்து நடக்க வல்லவரை வெல்லக் கருதும் இயல்பை உடையவர் யாவர்? (5)

856. அதிகமாகிய மாறுபாட்டினாலே மேலும் மேலும் பிரயத்தனப்படுகிறவன் எனக்கு வெல்லுதல் எளிது என்று அதைச் செய்பவனுடைய உயிர் வாழ்க்கை பிழைத்தலும், முழுதும் கெடுதலும் சீக்கிரத்திலே உண்டாம். (6)

857. மாறுபாட்டோடு பொருந்துதலையுடைய துன்பஞ் செய்கின்ற அறிவினர், வெற்றி பொருந்துதலையுடைய நீதி நூற்பொருளை யறியமாட்டார். (7)

858. தன் மனத்திலே மாறுபாடு தோன்றியவிடத்து அதனை யேற்றுக்கொள்ளாது நீக்குதல் ஒருவனுக்குச் செல்வமாம். அப்படிச் செய்யாமல் அந்த மாறுபாட்டிலே மிகுதலை மேற்கொள்வானானால், கேடும் தன்னிடத்திலே வருதலை மேற்கொள்வான். (8)

859. ஒருவன் தன்னிடத்துச் செல்வம் வரும்பொழுது காரணமுண்டானாலும் மாறுபாட்டை நினையான். தனக்குக் கேடு செய்து கொள்ளுமிடத்துக் காரணம் இல்லாதிருந்தும் மாறுபாட்டிலே மிகுதலை நினைப்பான். (9)

860. ஒருவனுக்கு மாறுபாடு ஒன்றினாலே துன்பம் செய்பவை எல்லாம் உண்டாகும்; நட்பு ஒன்றினாலே நல்ல நீதி என்னும் பெருஞ்செல்வம் உண்டாம். (10)

87-ஆம்-அதி-பகைமாட்சி.

The might of Hatred.

[ஏதாவது அறிவில்லாமை முதலாகிய குற்றங்களுடைமையால் பகையைப் பெருமைப்படுத்தல்.]

861. தம்மைப்பார்க்கிலும் வலியவர்க்குப் பகையாய் எதிர்த்தலை நீக்கக்கடவர். மற்றைய மெலியவர்க்குப் பகையாதலை நீக்காமல் விரும்பக்கடவர். (1)

862. ஒருவன் தன் சுற்றத்தார் மேல் அன்புடையவன் அல்லவன்; அதுவல்லாமல் வலிமையுள்ள துணை இல்லாதவன்; அதன்மேல் தான் வலிமை இல்லாதவன்; அப்படிப்பட்டவன் மேல் வந்த பகைவன் வலிமையை எப்படி நீக்குவான்? (2)

863. ஒருவன் அஞ்சவேண்டாதவைகளுக்கு அஞ்சுவான்; அறியவேண்டியவைகளை அறியான்; பிறரோடு சினேகம் இல்லாதவன், இவைகள் அல்லாமலும் யாவரிடத்திலும் உலோபகுணமுடையவன்; இப்படிப்பட்டவன் பகைவர்க்கு மிக எளியவனாவான். (3)

864. ஒருவன் கோபத்தினின்றும் நீங்கான்; அதுவே அல்லாமல் இரகசியமாக வைக்கவேண்டியவைகளை இரகசியமாக வையாமல் பிறர் அறியத்தூற்றுவான்; இப்படிப்பட்ட குணமுடையவனை மேல் செல்லுதல் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எவர்க்கும் எளிதாம். (4)

865. ஒருவன் நீதி நூல்படிக்காமலும், அது விதித்த தொழில்களைச் செய்யாமலும், தனக்கு வரும் பழியைப் பாராமலும், தான் குணமுடையனாகாமலும் இருப்பவனுடைய பகைமை, அவனுடைய பகைவர்க்கு மிக இனிதாம். (5)

866. தன்னையும் பிறரையும் தான் அறியாமைக்குக் காரணமாகிய கோபத்தையுடையவனாயும், மேலும் மேலும் வளராநின்ற காமத்தை உடையவனாயும் பகைவர் தனக்கு மிகவெளியவாகவென்று விரும்பிக்கொள்ளுவார். (6)

867. தொழிலை ஆரம்பித்திருந்து, அதற்குத்தகாதவைகளைச் செய்பவனுடைய பகைமையைச் சில பொருள் கெடக்கொடுத்தாகிலும் கொள்ளல் வேண்டும். (7)

868. ஒருவன் குணம் ஒன்றும் இல்லாதவனும், குற்றம்

பலவுண்டானவிடத்துத் துணையில்லாதவனுமுள்ள அரசன் தன் பகைவர்க்கு மிக எளியனாவான். (8)

869. நீதியை அறியாமையும், அஞ்சுதலுமுடைய பகைவரைப்பெற்றால், அந்தப் பகைவரை வெல்வார்க்கு உயர்வுள்ள இன்பங்கள் நீங்கமாட்டா. (9)

870. [illegible] பகைத்தலால் வரும் எளிய பொருளை அடையாதவன் [illegible] அடையான். ()

88- பகைத்திறந்தெரிதல்.

Knowing the Quality of Hate

[அதாவது [illegible] பகையை [illegible] [illegible] தன்மையையும் [illegible] [illegible] குணமுடையதென்று [illegible] [illegible] உண்டாகும் குற்றமென்று இந்த விதங்களை ஆராய்தல்.]

871. ஒருவன் பகை [illegible] [illegible] தன்மையையுடையதல்ல என்று நீதி அறிவிக்கும். (1)

872. ஒருவன் வில்லேர் [illegible] உடையோரோடு பகை கொண்டாலும், சொல்லேர் [illegible] உடையோரோடு பகை கொள்ளாதிருக்கடவன். அதாவது அரசனுக்கு வீரர்கள் பகையாயிருப்பார்களேயாகிலும் மந்திரிகள் பகை கொடிதென்பதாம். (2)

873 தான் தனியனாயிருந்துகொண்டு பலரையும் பகை செய்து கொள்ளுவான், பித்துக்கொண்டவரைப் பார்க்கிலும் புத்தியில்லாதவனாவான். (3)

874. இந்த உலகமானது, வேண்டியவிடத்துப் பகையை வேறுபடுத்தித் தனக்குச் சிநேகமாகச் செய்துகொண்டு நடக்கும் குணத்தையுடைய அரசரது பெருமையுள்ளே அடங்கிறது (4)

875. தனக்குத் துணையில்லாமல் பகை இரண்டாயிருக்கும் அரசன், அந்தப்பகையிரண்டனுள் அந்தச்சமயத்திற்கு

...ராசத்தனக்குப் பொருந்தியதாக ஒன்றை இனிய துணையாகச் செய்துகொள்ளக்கடவன். (5)

876. பகைவனை முன் தெளிந்தானாலும் தெளியானாலும், தனக்குப் பயப்பக்கத்தில் ஒரு தொழிலால் தாழ்வுவந்தவிடத்து, அவனுடன் கூடாமலும் அவனை நீக்காமலும் இடையே விட்டுவைக்கக்கடவன். (6)

877. வருத்தப்படுகிறதைத் தானாக அறியாத சிநேகிதர்க்குத் தன் வருத்தத்தைச் சொல்லாதிருக்கக்கடவன். வலிமை இல்லாமையைப் பகைவரிடத்து மேலிட்டுக்கொள்ளாதிருக்கக்கடவன். (7)

878. தான் தொழில் செய்யும் வகையைத் தெரிந்து, அந்தத் தொழிலை முயற்சித்துத் தக்கபடித் தன்னைப் பெருக்கி, மற்ற தன்னைப் பாதுகாக்கவே, தன் பகைவரிடத்துண்டாகிய செருக்குக் கெடும். (8)

879. களையவேண்டியதாகிய முள்ளுமரத்தை இளையதாகிய நிலையிலே களையக்கடவர். அல்லாமல் முதிர்ந்த நிலையில் களையத்தொடங்கினால் களைபவருடைய கையை அதுதான் களையும். (9)

880. சீற்றமோடு பகைப்பாருடைய கர்வத்தைக் கெடுக்கவேண்டியிருக்க, இகழ்ச்சியால் அது செய்யாத அரசர், பின் மூச்சுவிடுமாத்திரத்திற்கும் நிசயமாக இருக்கின்றவரல்லர். (10)

89-ஆம்-அதி-உட்பகை.

Secret Enimity: Treachery.

[அதாவது வெளிப்படையாயுள்ள பகைக்கு இடமாக்கிக் கொடுத்து அது வெளியுமாகவும் உள்ளாய் நிற்கும் பகை.]

881. ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டியனவாகிய நிழலும் நீரும் முன் இன்பம் செய்வனவாய் இருந்தபோதிலும் பின் பெருங்கால், பெருவயிறு, முதலான நோய் செய்யுமானால் இனியன அல்லவாம். அதுபோல தழுவவேண்டியனவாகிய சுற்றத்தார் இயல்புகளும் முன் இன்பம் செய்வனவாய் இருந்தபோ திலும் பின் துன்பம் செய்பவை இனியன அல்லவாம். (1

882. வாளைப்போல வெட்டுவோமென்று வெளிப்பட் டு நிற்கும் பகைவரைப் பயப்படாது இருக்கக்கடவர். அப்படிக்

இல்லாமல் உறவினர் போல மறைந்து நிற்கும்பகையாகிய சிநேகத்தைப் பயப்படக்கடவர். (2)

883. உட்பகையாயுள்ளவரை அஞ்சித் தம்மைக் காத்துக்கொண்டு நடக்கக் கடவர். அப்படி நடவாதபோது, தமக்கு ஓர் தளர்ச்சி வந்த காலத்துக் குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவிபோல் தப்பாது அவர் கெடுப்பார். (3)

884. வெளியில் நட்பாக இருப்பதுபோலக்காட்டி மனத்திலே நட்புக்கொள்ளாத உட்பகை அரசனுக்கு உண்டாவதானால், அது அவனுக்குச் சுற்றம் வசப்படாமைக்குக் காரணமாகிய பல குற்றங்களையும் கொடுக்கும். (4)

885. வெளியில் பந்துத்துவத் தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதானால், அது அவனுக்கு இறத்தல் முறையோடு கூடிய பல குற்றங்களையும் கொடுக்கும். (5)

886. பகைமை தனக்கு உள்ளாயினோரிடத்து உண்டாகுமானால், அரசன் இறவாதிருத்தல் எக்காலும் முடியாது. (6)

887. செப்பு மேல் மூடியோடு புணர்ந்த சேர்க்கையைப் போல வெளியிலே வேற்றுமை தெரியாமல் சேர்ந்தவராயிருந்தாலும், உட்பகை யுண்டாகிய குடியிலுள்ளார் மனத்திலே தம்மோடு கூடார். (7)

888. மேன்மேல் வளர்ந்துவந்தாலும் உட்பகையுண்டாகிய குடி அரத்தினாலே தேய்க்கப்பட்ட இரும்பு போல் அதனாலே தேய்க்கப்பட்டு வலிமை குறையும். (8)

889. அரசனுடைய உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின் பிளவைப்போலச் சிறுமையையுடையதாயிருந்தபோதிலும், பெருமை யெல்லாம் அழியவரும் கேடு அந்தப்பெருமையினிடத்ததாம். (9)

890. மனம் பொருந்துமை இல்லாதவரோடு கூட ஒருவன் வாழும் வாழ்வானது, ஒரு குடிசையினுள்ளே பாம்போடு கூட வாழ்ந்தாற்போலாகும். (10)

---

90. ஆம் - அதி - பெரியாரைப் பிழையாமை.

Against Reproaching the Great.

[அதாவது பெரியோரை அவமதித்து நடவாமை]

891. எடுத்துக்கொண்ட காரியங்கள் எல்லாம் முடிக்க வல்லவருடைய வல்லமைகளை இகழாமையாவது, தப்பிடத்திலே நீங்குவாராமல் காப்பவர் செய்யும் காவல்கள் எல்லாவற்றையும் பார்க்கிலும் மிகுதியையுடையது. (1)

892. பெருமை, அறிவு, முயற்சி என்னும் வலிமைகளாலே பெரியவராயினவரை, வேந்தர் நன்கு மதியாமல் அவமரியாதை நடப்பாராகில், அந்த நடக்கையானது அந்தப்பெரியவராலே எந்த நாளிலும் நீங்காத துன்பங்களை அந்த வேந்தருக்குக் கொடுக்கும். (2)

893. ஒருவன் தான் கெடவிரும்பினால், வேற்று வேந்தனைக் கொல்லுதல் வேண்டியவிடத்து, அதனை அப்பொழுதே செய்யவல்ல அரசரிடத்துப் பிழையை நீதிநூலிலே சொல்லப்பட்டதைக் கேளாமல் செய்யக்கடவன். (3)

894. வலிமையாற்றலும் உடையார்க்கு, அந்த ஆற்றல்கள் இல்லாதவர் தாம் முற்பட்டுத் துன்பந் தருவனவற்றைச் செய்தல், தானேயும் வருந் குணத்தையுடைய யமனை, அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தலோடு சமமாகும். (4)

895. பகைவர்க்கு வெவ்விதாகிய வலிமையினையுடைய அரசரால் கோபிக்கப்பட்ட வேந்தர், அவரைத் தப்பி எங்கே போய் உளராவர்? ஓரிடத்திலும் உளராகார். (5)

896. காட்டிலே சென்றொருவர் அவ்விடத்திலே தீயால் சுடப்பட்டானாலும், ஒருவழியால் உயிர் பிழைத்தலுங் கூடும்; தவத்தால் பெரியோர்க்குப் பிழைசெய்து நடப்பவர் எந்த வழியாலும் உயிர் பிழையார். (6)

897. சாபானுக்கிரகங்களுக்குக் காரணமாகிய பெருமையிலே மாட்சிமைப்பட்ட அருந்தவர், அரசனைக் கோபிப்பாராகில், அமைச்சு, நாடு, அரண், படை என்று சொல்லப்பட்ட அங்கங்களெல்லாம் அமைந்து பெற்ற அந்த அரசன் அரசாட்சியும், சம்பாதித்து வைத்த பெரும் பொருளும் என்ன பிரயோஜனத்தையுடையன? (7

898. மலையை யொக்கும் அருந்தவர் கெடநினைப்பாராகில், அப்பொழுதே இ[illegible] பேர[illegible]வர் தம்முடைய குடியோடு கெடுவர். (8

899. காத்தற்கு அருமையாய் உயர்ந்த விரதங்களை யுடையார் கோபிப்பாரானால், அவர் வலிமையால் இந்திரனும் நடுவே தனபதம் இழந்து கெடுவான். (9)

900 மிகவும் அதிகமான தவத்தினையுடையவர் கோபிப்பாரானால், அவரால் கோபிக்கப் பட்டவர், மிகவும் பெரிய அரண், படை, பொருள், சுற்று முதலிய சார்புடையவராய் இருந்தாலும் அது பற்றிப் பிழைக்கமாட்டார். (10)

91-ஆம்-அதி-பெண்வழிச்சேறல்.

Being led by Women.

[இனிக்காமத்தால் வரும்பகை சேரப் படாதல்லாமல் இருந்த போதிலும், செல்வம் இழக்கல், கேட்டைத் தருதல் ஆகிற தொழில்களாலே பகைபோல் சமமாய் இருத்தலால் பகையினிடத்துப் பொருந்துவனவாம்.]

901. இன்பம் காரணமாகத் தன் மனையாளை விரும்பி, அவள்வழி நடப்பவர் தமக்கு உறுதியாகிய துணையாகிய அறத்தை அடையார். இனிப்பொருளைச் சாதித்தலை முயல்வார் அதற்கு விரோதமென்று இகழும் பொருளும் அதுவே இன்பமாம். (1)

902. தன் ஆண்மையை விரும்பாது பெண்மையை விரும்பி மனையாளை உடைய பெண்ணாகிய வர்க்கம் ஆண்மையுடைமை காணப்படும் பெரியோர் நாணும் நாணுதலைக் கொடுக்கும். (2)

903. நல்லார் மனையிடத்துத் தாழ்ந்து நடக்கிற மாந்தர் ஆசையாலே அந்த அச்சமில்லாத மனையாளிடத்துப் போதும் காலமும் நாணுகிறவர் அஞ்சி நடக்கிறவர் பெரியோரிடத்தும். (3)

904. தன் மனையாளுக்குப் பயந்து நடக்கின்ற மறுமைப் பயனில்லாதவனுடைய தொழிலாளரும் தன்னை உடையதுவும் வழியும் நல்லோராலே கொண்டாடப்படுவதில்லை. (4)

905. தன் மனையாளுக்குப் பயப்படுவோன், தான் சம்பாதித்த பொருளையும் ... நல்லார்க்கு நல்லதைச் செய்யாமல் ... அதனை.

906. தம்மனையாளுடைய மூங்கில் போலும் தோளுக்குப் பயப்படுவோர் வீரத்தன்மையால் சுவர்க்கம் அடைந்த தேவர் போல இந்த உலகத்தில் வாழ்ந்தாரானாலும், ஆண்மையில்லாதவரே. (6)

907. வெட்கம் இல்லாமல் தன் மனைவியுடைய ஏவல் தொழிலைச்செய்து திரிகின்றவனின் ஆண் தன்மையைப்பார்க்கிலும் வெட்கத்தையுடைய அவள் பெண்தன்மையே பெருமை உடைத்து. (7)

908. தாம் விரும்பியபடி அல்லாமல் தம்முடைய மனையாள் விரும்பியபடி நடப்பவர், தம்மோடு நட்புச்செய்தார் அடைந்த குறையை முடிக்கமாட்டார். அல்லாமலும் மறுமைக்குத் துணையாகிய தருமத்தையும் செய்யமாட்டார். (8)

909. தருமச்செயலும், அது முடித்தற்குக் காரணமாகிய பொருட்செயலும் அந்த இரண்டின் வேறாகிய இன்பச் செயல்களும், தம்மனையாள் ஏவல் செய்பவரிடத்து உண்டாகா. (9)

910. மேற்கொண்ட கருமத்தை ஆலோசித்தலில் சென்ற மனத்தினையும், அந்த ஆலோசனையினாலாகிய செல்வத்தினையும் உடையராகிய அரசர்களுக்கு மனையாளைச் சேர்தலால் உண்டாகும் அறியாமை எக்காலத்திலும் உண்டாகாது. (10)

92-ஆம்-அதி-வரைவின் மகளிர்.

Courtesans.

[அதாவது தமது நலத்தை, விலை கொடுப்பவர் யாவர்க்கும் விற்பது அல்லாமல், அதற்கு ஆவார் ஆகாதார் என்கிற வரையில்லாத மகளிரது இயல்பாம்.]

911. ஒருவனை அன்பு காரணமாக விரும்பாது பொருள் காரணமாக விரும்பும் மகளிர் அது கையில் வரும் அளவும் தாம் அன்பு பற்றி விரும்பினதாய்ச் சொல்லும் இனிமையான சொல், அவனுக்குப் பின் துன்பத்தைக் கொடுக்கும். (1)

912. ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்து தெரிந்து அது அடையும் அளவும் தம் குணமுடைமை சொல்லும் குணமில்லாத மகளிருடைய ஒழுக்க வழியை ஆராய்ந்து அறிந்து, அவளைப்பொருந்தாமல் விடக்கடவர். (2)

913. கொடுப்பானை விரும்பாது பொருளையே விரும்பும் பொது மகளிருடைய பொய்யான தழுவுதல், பிணமெடுப்பவர் இருட்டறையிலே [illegible] தழுவினாற் போலும். (3)

914. ஞானமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிருடைய புல்லிய நலத்தை யாவரோடும் கூடிய பொருளை யாராய்ந்து சம்பாதிக்கும் அறிவினையுடையார் தீண்டார். (4)

915. முற் பிறப்புகளிற் செய்த நல்வினைகளால் உண்டாகிய இயற்கை யறிவோடு, கல்வியினாலாகிய செயற்கை யறிவையுமுடையார், பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய் ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார். (5)

916. ஆடல் பாடல் அழகு என்பனவற்றால் களித்துத் தம்முடைய புல்லிய நலத்தை விலை கொடுப்பார், எவரிடத்திலும் பரப்பும் மகளிரது தோளை அறம்பொருளின்பங்களாகிய தம் புகழை உலகத்திலே பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார்.

917. மனத்தில் வேறு பொருள்களை யாசைப்பட்டு, அப் பொருள்கள் காரணமாகக் கொடுப்பவனை தேகத்தினாலே புணரும் மகளிரது தோள்களை, நிறையினாலே திருந்திய மனமில்லாதவர் புணருவர். (7)

918. மனம், சொல், செயல்களால் வஞ்சித்தலை வல்ல மகளிரது புணர்ச்சியை, அவ்வஞ்சனையை யாராய்ந்தறியும் அறிவுடையரல்லாதவர்க்கு * அணங்கு தாக்கு என்று நூலோர் சொல்லுவர். (8)

919. உயர்ந்தோர் இழிந்தோர் என்று கருதாது விலை கொடுப்பார் எல்லாரையும் கூடும், மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய மகளிரது மெல்லிய தோள்கள், அக்குற்றத்தை யறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புகுந்தழுந்தும் நரகமாம். (9)

920. இரண்டுபட்ட மனத்தையுடைய மகளிரும், கள்ளும், சூதும், என இம்மூன்றும் இலக்குமியால் விடப்பட்டவர்க்கு நட்பாம். (10)

---

* அணங்கு தாக்கு — பேய் கவிந்து பிடித்தல். காமமயக்கத்தையுடைய வாலிபர்களைப் பேய்மகளெனும் தெய்வம் பழகுதற்குக் கனவில் பிரியமுள்ள மங்கை போல் வந்து புணர்ந்து பாயிடையில் இளைக்கச் செய்து கொல்லும்.

93-ஆம்-அதி-கள் உண்ணாமை.

Abstinence from Toddy.

[இனி ஒழுக்கமும் உணர்வும் அழிக்கக்கூடிய அவ்வகை யின்பங்களிலே தொடர்ப்பட்டதாய கள்ளினை உண்ணாமையின் சிறப்பு முறைமையை விளக்கக் கூறுகின்றார்]

921. கள்ளினைமேல் ஆசைகொண்டு ஒழுகுவார், எந்நாளும் பகைவர்க்கு அஞ்சப்படார் அதுவேயல்லாமல் முன்பெற்று நின்ற புகழினையும் இழப்பர். (1)

922. அறிவுடையாரினை, அறிவிலாதற்குக் காரணமாகிய கள்ளை உண்ணாதிருக்கக்கடவர். அல்லாமலும் உண்ணல் வேண்டுமானால், நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்ணக்கடவர். (2)

923. எது செய்தாலும் சகிக்கக்கூடிய தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் துன்பந்தருவதாம், குற்றம் யாதும் பொறாதவர்களும் நல்லொழுக்கமும் கொள்கையறிந்த ஞானத்தின் விலக்குக் குணத்தையுமுடைய பெரியோர் முன் களித்தல் அவர்க்கு என்னாம்? (3)

924. கள்ளென்று சொல்லப்படுகிற யாவரும் இகழும் பெரிய குற்றத்தையுடையவரை நாணமென்று சொல்லப்படுகிற பெண் பார்த்தும் அருகே அவர்க்குப் பிரசன்னமாகாள். (4)

925. பொருளை விலைப்பொருளாகக் கொடுத்துக் கள்ளால் தன் சரீரம் மயக்கங்கொள்ளுதல் அவர் பழவினைப்பயனாகிய பொய்யை அறியாமையைத் தனக்குக் காரணமாக உடையது ()

926. தூங்கினவர் பிரேதமடைந்தவர்களினும் வேறுதலையுடையவரானாலும் அக்காலத்தில் அறிவில்லாமையால், வேறென்னப்படார். அப்படியேபோல் கள்ளுண்பாரின் வேறு நஞ்சுண்பாரா யிருப்பார், எக்காலத்திலும் மேற்சொல்லப்படார்; அவர் [illegible] மாயாவர் (6)

927. கள்ளை மறைந்து குடித்து அகக்களிப்பால் தம்மறிவு சோர்பவர், உள்ளூர் வாழ்பவரால் மனதில் நடக்கிற காரியத்தை ஆலோசித்து அறியப்பட்டு, எக்காலமும் சிரித்து அவமதிக்கப்படுவார் (7)

928. மறைந்துண்டும் யான் கள்ளுண்டறியேனென்று,

னென்றபொழுது தம் அரசாய கூறுகளை விடுக்கமாட்டார். அவ னுடைய பொழுதெல்லாம் நிறைந்திருந்தால் தவறுகளையும் புண்ணியத்தில் ஒளித்த குற்றமும் முன்னையிலும் மிகுந்து வெளிப் படும். (8)

929. கள்ளுண்டு களித்தான் ஒருவனை, நூல் கூட்டமெல்லாம் மறைந்திருந்தவன் காரணங்காட்டித் தெளிவிக்கல், இருண்மை சூழும் ஒருவனை மறைவிருந்தவன் விளக்கெடுத்துத் தேடிப்போக்கும்.)

930. கள்ளுண்ணாப்பொழுது ஒருவன் தான் கள்ளையுண்டு [illegible] களித்திருக்கும்பொழுது களித்த [illegible] உண்டபொழுதுண்டாகும் [illegible] அதுவும் [illegible] (10)

94. சூது.

Gaming.

[அங்கள்ளுண்டல் போல அறம் பொருள் இன்பங்களுக் கு தடையாயுள்ள சூதாடுதலையும் [illegible] ஆரம்பித்து, முதலில் சூதின் தன்மை கூறுகிறார்.]

931. ஒருவன் சூதாட்டத்தில் வெல்லுதல் [illegible] [illegible] யாதும் விரும்பாதிருக்கக்கடவன். [illegible] பொருள் ஆட்டத்தால் உண்டானால், அப்பொருள் [illegible] பறைந்த [illegible] இரும்பினை [illegible] விழுங்கினதற்கு ஒப்பாம். (1)

932. அகத்தாண்டிலுள்ள இருப்புப்பொருள் ஒன்றைப் பெற்று ஒன்றுடைய பெரும்பொருளையும் [illegible] இழந்து தரித்திரராகும் சூதாடிகளுக்கும் பொருளால் நன்மையும் இன்பமுமடைந்து வாழ்வதாகிய வழி உண்டாகுமோ? உண்டாகாது. (2)

933. உருளும் கவற்றில் (தாயக்கட்டையில்) அகப்பட்ட ஆதாயத்தை ஓயாமல் சொல்லிச் சூதாடுவோனால், அவன் [illegible] பாதித்த பொருளும், அவனுக்குப் பொருள் வரும் வருவாயும், அவனைவிட்டு நீங்கிப் பகைவரிடத்தே தங்கும். (3)

934. தன்னை விரும்பினவர்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்துத், தனக்குள்ள சிறப்புடைமையும் அழிக்கும்

சூதைப்போல் தரித்திரத்தைக் கொடுக்கவல்லது வேறொன்றி ல்லை. (4)

935. முற்காலத்திலே தாமுடையவராயிருந்தே இல்லாத வராய் நடந்தவர், கவற்றினையும், அதாடுமிடத்தினையும், அந்த ஆடுதற்குரியனவாம் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கை விடாத பேர்களாம். (5)

936. தன் பெயர் சொல்லல் மங்கலமல்லாமையால் சூதெ ன்று வேறு பெயரால் சொல்லப்படுகிற மூதேவியால் விழுங்கப் பட்டவர், இம்மையில் வயிறு நிறைய உண்ணப்பெறார். மறு மையில் நரகத்துன்பமும் அனுபவிப்பர். (6)

937. அறமும் பொருளும் இன்பங்களுக்கு விதித்த காலத்தை அரசன் சூதாடுமிடத்தில் கழிப்பானாகில், அது நெடுநாளாய் வந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் கெடுக்கும் (7)

938. சூதானது கவறைப்பழகினவனுடைய செல்வத்தைக் கெடுத்துப் பொய்யை மேற்கொள்ளச்செய்து, மனத்தில் உண் டாகிற அருளைக் கெடுத்து, அவனை இருமையிலும் துன்பத்தை அடைவிக்கும். (8)

939. அரசன் சூதைத் தனக்கு விளையாட்டாக விரும்பு வானானால், மதிப்பும், கல்வியும், செல்வமும், உணவும், ஆடை யும் என்ற ஐந்தும் அவனைச் சேராவாம். (9)

940. சூதாடலால், இப்பிறப்பிலும் வருபிறப்பிலும் உண் டாகும் நல்வினையின் பயனாகிய சுகபோகங்களை இழக்குந்தோ றும், அதன் மேலே ஆசைசெய்யும் சூதுபோல, உயிரானது உடம்பால் தன்னைப்பற்றியும், பிறவுயிர்களைப்பற்றியும், தெய்வத் தைப்பற்றியும் வரும் பிறவித்துன்பங்களையும் அனுபவிக்குந்தோ றும் அதன்மேலே ஆசையையுடையது. (10)

95-ஆம்-அதி-மருந்து.

Medicine.

[முன் ஜன்மத்திற் செய்த கருமத்தினாலும், காரணங்களினா லும் மனிதர்க்கு வாத முதலாகிய நோய்கள் வரும். அவைகளுள் கருமத்தால் வருவன அந்த வினைகழியும் போதல்லாமல் தீரா மையால் அவை நீங்கிமற்றைக் காரணங்களால் உண்டாகும் வியா திகளைத்தீர்க்கும்பொருட்டு மருந்தின் வகையும் சொல்லுகின்றார்]

911. [illegible] (1)

912. [illegible] (2)

913. [illegible] (3)

914. [illegible] (4)

915. [illegible] (5)

916. [illegible] (6)

917. [illegible] (7)

918. [illegible]

து அதற்குத் தக்கபடிச் செய்யும் வழிப் பிழைபடாமல் செய்யக்கடவன். (8)

949. ஆயுள் வேதத்தினைக்கற்ற மருத்துவன் நோய் தீர்க்கும் உபாயத்தைச் செய்யுங்கால், நோயாளியளவையும், அவனிடத்து நிகழ்கின்ற வியாதியின் அளவையும், தான் செய்தற்கு ஏற்ற காலத்தையும், அந்த நூல்வழியால் பார்த்து அவைகளோடு பொருந்தச் செய்யக்கடவன். (9)

950. நோய்க்கு மருந்தாவது, அந்த வியாதியை யுற்றவன், அதனைத் தீர்க்கும் மருத்துவன், அவ்வியாதியாளனுக்குச் சாதனமாகிய மருந்து, அந்த மருந்தினைத் தப்பாமல் செய்பவன் என்று சொல்லப்பட்ட அந்த நான்கு பகுதியை யுடைய நான்கு திறத்ததே. (10)

அங்க இயல் முற்றிற்று.

ஒழிபு இயல்.

Appendix.

[இனி அரசியலினும் அங்கவியலினும் அடங்காது ஒழிந்தவைகளின் இயல்பைச் சொல்லுகின்றார்.]

96. ஆம் - அதி - குடிமை.

Nobility.

[அதாவது உயர்ந்த குடியிலே பிறந்தவரது தன்மை.]

951. செம்மையும், நாணமும் ஒருசேர உயர்ந்த குடியிலே பிறந்தவர்களிடத்து அல்லாமல், பிறரிடத்தே இயல்பாக உண்டாகாது. (1)

952. உயர்ந்த குடியிலே பிறந்தவர் தமக்குரிய ஒழுக்கம் சத்தியம், நாணம், என்னும் மூன்றில் கல்வியால் அல்லாமல் தாமாகவே வழுவாது நடப்பர். (2)

953. எக்காலத்திலும் வேறுபடாத குடியிலே பிறந்தவர்க்கு, சீக்கிரமென்ற பொருளுடன் முகமலர்ச்சியும், உள்ளவை கொடுத்தலும், இன்சொல் சொல்லுதலும், இகழாமை

யும் ஆகிய நான்கும் உரிமையாயிருக்குமென்று நூலோர் சொல்லுவார். (3)

954. உயர் குடியிலே பிறந்தவர், பலவாக அடுக்கிய கோடியளவினதாகிய பொருள்களைப் பெற்ற போதிலும், தம்முடைய ஒழுக்கம் தவறுதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்யார். (4)

955. பழங்காலந்தொடங்கிப் பேர்பெற்று வருகிற குடியிலே பிறந்தவர், தாம் கொடுக்கக் கொடுக்கப் பொருள் முனைவிருந்து போனாலும், தருவதை விட்டுத் தமதுடைமையினின்றும் நீங்கார். (5)

956. குற்றமில்லாது வாங்கின தமது குடிப்பெருமையோடு வாழக்கடவோமென்று நினைத்து, அப்படியே வாழ்வார் தரித்திரம் அடைந்த காலத்திலும், வஞ்சனையைப் பொருந்தித் தம் குடிமைக்குப் பொருந்தாத தொழில்களைச் செய்ய மாட்டார். (6)

957. உயர்ந்த குடியிலே பிறந்தவரிடத்து உண்டாகிற குற்றமானது காணப் பெரிதாக விளங்கித் தோன்றும், ஆகாயத்திலே சந்திரனிடத்திலுள்ள களங்கம் போல வெளியாகும். (7)

958. நலமும் நயமும் உடையவனுடைய வாழ்க்கையிலே தங்க அன்பில்லாமை உண்டானால், உலகத்தார் அவனை அந்தக் குலப்பிறப்பிலே சந்தேகிப்பார். (8)

959. நிலத்தின் தன்மையை அதிலே முளைத்த முளைகள் காட்டும். அதுபோலக் குலத்தின் தன்மையை அக்குலத்திலே பிறந்தாருடைய வாயிற்சொல் காட்டும். (9)

960. ஒருவன் தனது நலமுடைமையை வேண்டினானானால் நாணுடைமையை விரும்பக்கடவன். குலமுடைமையை வேண்டினால் யாவரிடத்தும் வணக்கமுடையவனாக வேண்டும். (10)

97- மானம்-அபிமானம்.

Honor.

[இனிமேல் குடிப்பிறந்தார்க்கு இத்தகைய குணங்கள் வேண்டுமென்று தொடங்கி முதலாவது மானத்தைச் சொல்லுகின்றார்.]

961 [illegible] குடிப்பிறப்பு [illegible] தாழ்வு [illegible] செய்யாமல், [illegible] சிறப்பு வருவதாயிருந்தாலும், அவற்றை விட [illegible]. (1)

962 புக[illegible] சிறக்கலை விரும்பு[illegible], [illegible] திக[illegible] [illegible] கொள்வாத [illegible] செய்யமாட்டார். (2)

963 [illegible] நிறைந்த செல்வ[illegible] [illegible] வேண்டும்; [illegible] [illegible] பணிவு [illegible] உயர்ச்சியில் [illegible]. (3)

964 [illegible] குடியுடைய உயர்ச்சி [illegible] வீழ்ந்த [illegible]. (4)

965 [illegible] உயர்ந்தவர், [illegible] [illegible] ஒருகுன்றிமணி [illegible]. (5)

966 [illegible] தன்னையவமதிப்பவர் [illegible] [illegible], இ[illegible] [illegible] [illegible] செய்வ [illegible] [illegible] செய்வது யாதோ? (6)

967 [illegible] இருப்பவர் பின்னே சென்று பொருள் [illegible] வாழ்க்கையைப் பார்க்கிலும், அது [illegible] சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

968 [illegible] தன் வலியழிய [illegible] [illegible] [illegible] பயனில்லாத [illegible] இறவாமைக்கு மருந்தாமோ? ( )

969 கவரிமா [illegible] [illegible] ஒரு மயிர் [illegible], [illegible] வாழாது. அ[illegible] [illegible] [illegible]. (9)

970 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] (10)

98-ஆம் அதிகாரம். பெருமை.
Greatness.

[அதாவது செய்தற்கு அருமையானவற்றைச் செய்தல், கர்வமில்லாமை, அயலார் குற்றஞ் சொல்லாமை என்பவை முதலாகிய குணங்களாலே பெரியோருடைய தன்மை.]

971. ஒருவனுக்கு ஒளி, பிறரால் செய்தற்கு அருமையானவைகளை, செய்வோமென்று நினைக்கின்ற மனவெழுச்சியின் மிகுதியே. இழிவுக்குக் காரணமாவது அச்செயல் ஒழிந்து உயிர் வாழ்க்கைகடவோமென்று நினைத்தலே. (1)

972. எல்லா மக்களுக்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒத்ததே யாயினும், செய்யுந் தொழில்களின் வேறுபாட்டால், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒத்திடாவாம். (2)

973. செய்தற்கு அரியவைகளைச் செய்யமாட்டாமல் சிறியராயினோர், உயர்ந்த இடமாம் பதவியின் மேல் இருந்தாராயினும், பெரியாராகார். அவை செய்து பெரியாராயினோர், தாழ்ந்த நிலத்தில் இருந்தாராயினும், சிறியாராகார். (3)

974. இருவிதப்படாத மனத்தையுடைய பெண்கள் கற்பினின்றும் தவறாது தம்மைத் தாங்களே காத்துக்கொண்டு நடக்கும் விதம்போல, பெருமைக் குணமும் ஒருவன் காப்பானாயின், தவறக் கடந்து ஒழுகும் ஒழுக்கத்தில் வழுவாமல் தன்னைக் காத்துக் கொண்டு நடப்பானாயின், அவனிடத்துண்டாம். (4)

975. செய்தற்கரியவைகளைச் செய்து பெருமையுடையவராயினோர், தாம் வறியராகிய விடத்தும் பிறராலே செய்தற்கு அரியவையாகிய செயல்களை விடாமல் செய்யும் விதத்திலே முறையே பெறச் செய்தலை வல்லவராவார். (5)

976. அப்படிப்பட்டவராகிய பெரியாரை வழிபட்டு அவரியல்பினை நாம் பெறுவோமென்னும் கருத்து மற்றைச் சிறியாருடைய மனத்திலே உண்டாகாது. (6)

977. தனக்கு ஒத்திருக்கும் பெரியாரிடத்து அடங்கிய [illegible] சிறப்புகளானவை, தனக்கு ஒத்திராத [illegible], அடங்கியிருத்தலை ஒழித்து [illegible] பதாம். (7)

978. பெருமையுடையவர் அச்சிறப்புண்டாகிய காலத்திலும் கர்வமில்லாமல் அடங்கி நடப்பார். மற்றைச் சிறுமையுடையவர் அச்சிறப்பு இல்லாத காலத்திலும் தம்மைப் புகழ்ந்து சிறப்பிப்பர். (8)

979. பெருமைக்குணமாவது காரணம் உண்டாகிய இடத்தும் அது இயல்பாதல் நோக்கிக் கர்வமில்லாதிருத்தலே. சிறுமைக்குணமாவது காரணம் இல்லாத இடத்தும் அதனை மேற்கொண்டு கர்வத்தின் முடிவிலே நின்றுவிடுதலே. (9)

980. பெருமையுடையார் பிறர் மானத்தையே சொல்லி அவமானத்தை மறைப்பார். மற்றைச் சிறுமையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே சொல்லிவிடுவார். (10)

99-ஆம் அதி-சான்றாண்மை.

Perfect Excellence.

[யாவது பல குணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுந் தன்மை.]

981. நமக்கு இது தகுவதென்று அறிந்து பலகுணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுதல் தன்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு, நல்ல குணங்களெல்லாம் இயல்பாயிருக்கும் என்று நூலோர் சொல்லுவார். (1)

982. சான்றோர்க்கு நலமாவது குணங்களாலாகிய நலமே. அது நீங்கிய குலப்பிறப்பு, கல்வி, கேள்வி முதலிய உறுப்புக்களாலாகிய நலம் ஒரு நலத்திலும் உள்ளது அல்ல. (2)

983. உறவினர்மேல் அல்லாமல் பிறர்மேலும் உண்டாகிய அன்பும், பழிபாவங்களில் நாணலும், யாவரிடத்திலும் உபகாரம் செய்தலும், பகைவர்மேல் கண்ணோட்டமும், எவ்விடத்திலும் மெய் சொல்லுதலும், என்ற சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்தாம். (3)

984. சற்கருமங்களை வேண்டுமானாலும், தவம் ஓருயிரையும் கொல்லாத நற்குணத்தினிடத்தாம். அதுபோலச் சால்பாவது பிறகுணங்களை வேண்டுமானாலும், பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தினிடத்தாம். (4)

985. ஒருகாரியத்தைச் செய்து முடிப்பவருடைய வலிமையாவது, அதற்குத் துணையானவரைத் தாழ்ந்து சேர்த்துக்கொள்ளுதல். சான்றோர் தமது பகைவரைப் பகைமை ஒழிக்கும் கருவியும் அதுவாம். (5)

986. சால்பாகிய பொன்னின் அளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனில், அது தம்மைப்பார்க்கிலும் உயர்ந்தாரிடத்துக்கொள்ளும் தோல்வியை இழிந்தவரிடத்தும் கொள்ளுதலாம். (6)

987. சால்புடையவர் தமக்குத் துன்பம் கொடுத்தவர்களுக்கும், இன்பம் தருபவைகளைச் செய்யாராகில், அச்சால்பு என்ன பிரயோஜனத்தையுடையது? (7)

988. சால்பென்று சொல்லப்படும் வலிமை உண்டாகப் பெற்றால், ஒருவனுக்குத் தரித்திரம் இழிவாகமாட்டாது. (8)

989. சால்புடைமையாகிய கடலுக்குக் கரையென்று சொல்லப்படுவார், மற்றைக் கடலும் கரையுள் நில்லாது காலம் வேறுபட்டாலும், தாம் வேறுபடார். (9)

990. பலகுணங்களாலும் நிறைந்தவர் சால்புடைய சான்றோர் குறைவாரானால், மற்றைப் பெரிய பூமிதானும் தன்பாரத்தைத் தாங்காதாய் முடியும். (10)

100-ஆம் அதி-பண்புடைமை.

(Courtesy)

[அதாவது பெருமை சான்றாண்மைகளில் வழுவாது யாரிடத்தும் எல்லாரியல்புகளையும் தெரிந்து அவற்றிற்கு ஏற்ப நடத்தலாம். பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் என்று கலித்தொகை கூறுகிறது. அதாவது மக்களுக்குப் பண்பு என்று சொல்லப்படுவது உலகத்தோடு அறிந்து நடத்தலாம்.]

991. ஒருவர் யாவரிடத்தும் எளியசமயத்தை உடையவராய் இருப்பாரானால், அரிதாகிய பண்புடைமை என்று சொல்லப்படுகின்ற நன்மார்க்கத்தை அடைதல் எளிது என்று நூலோர் சொல்லுவர். (1)

992. ஒருவனுக்குப் பண்புடைமையென்று உலகத்தார் சொல்லும் நல்வழியாவது, பிறர்மேல் அன்புடையராய் இருக்

தயாம், உலகத்தோடு அமைந்த குடியிலே பிறத்தலுமாகிய இவ்விரண்டுமேயாம். (2)

993. நெருங்கத்தகாத உடம்பால் ஒத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடு ஒப்பாகாமையால், அது பொருந்துவது அல்ல. இனிப் பொருந்துவதாகிய ஒப்பாவது நெருங்கத்தக்க பண்பால் ஒத்தலே. (3)

994. நீதியையும் தருமத்தையும் விரும்புதலால் பிறர்க்கும் தமக்கும் பயனைப்படுதலுடையவரது பண்பினை உலகத்தார் கொண்டாடுகின்றனர். (4)

995. தன்னை இகழ்தல் விளையாட்டினிடத்தும் துன்பந் தருவதாம். ஆதலால் பிறர் இயல்பறிந்து நடப்பவர் மாட்டும் பகையுண்டானவிடத்தும் அது உண்டாகாமல் இனிமையாகிய பண்புகளே உண்டாவனவாம். (5)

996. பண்புடையாரிடத்தே படுதலால் உலகநடை எந்நாளும் உளதாய் வருகின்றது. அங்கே படுதல் இல்லையானால், உலகவொழுக்கம் மண்ணிலே புகுந்து மாய்ந்து போவதாம். (6)

997. நன்மக்களுக்கே உரிய பண்பில்லாதவர், அரத்தின் கூர்மைபோலும் கூர்மையையுடையராய் இருந்தாலும், ஓரறிவினதாகிய மரத்தினை ஒப்பர். (7)

998. தம்மோடு நட்பினைச்செய்யாது பகைமையைச்செய்து நடப்பவரிடத்தும் தாம் பண்புடையராய் நடவாமை அறிவுடையார்க்கு இழுக்காம். (8)

999. பண்பு இல்லாமையால் ஒருவரோடும் கலந்து உள்மகிழ்தல் இல்லாதவர்க்கு மிகவும் பெரிய பூமியானது, இருளில்லாத பகல் பொழுதிலும் இருளினிடத்தே கிடந்ததாம். (9)

1000. பண்பில்லாதவன் முன் நல்வினையால் அடைந்த பெரிய செல்வம், அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல் நல்ல பசுவின் பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால், இனியசுவையுடையதாகாது கெட்டாற் போலும். (10)

101-ஆம்-அதி-நன்றியில் செல்வம்.

Unprofitable Wealth.

[அதாவது சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன் படுதலில்லாத செல்வத்தின் இயல்பாம்.]

1001. தன் வீடு முழுவதும் நிறைதற்குக் காரணமாகிய பெரிய பொருளைச் சம்பாதித்து வைத்து, அதை உலோபத்தால் அநுபவியாதவன் செத்தவனே யாவன்; அதனிடத்து அவனால் செயக்கிடந்ததோர் உரிமை இல்லாததினால், செத்தவனுக்கு ஒப்பாவான். (1)

1002. பொருளினால் எல்லாம் உண்டாகும், அப்பொருளினாலே எல்லாம் உண்டாகும் என்றறிந்து அதனைச் சம்பாதித்து பின் பிறர்க்குக் கொடாது இறுகப்பற்றிச் செய்யும் மயக்கத்தினாலே நிறைந்த கொடிய பேய்ப்பிறப்பு ஒருவனுக்கு உண்டாம். ()

1003. தாம் பிறரைக் காட்டிலும் மிகுதியாகச் சம்பாதிப்போமென்று பொருளைச் சம்பாதிப்பதைப் பாக்கியமாக விரும்பி, அப்பொருளின் பயனாகிய புகழை விரும்பாத மக்களது பிறப்பு பூமிக்குப் பாரமாம். (3)

1004. ஒரு பொருளும் கொடுக்காமையால், ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பின் இங்கே ஒழிந்து நிற்பதாக எதனை நினைப்பானோ. (4)

1005. பிறர்க்குக் கொடுத்தலும் தான் அநுபவித்தலும் ஆகிய இரண்டு செய்கையும் இல்லாதார்க்குப் பலவாக அடுக்கிய கோடி பொருள் உண்டாயினும், அது இல்லை. (5)

1006. தான் அநுபவியாதவனாய், அதனையன்றியும் தகுதியுடையார்க்கு அவர் வேண்டிய பொருள் ஒன்றைக் கொடுத்தல் தன்மை இல்லாதவனை, அடைந்திருக்கும் பெருஞ்செல்வம் இடும்பையுடையதாகிய பெரிய செல்வத்திற்கு ஒரு நோயாம். (6)

1007. ஒரு பொருளும் இல்லாதவர்க்கு அவர் வேண்டியது ஒரு பொருளைக் கொடாதவனுடைய செல்வம், மிகுந்த அழகைப் பெண்களுக்குள்ளே சிறந்த நலத்தினைப் பெற்ற ஒருத்தி கொள்வார் இல்லாமையினாலே, கணவன் இல்லாமல் தனியளாய் மூத்த தன்மையை உடையது. (7)

1008. தரித்திரர்க்கு ஈயாது இருந்தும், ஒன்றும் கொடாமையால், ஒருவராலும் விரும்பப்படாதவனது செல்வம், ஊர் நடுவில் நின்ற நச்சுமரம் பழுத்ததை ஒக்கும். (8)

1009. ஒருவன் நெடுங்காலம் இருக்கப் பொருள் சேர்க்கச் சுற்றத்தாரிடத்தும், நட்பினிடத்தும் அன்பு பொருந்தவிட்டு, மேலானவைகளை அநுபவியாமல் தன்னை வருத்தி வறியவருக்குக் கொடுத்தல் முதலாகிய தருமத்தை நினையாமலும் செய்யா

மல் சம்பாதித்த பிரகாசம் பொருந்திய பொருளைக் கொண்டு போய்ப் பயன் அநுபவிப்பர் அன்னியரே. (9)

1010. புகழுடைத்தாகிய செல்வத்தை உடையவராதாகிற் குங்காலம் சிறிதாய வறுமை, உலகத்தையெல்லாம் நிலை நிறுத்துகிற மேகம் வறுமை மிகுந்தது போல்வது ஓர் இயல்பினை உடையது. சுருங்கச்சொல்லின், கொடையாளர் கொடுத்தலினால் தரித்திரம் அடைந்த விடத்தும் விரைவில் அது நீங்கிப் பிறர்க்குப பயன்படுவார். 10

102-ஆம் - அதி - நாண் உடைமை.

Shame.

[அதாவது முன்சொல்லப்பட்டசால்பு, (பல குணங்களால் நிறைதல்) பண்பு, (எல்லார் இயல்புகளும் தெரிந்து ஒத்து நடத்தல்) முதலிய குணங்களால் உயர்ந்தோர் தமக்குப்பொருந்தாத கருமங்களில் நாணுதல் உடையராம் தன்மை]

1011. நன்மக்களுடைய நாணுவது இழிந்த கருமம் காரணமாக நாணுதலாம். அது அல்லாமல் மன மொழி மெய்களது ஒடுக்கத்தால் வருவனவோ என்றால், அவை அழகிய நெற்றியை யுடைய குலமகளிரது நாணங்கள் "நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை" என்று நக்கீரனாரும், "நாணுவது செயத்தகாதன வற்றின் கண் உள்ள மொடுங்குதல்" என்று நச்சினார்க்கினியாரும் கூறியுள்ளார். (1)

1012. உண்டியும், ஆடையும், அவை யொழிந்தவைகளும் மக்கள் உயிர்களுக்கெல்லாம் பொதுவாம். நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணுடைமையே. (2)

1013. எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாவாம். அது போல், நற்குணங்களில் நிறைவானது நாண் என்னும் நற்குணத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாது. (8)

1014. சான்றோர்க்கு நாண முடைமை ஆபரணமாம். அது இல்லையானால், அவரது மேம்பாடு நடை கண்டவர்க்கு நோயாம். (4)

1015. [illegible]

யையும் சமமாக மதித்து காணுவாரை, உலகத்தார் நாணத்திற் குடியிருப்பிட,மென்று சொல்லுவார். (5

1016. உயர்ந்தவர் தமக்குக் காப்பாக நாணத்தைக் கொள்ளுவது அல்லாமல், பெரிய பூமியைக் கொள்ள விரும்பார். (6)

1017. நாணின் சிறப்பை அறிந்து அதைவிடாது நடப்பவர், அதனாலும் உயிரும் தம்முள் மாறுபட்டு விட்டது, நாணை நிலையாமற் பொருட்டு உயிரை நீக்குவார், உயிர் நிலையாமற் பொருட்டு நாணினை நீக்கார். (7)

1018. கேட்டவரும், கண்டவரும், நாணத்தக்கபழியை, ஒருவன் தான் நாணாது செய்வானாகில், அது அவனைத் தருமம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினையுடையதாம். (8)

1019 ஒருவனுக்கு ஒழுக்கம் வழுவுமானால், அது அவன் குடிப்பிறப்பு ஒன்றையும் கெடுக்கும், நாணிலாமை ஒருவனிடத்து உண்டாகுமானால், அது அவனது நன்மைகளெல்லாவற்றையும் முதலறக் கெடுக்கும். (9)

1020. தம்மனத்தில் நாணத்தை இல்லாத மக்கள், உயிருடையவர் போல சஞ்சரிக்கின்ற சஞ்சாரம், மரத்தாற் செய்த பாவை சூத்திரக்கயிற்றினால் ஆகிய தனது சஞ்சாரத்தால் உயிருடையதாக மயக்குவது போலாம். (10)

103-ம் அதி- குடிசெயல்வகை.

The way of Maintaining the Family.

[அதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச்செய்தலின் விதம்]

1021. தன் குடி செய்தற்பொருட்டுத் தொடங்கிய காரியம் முடியுமளவும் [illegible] என்னும் முயற்சி [illegible] ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை வேறொன்றும் இல்லை. (1)

1022. முயற்சியும், நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய ஓய்வில்லாத தொழிலைச் செய்வதால், ஒருவன் குடி உயரும். (2)

1023. என் குடியை உயரச் செய்வேனென்று கொ

யை அயர்ந்த எந்தக்காலத்தில் முயலுகிற ஒருவனுக்குத் தெய்வமானது ஆடையை இறுக உடுத்துக்கொண்டு தான் முன்னே உதவிசெய்யும். (3)

1024. தம் குடி உயர்வதற்கு ஆகும் தொழிலை விரைந்து முயற்சி செய்பவர்க்கு, அத்தொழில் முடிக்கும் விதம் அவர் யோசிக்காமலே தானே முடிவு பெறும். (4)

1025. அறநீதிகளுக்கு விரோதமான செயல்களைச் செய்யாமல் தன் குடியை உயரச்செய்து வாழ்வானை உலகத்தார் அவனுக்குச் சுற்றத்தாராக வேண்டுமென்று சூழ்வர். (5)

1026. ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்திச் சொல்லப்படுவது எதுவென்றால், அவன் தான் பிறந்த குடியை ஆளும் தன்மையைத் தனக்கு உளதாக்கிக் கொள்ளுதலே. (6)

1027. போர்செய்யும் இடத்தில் சென்றவர் பலராயினும் போர் காரியத்தை சூரர் மேலேற்றல்போலக் குடியில் பிறந்தவர் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அது வல்லவர் மேலத்தேயாம். (7)

1028. தம்முடைய குடியை உயரச்செய்வார் அச்செயலை மேற்கொண்டு காலத்தை நோக்கிச் சோம்பல் செய்தொழிவாராயினும், மானத்தையும் எண்ணுவாராயின், குடிகெடும். ஆதலால் குடியை உயரச்செய்வார்க்குக் காலநியதி இல்லை. (8)

1029. அத்தியாத்துமம், அதிபூதம், அதிதைவம் என்னும் மூவகைத் துன்பமும் அடையும் தன்மையதான தன் குடியை அத்துன்பங்கள் யாவும் அடையாமல் காக்க முயல்பவனது உடம்பு துன்பத்திற்கே பாத்திரமாம். அவ்வளவோ! அது இன்பத்திற்கு ஆகுதல் இல்லையோ! (9)

1030. தான் விழும்போது முட்டுக்கொடுத்துக் காக்கவல்ல நல்ல ஆண்மக்கள் பிறவாத குடியாகிய மரம், துன்பமாகிய கோடரி தாக்குதலால் முதலோடு வெட்டுப்பட்டு வீழ்ந்தொழிந்துவிடும். (10)

104-ஆம் அதிகாரம்-உழவு

Agriculture.

[அதாவது வேளாண்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை

வேளாளர்க்கு [illegible] தொழில் [illegible] 80ம் [illegible] வேளாண்மை [illegible], [illegible] விசேஷம். [illegible] — வேளாண் மாந்தர் [illegible] தொழில்களிலெல்லாம் உழுந் தொழிலே [illegible] [illegible] கூறியுள்ளார். இதுவும் இங்கு உரைத்தக்கது.

1031 [illegible] செய்கிறீர்கள், [illegible] வழிபட்டாயிருக்கிறது. ஆதலால் [illegible] அடைத்தும், [illegible] தொழில் [illegible]. (1)

1032. [illegible] செய்யப்பட்டாமல் [illegible] தொழில் [illegible] (2)

1033 [illegible] (3)

1034. [illegible] 10 [illegible] 11 [illegible] அறிக. (4)

1035. [illegible] (5)

1036. [illegible] (6)

1037. [illegible] அதிலிருந்து செய்த

பயிர், ஒருபிடியில் அடங்கிய எருவும் போடவேண்டாமல் நன்றாய்ப் பருத்து விளையும். (7)

1038. அந்தப்பயிர்க்கு அவ்வுழுதலினும் எருப்போடுதல் நல்லது. இவ்விரண்டுஞ் செய்து களையெடுத்தபின் அதனைக்காத்தல் நீர் பாய்ச்சலினும் நல்லது. உழுதல், எருப்போடுதல், களையெடுத்தல், நீர்பாய்ச்சல், காத்தல் என்னும் ஐந்தும் உழவர்க்கு வேண்டும். (8)

1039. அந்நிலத்துக்கு உரியவன் அதனிடத்துத் தினந்தோறும் போய்ப்பார்த்து வேண்டியவை செய்யாமல் சோம்பலாய் இருந்தால், அது அவன் மனைவி போல் தன்னுள்ளே வெறுத்துப் பின் அவனோடு பிணங்கிவிடும். (9)

1040. யாம் தரித்திரமுடையோம் என்று சொல்லிச் சோம்பலாய் இருப்பவனைக்கண்டால், நிலமகள் என்று உயர்த்திச் சொல்லப்படுகிற நல்லாள் தன்னுள்ளே சிரிப்பாள். (10)

105-ஆம்- அதி-நல்குரவு.

Poverty.

[அதாவது அனுபவிக்கப்படுவன எல்லாம் இல்லாமை.]

1041. ஒருவனுக்குத் தரித்திரத்தைப்போல் துன்பஞ்செய்வது யாதென்று கேட்டால், தரித்திரம்போலத் துன்பஞ்செய்வது தரித்திரமேயொழிய வேறொன்றுமில்லை. ‘வறுமைபோல இன்னாத வறுமையன்றி வேறில்லை.” என்று விநாயகபுராணம் சொல்வது இங்கு உணரத்தக்கது. (1)

1042. வறுமை என்று சொல்லப்படுவதாகிய ஒரு பாவி ஒருவனிடத்து வருங்கால், அவனுக்கு மறுமை இன்பமும் இம்மை இன்பமும் இல்லையாக வரும். (2)

1043. வறுமை என்று சொல்லப்படுகிற ஆசை, தன்னாலே பற்றப்பட்டவருடைய பழைய குடியாகிய வினையும் அதற்கேற்ற செல்வத்தினையும் ஒருமிக்கக் கெடுக்கும். மணிமேகலை பதினொன்றாவது பாத்திரம் பெற்ற காதை 76-79 வரிகள் “குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம் நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்” என்று கூறுவதை அறிக. (3)

1044. வறுமையானது அவமானஞ் செய்த [illegible] குடியிற் பிறந்தவர்கட்கும் அக்க அவமானச் சொல் பிறத்தற்குக் காரணமாகிய சோர்வை உண்டாக்கும். (4)

1045. நல்குரவு என்று சொல்லப்படும் துன்பமொன்றுள் பல துன்பங்களும் வந்து விளையும். (5)

1046. மெய்ந்நூற் பொருள்களை அறிந்து வறுமைப் பட்டோர் சொன்னாராயினும் அவர் சொல்லும் சொற்பொருள் [illegible] (6)

1047. [illegible] (7)

1048. [illegible] (8)

1049. [illegible] (9)

1050. [illegible] (10)

106-ஆம்-அதிகாரம்.—இரவு.

Mendicancy.

[இனிமானம் கெடாத இரத்தல் இரவாமையோடு ஒத்தலால், அதனையும் வீடு பெறுதற்கு உரிய செயல்களில் [illegible] இரவு கூறுகின்றார்.]

1051. வறுமைப் பட்டவர் இரத்தற்கு ஏற்புடையவரைக் கண்டால், அவரிடத்தே இரக்கக்கடவர். அவர் ஒளித்தாராகின் அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாகாது. (1)

1052. இரந்த பொருள்களை கொடுப்பாருடைய அறிவுடைமையால் தான் துன்பம் அடையாமல் வருமானால், ஒருவனுக்கு இரத்தல் தானும் இன்பத்திற்குக் காரணமாம். (2)

1053. மறைத்தல் இல்லாத நெஞ்சினையுடைய மானமறிவார் முன் நின்று, அவரிடத்திலே ஒரு பொருளை இரத்தலும் தரித்திரம் அடைந்தவர்க்கு ஓரழகை உடையதாம். (3)

1054. தமக்குள்ளது மறைத்தலைக் கனவிலும் அறியாதவரிடத்துப்போய் ஒரு பொருளை யாசித்தலும் வறியவர்க்குக் கொடுத்தலே போலும். (4)

1055. குறிப்பறிந்து உள்ளது ஒளிக்காமல் கொடுப்பவர் உலகத்திலே சிலர் இருப்பதினால் தான், உயிர் காத்தற்பொருட்டு மானமுடையார் யாசித்தலை மேற்கொண்டு நடக்கிறார்கள். (5)

1056. உள்ளதை ஒளித்தலாகிய நோய் இல்லாரைக் கண்டால் மானம் விடாது இரப்பவர்க்கு வறுமையால் வருந்துன்பங்களெல்லாம் ஒருசேரக்கெடும். (6)

1057. தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால் இரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே சந்தோஷிக்கும் தன்மையையுடையது. (7

1058. வறுமையடைந்து இரப்பார் இல்லையாயின் குளிர்ந்த இடத்தையுடைய பெரிய பூமியிலே உள்ளார் செலவு வரவுகள், உயிரில்லாத மரப்பாவை சூத்திரக் கயிற்றால் சென்று வந்தாற் போலும். (

1059. அவரிடத்துச் சென்று ஒரு பொருளை இரந்துகொள்ளுதலை விரும்புவார் இல்லாத விடத்து கொடுப்பவரிடத்திலே என்ன புகழுண்டாம்? ஒன்றுமில்லை. (

1060. கொடுப்பவனுக்குப் பொருள் உதவாத பொழுது இரப்பவன் இவன் எனக்குக் கொடுக்கின்றிலனே என்று கோபிக்காமல் இருக்கவேண்டும். பொருள் வேண்டிய பொழுது உதவாதென்பதற்கு வேறு சாக்ஷி வேண்டியதில்லை. வறுமையா தன் நேரிடு தானேயும் சாக்ஷியாதல் அமையும். (

107-ஆம்-அதி-இரவு அச்சம்.

Fear of Mendicity.

[அதாவது மானம்கெடவரும் இரத்தலுக்குப் பயப்படுதல்.]

1061. ஒருவன் தமக்குள்ளதை மறைக்காமல் இவர் வரப்பெறுவோமென்று மனமகிழ்ந்து கொடுக்கும் கண்போற் சிறந்தவரிடத்தும் இரவாமலே வறுமைப்படுதல் இரந்து செல்வமடைதலில் கோடி மடங்கு நல்லது. (1)

1062. இவ்வுலகத்தைப் படைத்தவன் இந்த வாழ்வார்க்கு முயற்சிசெய்து ஜீவனஞ்செய்தலை அல்லாமல் யாசித்தும் ஜீவனம் செய்தலை வேண்டி ஏற்படுத்தினானால், அக்கொடியோன் தானும் அவரைப்போல எங்கும் சுழன்று கெடக்கடவனாக! (2)

1063. வறுமையால் உண்டாகும் துன்பத்தை முயற்சிசெய்து நீக்கக்கடவோமென்று நினைக்கும் வல்லமை போல் வலிமையுடையதாகிய (வன்பாட்டுத்தன்மை) உடையது மற்றொன்றில்லை. (3)

1064. அனுபவிக்க வேண்டிய பொருள்கள் இல்லாமல் வறுமைப்பட்ட விடத்தும், பிறரிடத்துச் சென்று யாசித்தலை உடம்படாத நிறைவு எவ்வுலகமும், ஒரு சேரப் பொருந்தினும் கொள்ளாத பெருமையையுடையது. (4)

1065. யாசித்தல் இல்லாமல் முயற்சிசெய்து கொண்டு வந்தது தெளிந்த நீர் போலும் சமைத்த கூழேயாயினும், அதை உண்பதுபோல இன்பந்தருவதில்லை. (5)

1066. தண்ணீர் பெறாமல் இறக்கும் நிலைமையையுடைய சோர் பசுவைக் கண்டிருந்தும் நோக்கி, இதற்குத் தண்ணீர் கொடுத்தல் வேண்டுமென்று இரந்து சொல்லும் சொல்லைப்போல ஒருவன் நாவிற்கு அவமானம் வந்தது வேறொன்றில்லை. (6)

1067. இரப்பாரை எல்லாம் நான் இரவாமல் இருந்தேன் என்று சொல்லி, உமக்கு யாசிக்கவேண்டுமானால், தமக்குள்ளதை ஒளிப்பவரை யாசியாதிருங்கள் என்று சொல்லுதலே நல்லது. (7)

1068. வறுமை என்னும் கடலை, யாசகம் என்னும் தோணியால் கடப்போமென்று நினைத்தது, அத்தக்காவலற்ற தோணி

அதனிடத்தே ஓடுங்கால் ஒளித்தல் என்னும் வன்னிலத்தோடு தாக்குமானால் பிளந்துபோம். (8)

1069. பொருள் உள்ளவரிடம் அதில்லார் சென்று யாசித்து நிற்றலின் கொடுமையை நினைத்தால், எம்முள்ளம் கரைந்து உருகுகின்றது. இனி அந்த நிலையைக்கண்டிருந்தவர் இல்லையென்றலின் கொடுமையை நினைத்தால் அவ்வுருகுமளவுதானும் இல்லாமல் அழிந்துபோம். (9)

1070. ஒளிப்பவர் இல்லையென்று சொல்லியமாத்திரத்திலே உயிர் போகாநின்றது. இனிச்சொல்லுகின்ற அவ்வொளிப்போருக்கு உயிர் பின்னும் இருத்தலால், அப்பொழுது எங்கு புகுந்து ஒளித்து நிற்குமோ? (10)

108. ஆம்-அதி-கயமை.

Baseness.

[அதாவது கீழோராது தன்மை.]

1071. கீழோர், வடிவால் முழுதும் மக்களைப் போலிருப்பர். அவர் மக்களை ஒத்தாற்போன்ற ஒப்பு மக்கட்சாதி, கயச்சாதி என்னும் இரண்டுசாதியும் ஒழிந்த வேறு இரண்டு சாதியிடத்து யாம்கண்டதில்லை. (1)

1072. தமக்குறுதியானவைகளை அறிவாரைக் காட்டிலும், அவையறியாத கீழ்மக்கள் நன்மையுடையவராவார். அவர்போலத் தமக்குறுதியானவை காரணமாக நெஞ்சினிடத்துக் கவலையிலர். (2

1073. தேவரைப்போலத் தம்மை நிரம்பிப்பாரானால், கயவர் தாம் விரும்புமவைகளைச் செய்து நடத்தலால், தேவரும் கயவரும் ஒரு தன்மையராவார். (3

1074. கீழானவன், தன்னில் குறைந்த மனவடக்கமில்லாதவராய் நடப்பவரைக்கண்டால, அதிலே அவரைக்காட்டிலும் தாம் மேம்பட்டுத் தன் மிகுதி காட்டி இறுமாப்படைவான். (4

1075. கீழோராது ஆசாரம் கண்டது உண்டானால், அதற்குக் காரணம் அரசனால் துன்பம் வருமென்று அஞ்சும் அச்சமே. அது ஒழிந்தால் தம்மால் விரும்பப்படும் பொருள் அ

னால் உண்டாமாதலால், கீழ்மக்களிடத்து ஆசாரம் சிறிதுண்டா (5)
யிருக்கும்.

1076. தாம்கேட்ட இரகசியங்களை இடந்தோறும் தாங்
கொண்டுபோய் பிறருக்குச் சொல்லுதலால், கீழ்மக்கள் (6)
அறையப்படும் பறையை யொப்பர்.

1077. கீழ்மக்கள் தங்கன்னத்தை நெரிப்பதாக வளை
ந்த கையையுடையார் அல்லாதார்க்குத் தாமுண்டு பூசிய கை (7)
யைத் தெறிக்கவேண்டுமென்று இராதாரும தெறியார.

1078. மெலியார் சென்று தங்குறையைச்சொல்லிய அள
விலே சான்றோர் இரங்கிப்பயனைப்படுவார், மற்றக்கீழாயினோர்
கரும்புபோல வலியார் நையநெருக்கிய விடத்தே பிரயோஜ (8)
னப்படுவர்.

1079. கீழாயினோன் பிறர் செல்வத்தினால் பட்டுக்களை
யும் உடுத்தலையும பாலுடன் சோறு உண்ணுதலையும கண்
டானால அவைகளைப் பொறாமல் அவரிடத்துக் குற்றம இல (9)
லாதிருக்கக், குற்றமுண்டாக்க வல்லவனாவன.

1080. கீழோர் தம்மை யாதாகிலும ஒருதுன்பம் அடை
ந்தவிடத்து அதுவே சாரமாக விரைந்து தம்மைப பிறர்க்கு
விலை செய்தவற்குரிய வராவர். அது வன்றி வேறு எதற்கொழு (10)
லுக்கு உரியவராவர்?

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

திருக்குறள் வசனம் முற்றிற்று.

